

# ஞானச்சுடர்

ஆனி

2012



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குறள்வழி

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமம் துடைத்தவர் நட்பு.**

**பொருள் :** நல்லவர், தமது துன்பத்தை நீக்கியவரது நட்பை வினைப் பயனால் தொடர்ந்து வருகின்ற ஏழுவகைப் பிறப்பிலும் நினைப்பர். (107)

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.**

**பொருள் :** ஒருவன் செய்த நன்மையை ஒருபோதும் மறத்தலாகாது; அவன் செய்த தீமையை உடனே மறந்துவிடுதல் நல்லது. (108)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை
## தியானமாலை
## கலிவிருத்தம்

**நுண்ணிடை யவளொடு நுடங்கும் பித்தனை**
**விண்ணிடை விடைமேல் விளங்கு மொருவனைக்**
**கண்ணிடைக் கண்டு களித்த மானிடர்**
**மண்ணிடை வராரென வோதும் மறையே** 19

**நூதன விவேகியர் நுழைத்துங் காண்கிலர்**
**சீதள கமலச் செல்வனுங் காண்கிலர்**
**வேத வாகமம் தாமும் விளம்பில**
**சாதனை யுள்ள சத்துக்கள் காண்பரே** 20

**நெற்றி நாட்டத்தர் நிமிர்புன் சடையர்**
**பெற்றமொன் றேறுவர் பேயுட னாடுவர்**
**கற்றைவார் குழலுமை காட்சிக் கெளியர்**
**விற்றூண் ஒன்றில்லா விமல ரிவரே** 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு- 2 சுடர்- 174

2012 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கதிர்காமக் கரை..... | கு. சிவபாலராஜா | 01 - 06 |
| தீயாரோடு இணங்கி.... | நா. நல்லதம்பி | 07- 09 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 10 -13 |
| ஊனுடம்பு ஆலயம் | கு. சோமசுந்தரம் | 14- 17 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 18- 20 |
| மகா மந்திரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 21- 23 |
| இந்து சமய.... | கு. கோபிராஜ் | 24- 25 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 26- 27 |
| மரணம்- அப்புறம் | ஜக்கி வாசுதேவ் | 28- 29 |
| இறைவனை எங்கே... | செல்வி பா. வேலுப்பிள்ளை | 30 -32 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 33 -35 |
| தனிப்பெருந் தமிழ்த்.... | க. நாகேஸ்வரன் | 36 -38 |
| சிறுவர் கதைகள் | - | 39 -40 |
| சமயமும் மனித.... | திருமதி ப. நடராஜா | 41 -42 |
| ஆயிரத்தில் ஒருவர் | முருகவே பரமநாதன் | 43 -45 |
| நித்திய அன்னப்பணி | - | 46 -47 |
| வருடாந்த வைகாசிப்.... | - | 48 -49 |
| சைவ சமய வினா விடை | ஆறுமுகநாவலர் | 50 -51 |
| சைவத் திருக்கோவிற்..... | கா.கைலாசநாதக்குருக்கள் | 52 -53 |
| சுவாமி விவேகானந்தர்.... | ஆ. மகேசு | 54 -56 |
| தமிழகத் திருக்கோயில்..... | வல்வையூர் அப்பாண்ணா | 57 -60 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

வைகாசிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு சி. சிவபாலசிங்கம் (கிராம உத்தியோகத்தர்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது ஆரம்ப உரையில், ஆச்சிரமமானது பல்வேறு இடர்பாடுகளின் மத்தியிலும் "ஞானச்சுடர்" எனும் ஞான பொக்கிஷத்தை வெளியிடுவதில் பின் நிற்காது மாதந்தோறும் பிரகாசிக்க வைப்பதனை நாம் அனைவரும் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

அடுத்து தனது உரையில் ஆச்சிரமமானது தினமும் வரும் அடியார்களின் வயிற்றுப்பசியைப் போக்குவதற்கென அன்னப்பணியை வழங்கி வருகின்றது என்று கூறினார். தொடர்ந்து அவர் தனது உரையில் நோயாளிகளுக்கென வைத்தியசேவை (வாரத்தில் இருநாட்கள்) நடைபெறுகின்றது என்று கூறினார்.

மேலும், ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் சேவைகள், பணிகள் யாவும் திறம்பட வளர்ச்சியடைந்து வறியவர்களின் துன்பங்களை என்றென்றும் போக்கவேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:**

173ஆவது ஞானச்சுடர் மலருககான மதிப்பீட்டுரையை திரு துரை. கணேசமூர்த்தி ஆசிரியர் (யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர்கள் தனது ஆரம்ப உரையில் ஞானச்சுடர் எனும் மலரை ஆச்சிரமமானது வெளியிட்டு அடியார்களின் அறிவுப் பசியைப் போக்குகின்றது. அத்தோடு இச்சுடரை புத்தகசாலைகளில்கூட பெற்றுக்கொள்ள முடியாத தன்மையைப் பெற்றுள்ளதோடு, அதன் விலை குறைவு, தரம் மிக்க நூலாகவும், ஆச்சிரமத்தில் மட்டும் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மதிப்பைக் கொண்டுள்ளது.

தொடர்ந்து தனது உரையில், ஞானச்சுடர் மலரானது பெரியோர் முதல் சிறியோர்வரை அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது. இச்சுடர் அழகான அட்டைப் படத்துடனும், இலகுவான வசன அமைப்புடனும், நிறைந்த கருத்துக்களுடனும் காணப்படுகின்றது என்று கூறினார்.

அவர் மேலும் தனது உரையில், இச்சுடரில் இடம்பெறும் ஆக்கங்களில் உள்ள அறக்கருத்துக்களை மனித சமுதாயம் பின்பற்றினால் வாழ்க்கையில் முன்னேற்றப் பாதையை அடையலாம் என்று கூறினார்.

தொடர்ந்து இச்சுடரை வாசிப்பவர்களின் மனதில், மகிழ்ச்சி தோன்றுவதோடு வாழ்க்கையில் நிம்மதியை அடையலாம் என்று கூறி தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நமது மனமானது எப்பொழுதும் எதையோ நினைத்தபடியே இருக்கும். அப்படி இருக்கும் காலங்களில் நல்லவற்றையே எப்போதும் நினைக்க வேண்டும். நினைத்ததைச் செயலாற்ற வேண்டும். நல்ல நினைவு இல்லையெனில் எமது வாழ்வு சிதைந்துவிடும். தனக்கு உரியவற்றையே தான் அனுபவிக்கவேண்டும். தன் உடமை அல்லாதனவற்றை மனத்தினால்கூட நினைக்கக்கூடாது.

நினைவு எப்பொழுதும் இறைவன்மீது இருந்தால் துன்பமேயில்லை. வேறு நினைவிற்கே இடமில்லை. சிந்தனை முழுவதும் சிவன்பால் வைத்தவருக்கு தாம் அடிமை என்பார் சுந்தரர். எமது இன்றைய துன்பங்களுக்குச் சிந்தனை மாறுபாடே காரணம். இறைவழிபாடு, இறைசிந்தனை இவற்றிற்கு எமக்கு நேரமில்லை என்று நாள் முழுவதும் ஏதோ செய்கிறோம். தினமும் சில நிமிடநேரமாவது இறைவனை நினைத்து வழிபட வேண்டும். ஆலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்ற வேண்டும்.

நாம் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கோயில்களுக்குச் செல்வதாலும் ஆர்வத்துடன் வணங்குவதாலும் இறைவனைக் காணமுடியாது. ஆலயச் சூழலில் உள்ள ஏழை, எளிய, வறுமை, நோய் முதலிய பிணிகளால் பீடித்துள்ள மக்களைப் பார்த்தும் பாராததும்போல் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றோம். ஆலயங்களில் நாம் செய்யும் எதுவும் மக்களை சென்றடைவதில்லை. எனவே நலிவுற்றவர்க்கு உதவுவதே சைவசமயம் புகட்டும் பாடமாகும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் வாழ்வுடன் இணைந்து மானிட சமுதாயம் உய்யும் வண்ணம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று நினைக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று தனக்கு மட்டும் வேண்டாது நாட்டில் இடம்பெற்றுவரும் சகல பாதிப்புக்களிலிருந்தும் எல்லாவிதமான இடர்களையும் களையும் வண்ணம் இறைவனை வேண்டுதல் செய்ய வேண்டும்.

நமது சமயத்தில் அன்றாடம் சமூகப் பணிகள், சமயப் பணிகள் செய்யுமாறு வலியுறுத்தப் படுகிறது. இவ்விதமாக சமய, சமூகப் பணிகளை ஆற்றும்பொழுது நாம் ஒடுங்கிய மனப்பான்மையிலிருந்து விலகி பரந்த மனப்பான்மையுள் உள்வாங்கப் படுகிறோம். "சமயம் வெறும் வயிற்றிற்கு உரியதல்ல" என்று இராமகிருஸ்ண பரமஹம்சரும், "கடவுளை அடைய சிறந்த வழி மனிதருக்கு சேவை செய்வதே" என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பதன் கருத்தினை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக அமைவது மனம்தான். மனதுமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை. அவ்வகையில் எமது மனம் நல்ல நினைவோடு இருக்குமானால் எல்லோரும் எல்லாமும் பெறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான், உலகமெல்லாம் அமைதியுற ஆடுகின்றான்



ஆடுகின்றான் செல்வச் சந்நிதியில்- முருகன்
ஆனந்த மயமாக ஆடுகின்றான்
தேடுகின்றான் தேடும் அடியார்களை- அவர்
சிந்தனையி லேநின்றே ஆடுகின்றான்
கண்ணுதலாம் தந்தை இடக்கால் தூக்கியாடதானும்
கையேந்தி வேல் தூக்கி ஆடுகின்றான்
மண்மீதில் தொண்டைமா னாற்றுாரிலே- சந்நிதி
வலமாக விளையாடி ஆடுகின்றான்
பூதங்கள் ஐந்துமே ஆட ஆட- உலகில்
பூமியொடு சந்திர சூரியர் ஆட ஆட
வேதங்கள் பாடி, அந்தணர்கள் ஆட அடியார்
வினைகளெல்லாம் அகல ஆடுகின்றான்
வான்மழை போல் கருணை மழை பொழிந்து- இந்த
வையகம் சீராக நடப்பதற்கே
தான் கொண்ட சிலம்பு தண்டை தான் தூக்கியே- ஐயன்
தாம் தீமென்று அடியெடுத்து ஆடுகின்றான்
மங்கல மேளதாளம் பொழிந்து ஆர்த்திட- அடியார்
மாபெரிய திருப்புகழைப் பாடி யார்த்திட
சங்கினோ கோயில் மணி ஆடி ஒலித்திட- முருகன்
தரணியெல்லாம் நன்றே வாழ ஆடுகின்றான்
சிந்தனைக்கு மெட்டாத சந்நிதி முருகன்- உலகில்
செம்மனத்தார் நன்மனமாய்ச் சிறந்து வாழவும்
தங்கமான ஆச்சிரமம் அன்னம் பாலித்து- ஞானச்சுடர்
தனிமலரராய உலகில் வர ஆடுகின்றான்

(ஆடு)

முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(இராமலிங்கம் வீதி, உடுவில்)

**த. ஜெகரெத்தினம்**
(விஜிதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

**கந்தையா ஏகாம்பரம்**
(புறூடிலேன், அரியாலை)

**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**செல்வி S. ஜடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**அ. கணேசமூர்த்தி**
(உரும்பராய் வடக்கு, உரும்பராய்)

**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**திருமதி செ. தவமணி**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவர் / செயலாளர்**

(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

**பா. பிரதீபன்**

(கும்பளாவளை, அளவெட்டி)

**ஆ. ஜெயக்குமாரன்**

(கப்பூது, கரவெட்டி)

**உரிமையாளர்**

(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**கு. சோதிராசா**

(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)

**த. கருணாகரன்**

(கரவெட்டி கிழக்கு, கரவெட்டி)

**உரிமையாளர்**

(பேபி போட்டோ, கந்தர்மடம்)

**ப. இராசலிங்கம்**

(செட்டியமடம், வட்டுக்கோட்டை)

**மு. வைகுந்தவாசன்**

(இலங்கை வங்கி, அச்சுவேலி)

**S.விக்னேஸ்வரராசா**

(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)

**சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்**

(வடமராட்சி கணிதக்கல்வி மூலவள நிலையம், கரணவாய்)

**மு. இராசேந்திரா**

(தும்பளை, பருத்தித்துறை)

**பொ. வெங்கடேஸ்வரன்**

(நகரசபை, பருத்தித்துறை)

**வ. பாலசிங்கம்**

(கிராம சேவையாளர், கரணவாய்)

**ம. ஸ்ரீஸ்கந்தராசா**

(சிறுப்பிட்டி, நீர்வேலி)

**உரிமையாளர்**

(வேலழகன் இரும்புக்களஞ்சியம, சுன்னாகம்)

**இ. சரவணபவன்**

(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உரிமையாளர்**
(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)
**கோ. யோகலிங்கம்**
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
**சி. நவரெத்தினம்**
(துவாரகை, கரணவாய்)
**திருமதி அ. குணநாயகம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**ப. சிவராசா**
(தூதாவளை, கரணவாய்)
**மார்க்கண்டு கருணாநிதி**
(நடராசா புடவைக்கடை, அச்சுவேலி)
**S. குணராசா**
(தாளையடிலேன், திருநெல்வேலி)
**உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
**திருமதி கற்பகமலர் இரத்தினசிங்கம்**
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
**பொ. பாஸ்கரன் J.P**
(சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை)
**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
**இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**L.S ஜெகநாதன்**
(நாதஸ்வர வித்துவான், உடுப்பிட்டி)
**க. ஆனந்தராசா**
(வதிரி, கரவெட்டி)
**இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
**சி. துரைராசா**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சு. சிவனேசன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**செல்லத்துரை தங்கராசா**
(அன்னை இல்லம், உரும்பராய்)
**வே. கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**திருமதி இராசரத்தினம் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, அல்வாய்)
**திருமதி T. நடராஜா**
(சந்தனத்தரை, உடுப்பிட்டி)
**திருமதி சிதம்பரநாதன் சரஸ்வதி**
(குமுளடி, அல்வாய்)
**சி. ஆனந்தராசா**
(ஆலடி, பொலிகண்டி)
**சி. சிறீகாந்தன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**ஆ. சோமசுந்தரம்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**நடராசா செவ்வேள்**
(தணிகை, நெல்லியடி)
**க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**நா. வடிவேஸ்வரன்**
(தும்பளை, பருத்தித்துறை)
**சு. கிருபானந்தன்**
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
**ஆ. சிவராசா**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**செ.மகேந்திரவர்ணன்**
(கற்பகப் பிள்ளையார் கோவில்லேன், உரும்பராய்)
**K.T. சிவராசா**
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
**ச.சிவனேசன்**
(கேணியடி, திருநெல்வேலி)
**திருமதி அ. வினிதா**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமக் கரை யாத்திரை போவோம் வாரீர்

திரு கு. சிவபாலராஜா அவர்கள்

அமைந்திடும் அவ்வேளை தன்னில்
ஆச்சியரும் ஈது சொல்வார்
உறைந்திடல் காண் சோழ நகர்
உற்று வந்தேன் கதிர்காமம்



இடைச் சிறுவர்கள் நீர் யார் என வினவியபோது வெள்ளைத் துகில் தரித்த அக்கிழவி பெரும் அதிசயத்துடன் சிறுவர்களுக்குக் கூறிய இவ் வசனங்கள் இன்று வரை தெய்வீக வாக்காகக் கொள்ளப்பட்டு முல்லைத்தீவு- வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் திருத்தலத்தில் பேணப்பட்டு வருகிறது. நான் சோழ நகரிலிருந்து வந்து, கதிர்காமம் சென்று வருகின்றேன் என உரைத்த வசனங்கள், இன்றுவரை கதிர்காமம் கரை யாத்திரை செல்வோர் இத்தலத்திலிருந்துதான் தமது பயணத்தை ஆரம்பிப்பது வழமையாக உள்ளது. கதிர்காமம் கரை யாத்திரை செல்வது என்பது வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்டால்த்தான் அது கரை யாத்திரை என்னும் புனித யாத்திரைப் பட்டியலில் அடங்கும். ஆயின் பல ஊர்களிலிருந்தும் இன்று இந்த யாத்திரை மேற்கொள்ளப்படுகிறது. கண்ணகை அம்மன் (வற்றாப்பளை) தம்முடன் கூடவே வருவதாக யாத்திரீகர்கள் நம்புகின்றனர். அம்மன் வழித் துணையாக வந்து தமது யாத்திரைக் களைப்பைப் போக்கி அருள்கிறாள். திக்குத் தெரியாத காட்டில் அம்மன் வழிகாட்டுகிறாள்.

ஆயிரம் கண்ணுடையாள் வற்றாப்பளை கண்ணகை அம்பாள் கோயில் வருடாந்த பொங்கல் தினம் வைகாசி விசாகம் கூடிய பூரணையன்று ஒரு திங்கட்கிழமை நடைபெறுவது வழக்கம். திங்களன்று பொங்கல் மடை பரவி வழிபட்ட அடியார்கள் கூட்டம், மறுநாள் காலை செவ்வாய்க்கிழமை காலை ஏழு மணியளவில், கோவில் வாசலில் கூடி வழிபடுகின்றனர். அரோஹரா ஒலி விண்ணைத் தொடுகிறது. ஆண்களும் பெண்களுமாக யாத்திரை அடியார்கள் கூடி நிற்கும் காட்சி என்ன காட்சி. யாவரையும் அம்பாள் வசப்படுத்தியதுபோல அவர்கள் முகம் ஒருவித புதுப்பொலிவோடும், உடல் பக்திப்பரவசத்தோடும் பொலிவு பெற்று தம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்த நிலையில் உருவந்து ஆடி நிற்கும் காட்சி பார்ப்போர் நெஞ்சை உருக்கும்.

வீட்டைவிட்டு, தம் ஊர்களை விட்டு, தத்தம் குடும்பங்களைப் பிரிந்து கதிர்காமம் நோக்கி நடைப்பயணம், மேற்கொள்ளத் தீர்மானித்த அவர்களது உள்ளம் பிரிவுத் துயரால் ஒருவித சோக உணர்வுக்குட்படுதலைக் காணலாம். சிலர் வாய்விட்டு அழுது புலம்பி கதிர்காமக் கந்தனை- கண்ணகை அம்மனை நினைந்து மனமுருகி நிற்கும் அக்காட்சி காண்பது பெரும்பேறு. வையக வாழ்வு வேண்டாப் பொருளாகத் தோற்றும். அவர்களுக்கு கந்தப் பெருமானும் கண்ணகை தேவியும் உள்ளத்தில் குடிபுகுந்து அருளாட்சி செய்தல் பேருண்மை.

யாத்திரீகர்கள் உத்தரவு கேட்கிறார்கள், கண்ணகை கோவில் வாசலில் யாத்திரீகர் கூட்டம் ஒருவருடன், ஒருவர் இடிபடுகிறார்கள். வழி வெட்டப்படுகிறது, அம்மன் உத்தரவு கொடுத்துவிட்டார், அடப்பம் கட்டுகிறார்கள் யாத்திரீகர்கள், ஒரு தேங்காய், ஒரு பணம் காசு, ஒரு கொத்து பச்சரிசி, ஒரு பாக்கு, ஒரு வெற்றிலை இவை மட்டுமே அடப்பத்தில் அடங்கும் பொருட்கள், வேலைக் கையிலேந்தியபடி அடியார் திருக்கூட்டம் நான்காக பிரிபடுகிறது.

1. சந்நிதிவேல் கூட்டம்
2. முத்துக்குமார சுவாமி வேல் கூட்டம்
3. இயக்கச்சி சாமியார் வேல் கூட்டம்
4. சடையம்மா வேல் கூட்டம் ஒருவர் பின் ஒருவராக அடப்பத்தைத் தலையில் வைத்தபடி வேல் முன் செல்ல தொடர்ந்து, பின் சென்று கோவிலை வலம் வரும் காட்சி ஒரு பக்திப்பரவசம் மிக்க காட்சியாகும்.

வேல் சாமியார் வேலேந்தியபடி முன்னே செல்ல ஏனையோர் அவரைத் தொடர்ந்து செல்வர். அரோஹரா ஒலி தொடர்ந்து ஒலிக்கிறது. இது அவர்கள் கோசம். இக்கூட்டத்துடன் கண்ணகையார் முதல்வியாகச் செல்கிறார். இனி அடியார்களுக்கு பயமில்லை. வழித்துணைத் தெய்வமாம் கண்ணகையார் கைவிடமாட்டார். கண்ணகையார் செல்லும் பாதைதான் யாத்திரீகர் செல்லும் கரை வழிப்பாதை. இது தப்பான பாதையல்ல, வழிமாறிச் செல்வோருக்கு அவள் வழிகாட்டுவாள். அவள் செல்லும் வழி நாமும் நடப்போம்.

முன்னே செல்லும் வேல்தான் எல்லோரும் வழிபடும் தெய்வம். வேல் ஒவ்வொரு இடத்திலும் வைக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் செய்யப்படும், அடியார்கள் ஒவ்வொரு இடத்திலும் குளித்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து பூஜை செய்து வேலை வழிபடுவர் பின்னர் அங்கு வழங்கப்படும் அன்னதானத்தில் பங்குகொண்டு உணவருந்திய பின் உணவிட்டவர்களுக்கு நன்றியும் சொல்லிவிட்டுத் தொடர்ந்து வழிநடப்பர். இவை முக்கிய நிகழ்வுகளாகும்.

"இயக்கச்சிச் சாமியார்"- இவர் ஒரு நீண்டகாலமாக யாத்திரை செல்லும் அடியார். யாத்திரீகர் கூட்டம் அம்மன் திருத்தலத்தைத் தாண்டி முதலில் ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயத்தையடையும். அங்கேயுள்ள புனிதக் கேணித் தீர்த்தத்தில் யாத்திரீகர்கள் நீராடி, விநாயகப் பெருமானை வழிபடுவர். அன்னதானத்தில் அனைவரும் உணவருந்துவர். பின்னர் அன்று மாலை நேரமாக அவ்வடியார்கள் மாமூலை என்னும் கிராமத்தை அடைந்து, அங்கே அடியார்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இயக்கச்சிச் சாமியாரைச் சந்தித்து வணங்குவர். இவரை அடியார்கள் சந்திப்பது முருகனை நேரில் சந்திப்பது போன்றதொரு உணர்வோடு பக்தி மேலிட்டு மெய் சிலிர்ப்பர். இவர் ஒரு யாத்திரீகர்களின் கரைப் பாதை

வழிகாட்டியுமாவார். இவரின் முருக பக்தியானது யாத்திரீகர்களாலும் பொது மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது அவர் இவ்வுலகில் இல்லை. அவருக்கென்று ஒரு தவச்சாலையும் அங்கிருந்தது. பின்னர் அங்கிருந்து கணுக்கேணியூர் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வர். மாமூலை, கணுக்கேணி முதலிய கிராமங்களில் அடியார்களை வரவேற்று அவ்வூரார் அன்னதானமளிப்பர். பின்னர் குமுளமுனை என்னும் கிராமத்தில் உள்ள கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வர். அங்கே இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் பின்னர் தமது வழிப்பயணத்தை மேற்கொள்வர். அங்கும் ஊரவர்கள் அன்னதானமளித்து யாத்திரீகர்களை வரவேற்பர்: செல்லும் இடமெல்லாம் அடியார்களுக்கு அன்னதானம் தாக சாந்தி முதலியன பொது மக்களால் தவறாது வழங்கப்படுவது வழமை. எனவே யாத்திரை செல்வோர் தமது உணவுத் தேவைக்காக சமைத்துச் சாப்பிடவேண்டிய தேவைகள் மிகக் குறைவாகவே காணப்படும்.

செல்லும் ஒவ்வொரு இடங்களிலும் உள்ள கோவில் தலம்தான் இவர்களின் தங்குமிடங்கள். அவ்வழியே குமுளமுனை கடந்தால், இலங்கையின் கிழக்கு கரையோரக் கிராமங்களாகிய செம்மலை, கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்குளாய் முதலிய கிராமங்களில் உள்ள கோவில் தலங்களையும் தரிசித்துக்கொண்டு செல்வர். அக்கிராம மக்கள் யாத்திரீகர்களை வரவேற்று அன்னதானம், தாகசாந்தி வழங்குவர். கோவில்களில் பூஜை முதலியனவும் இடம்பெறும். கொக்குளாய்க் கிராமத்தைக் கடந்து சற்று தூரம் நீரிடைப் பாதை ஒன்றை வள்ளங்களில் உவகையுடன் கடப்பர். இவ்வெல்லை முல்லைத்தீவு-திருகோணமலை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசங்களாகும். திருமலை மாவட்டம்-புல்மோட்டை என்னும் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் கிராமத்தை அடைவர். இக்கிராமம் கொக்குளாயிலிருந்து சுமார் நான்கு மைல் (ஆறு கி.மீற்றர்) தூரத்தில் உள்ளது. இங்குள்ள ஒரே முருகன் ஆலயம் அடியார்களின் தரிப்பிடமாகும். அங்கே அமுதளித்து, தங்குமிடம் வழங்கி, தாக சாந்தி வேலைகளும் குறைவின்றி நிறைவடையும். அடுத்த நாள் அங்கிருந்து சுமார் ஆறுமைல் தொலைவிலுள்ள திரியாய் என்னும் கிராமத்தை அடைவர். அங்குள்ள அம்மன் கோயிலில் இவர்களுக்கு அன்னதானமளிக்கப்படும். பின்னர் திரியாயிலிருந்து குச்சவெளி என்னும் கிராமத்தை அடைந்து அங்குள்ள பிள்ளையார் கோயிலைத் தரிசிப்பர். பின்னர் கும்புறுப்பிட்டி கிராமத்தை அடைவர்.

இப்பாதை கிழக்கு மாகாண கிழக்குக் கடற்கரைப் பாதையாக அமையும். பின்னர் கோபாலபுரம் கிராமத்தை அடைவர். அங்கிருந்து நிலாவெளி என்னும் கிராமத்தை அடைவர். இக்கிராமத்திலமைந்துள்ள கண்ணகை அம்மன், மற்றும் மாரியம்மன் கோவில் இரண்டிலும் அடியார்களுக்கு அன்னதானம் தாகசாந்தி வழங்கி வரவேற்பர். அங்கே இரண்டு நாட்கள் தங்குவர். அங்கு அடப்பம் கட்டுவார்கள். அங்கிருந்து புறப்பட்டால் பல மைல் தூரம் நடந்து கன்னியாய் வெந்நீரூற்று உள்ள இடத்தையடைவர். இங்குதான் பாவநாச தீர்த்தமாகிய கன்னியாய் வெந்நீர் கிணறுகள் ஏழு உண்டு. இக்கிணறுகள் ஏழும் ஏழுவிதமாக வெப்பம், குளிர்மை பொருந்திய அதிசயமாகக் காணப்படும். இராவணன் இத்தீர்த்தத்தில் நீராடி தனது பிதிர்க்கடன் செய்தான் என்பது ஒரு பூர்வீகக் கதை. அங்கிருந்துதான் திருகோணமலை கோணேசர் பதியை அடைவர். அங்கு சிவன்கோவில் அம்மன் கோவில் இரண்டும் அடியார்களின்

உறைவிடமாக அமைய அங்கு தங்குவர். இங்கிருந்துகொண்டு இத்தலம் சூழவுள்ள 108 தலங்களையும், தரிசிக்கும் முகமாக இங்கு ஒரு வாரம் தங்குவர். திருகோணமலை மக்கள் கரைப்பாதை அடியார்களை வரவேற்று உபசரித்து உணவு பானங்கள் வழங்குவதில் மிகவும் கவனம் உள்ள பெருமக்களாவார். அவ்வாறே அடியார்களை வரவேற்று உபசரிப்பர். அடியார்களின் பசி பொறுக்கமாட்டார்கள் இவ்வூர் மக்கள். வற்றாப்பளை அம்மன் அடியார்களோடு சேர்ந்து வந்திருப்பதாக நினைத்து மிக்க பயபக்தி நிறைந்தவர்களாக விளங்குகிறார்கள். இதனால் அடியார்களுக்கு மிகவும் சிறந்த விசேடமாக தயாரிக்கப்பட்ட உணவினை வழங்கி மகிழ்ந்திருப்பர். பால், தயிர், நெய் கூட்டிய உணவு, தேன் முதலிய இனிமையுள்ள பதார்த்தங்களோடு சேர்த்து ஆக்கப்பட்ட உணவு முதலியன யாத்திரீகர்களுக்கு வழங்கி மகிழ்வர். அடியார்களுக்கு தீபம் தூபம் காட்டி வழிபடுவர். அடியவர்களை தெய்வங்களாக நினைத்து மதிப்பளித்து வழிபடுவர்.

திருகோணமலையை விட்டகன்ற யாத்திரீகர்கள் மட்டக்களப்பு மாவட்ட எல்லையை அடைவதற்குமுன், மூதூர், வெருகலம்பதி முதலிய இடங்களைத் தாண்ட வேண்டும். மட்டக்களப்பு இடம் கடந்து அங்கிருந்து கொக்கட்டிச்சோலை சென்று சிவன்கோவிலையடைவர். அங்குள்ள சுயம்புலிங்கம் மிகவும் அருளுடைய லிங்கம். அதனைத் தரிசித்த பின்னர், சாந்தாமலை செல்வர். அங்கே குன்றின் மேல் ஆடும் குமரன் கோவிலையடைந்து முருகனைத் தரிசிப்பர். அங்குள்ள வனத்தில் வதியும் கௌபீனதாரி ஒருவரை நேரில் கண்டு தரிசிப்பர்.

பின்னர் அங்கிருந்து மண்டூர் செல்வர், இங்குள்ள மண்டூர் முருகன் பிரசித்தமான கோவில். கதிர்காம முருகனைப்போல் இங்கேயும் வாய் கட்டித்தான் பூஜை செய்வது வழமை. நீர் நில, வளங்கள் பொருந்திய மிக அமைதியான இவ்வாலயம் அமைந்துள்ள சூழல் தெய்வீகம் நிறைந்த மனநிலையை உருவாக்கக் கூடியது. வள்ளி தெய்வானைக்கு தனித்தனியான ஆலயங்களும் உண்டு. பல விருட்சங்களின் குளிர் நிழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மண்டூர் முருகனாலயம் அமைதியான ஒரு வழிபாட்டுத் தலமாகச் சிறந்து விளங்குகின்றது. அடியார்கள் இங்கு இரவுப்பூஜை காண்பர். இத்தலம் கடந்து சென்று அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோவிலையடைவர். மாமாங்கம் தீர்த்த விசேடம் பெற்ற தலம். எனவே அடியார்கள் அங்கு தீர்த்தமாடுவர். பிள்ளையாரை வழிபடுவர்.

பின்னர் நீண்ட தூரம் நடந்து சங்குமான்கந்தை என்னும் இடத்தையடைவர். சங்குமான் கந்தை வனம் சூழ் பிரதேசம். இங்கே வேடர்கள் வாழ்விடங்களும் உண்டு. எனவே இத்தகைய பிரதேசங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதில்லை. எனவே மர நிழல்களில் தங்கி சமைத்து சாப்பிட வேண்டிவரும். அவ்வாறே அடியவர்கள் சமைத்து சாப்பிடுவது இங்கு வழமை. சங்குமான்கந்தையில் பிள்ளையார் கோயில் ஒன்று உண்டு. அப்பிள்ளையாருக்கு பொங்கிப் படைத்து மோதகம் அவித்துப் படைத்து பிள்ளையாரை வழிபடுவர். இங்கே காட்டு மிருகங்களும், குரங்குக் கூட்டங்களும் நிறைந்தே காணப்படும். அரோஹரா ஒலி விண்ணைத் தொட, முருக நாமம் அம்மன் பாடல்களைப் பாடிக்கொண்டு பொத்துவில் என்னுமிடத்தை நோக்கி நடப்பர்.

பொத்துவில் கரைப்பாதை யாத்திரையில் ஓர் எல்லைக் கிராமமாகும். இங்கிருந்து சென்றால் வனம் சூழ்ந்த பிரதேசங்கள் தென்படும். இங்கு சன நடமாட்டம் மிக அரிதாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும். காட்டு மிருகங்கள் நிறைந்த இப்பிரதேசத்தின் ஊடாக நடந்து செல்லும் யாத்திரீகர்களுக்கு அன்னதானம், தாகசாந்தி வழங்குவது கிடையாது. எனவே அடியார்கள் சமைத்துச் சாப்பிடுவர். மர நிழல்களில் தங்குவர். பொத்துவில் கழிய நடைபாதையில் கடைகள், வீடுகள் மிக அரிது. எனவே தமது சமையலுக்குத் தேவையான அரிசி, தேங்காய், மிளகாய்த்தூள், கற்பூரம், மாவு முதலிய பொருட்கள் யாவற்றையும் அடியார்கள் போதியளவு வாங்கிக்கொண்டு செல்வர். பணம் தேவைப்படுவோர் ஊரிலிருந்து தமது உறவினர்களுக்கு அறிவித்து தபால்மூலம் பணத்தை வரவழைத்துக் கொள்வர். பொத்துவில் கடந்தால் ஏறக்குறைய பத்து நாட்கள் பிரயாணம் செய்துதான் அடுத்த ஊராகிய குடிசனமுள்ள பகுதியை அடையலாம். அந்தப் பத்து நாட் பிரயாணத்தின் பின் கதிர்காமக் கந்தனின் திருத்தலத்தை அண்மிக்க முடியும். இடையில் நாவலாறு என்னுமிடத்தில் அடப்பம் கட்டி தங்குவர். இங்கு ஓர் ஆறு உண்டு. ஆற்றில் நீராடுவர். கொடிய காட்டு மிருகங்களும் அடியவர்களுடன் சேர்ந்தே நீராடும். ஆனால் அவை அவர்களை ஒன்றுமே செய்வதில்லை.

நாவலாறு கடந்து சென்று அன்று மத்தியானம் பாணகை என்னும் கிராமத்தை யடைவர். இக்கிராமம் வேடர்கள் வாழும் கிராமமாகும். சிங்களவர்களும் தமிழர்களும் இங்கே ஒற்றுமையாக மணமுடித்து வாழ்வதைக் காணலாம். வேடர்கள் ஒருபுறத்தில் வாழ்கிறார்கள். இவர்களின் பிள்ளைகள் பாடசாலை சென்று படிக்கிறார்கள். திருத்தமடைந்த இனங்களாக விளங்கி வருகின்றார்கள். இங்கிருந்து புறப்பட்டால் சந்நியாசி மலையை அடையலாம். ஒரு மலையில் பழைய கட்டட அழிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு வாழ்ந்த ஒரு சந்நியாசி அவர் இப்போது இல்லை. இங்கே ஒரு கேணி உண்டு. கிணறுகள் இல்லாத நிலையில் இக்கேணி நீர் வழங்கி வருகிறது. ஒரு நாள் யாத்திரீகர்கள் இங்கே தங்குவார்கள். காட்டில் இரவு தீ வளர்ப்பார்கள். மலையடிவாரத்தில் அவல், ரொட்டி நிவேதித்து வழிபடுவர். அன்றிரவு ஆனந்தமாகவிருக்கும். தேவார திருவாசகங்கள் ஓதக் கேட்கலாம். ஒரு புறம் கொடிய வன விலங்குகளின் உறுமல், முனகல் சத்தங்களும் கேட்கும். பக்திப் பரவச நிலையில் அடியவர்கள் இருப்பர். பெரிய தீ வளர்த்து அதனைச் சூழ அடியார் இருப்பர். இங்கிருந்து சென்றால் ஒற்றையடிப் பாதைகள் ஊடாகவே செல்லவேண்டிவரும். வழி தப்பாமல் இப்பாதை வழியே செல்ல வேண்டும். இடையில் ஆறு குறுக்கிடும். ஆற்றின் ஆழத்தை அறிய முடியாதல்லவா? ஆனாலும் அடியவர்கள் கதிர்காமக் கந்தனையும் அம்மனையும் நினைத்தபடி ஆற்றில் இறங்குவர். இதுவரை அடியவர் யாரும் இவ்வாற்றில் அடியுண்டு போனதாக வரலாறில்லை. வாகனப் புளக்கமோ சன நடமாட்டமோ இல்லாத இடமது. வேல் ஏந்திய அடியவர் முன்னே செல்ல யாவரும் முருகநாம பஜனை பாடியவாறு உகந்தைமலையை அடைவர்.

உகந்தை மலையில் ஓர் முருகன் ஆலயம் உண்டு. குடிகள் இல்லாத இடம் இது. கிணறு, மடம் உண்டு. இத்தலத்தில் இரண்டு நாட்கள் தங்குவர். உகந்தை முருகனாலயம் பிரசித்தி பெற்றது. அருள் பாலிக்கும் முருகதலம். பலர் அங்கு பிரயாணம் செய்து வழிபட்டதாக கதைகள் உண்டு. பின்னர் பூமுனையை அடைவர். இது வேடுவர் கிராமம். பூமுனை தாண்டி குமுக்கன் ஆற்றங்கரையை அடைவர். இவ்வாற்றங்கரையில் மத்தியானப் பொழுதைக் கழிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே சமைத்துச் சாப்பிடுவர். சமையற் பாத்திரங்களாக தாம் எடுத்து வந்த பேணிகளையும், சிறு பாத்திரங்களையும் பாவிப்பர். இவை இல்லாதவர்களுக்கும் ஏனையவர்கள் கொடுத்துதவி செய்வர். எல்லோருக்கும் அம்மனருளால் உணவு கிடைக்கும். குமுக்கன் ஆறு பெருக்குள்ள ஆறுதான். ஆனால் இதுவரை அடியவர் யாரையும் மூழ்கடித்தது கிடையாது.

குமுக்கனிலிருந்து புறப்பட்டால் தொடர்வனம் காணப்படும். இவ் வனங்களில் பாதைகள் இல்லை. மனிதர்களே அங்கு இல்லை என்னுமளவுக்கு மனித நடமாட்டம் கிடையாது. கொடிய வன விலங்குகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படும். யானைகள் கூட்டமாகத் திரிவதையும், பறவைக் கூட்டங்களையும் அருகருகாகக் காணமுடியும். நடுக்காட்டில் கிழவி ஒருத்தி தண்ணீர்ப் பாத்திரத்துடன் நின்று தாக சாந்தி செய்ய, சிங்களச் சிறுவன் வழிமாறிப் பயணித்து நடந்து சென்ற அடியவர்களுக்கு போகவேண்டிய சரியான பாதையைக் காண்பித்து அருள்புரிந்த அவர்கள் அம்மனும்- கந்தனுமாவர். அடுத்து வாதரவெட்டை என்னுமிடத்தை அடியார்கள் அடைவர். அங்கு ஓர் வேப்பமரத்தடியில் அடியார்கள் அடப்பம் கட்டுவார்கள். பழ மரங்கள் நிறைந்துள்ள இவ்விடத்தில் விளாம்பழம், துவரம் பழம், புளியம்பழம், பாலைப்பழம் முதலியன செரிந்து கிடக்கும். இவ்விடம் கழிந்தால் நாவல்மடுவை அடையலாம். அங்கு இரவு தங்கி மறுநாள் அதிகாலை புறப்பட்டு கள்ளவியாளையை அடைவர். பின்னர் வியாளையை அடைவர். வியாளையில் ஒரு இரவு தங்குவர். இங்கு மாணிக்க கங்கையில் தொடர் தீர்த்தமாடி, மறுநாள் புறப்பட்டு மலைகண்ட வெளியை அடைவர். அங்கு நின்று பார்த்தால் கதிரமலை உச்சி தெரியும். கதிரமலை உச்சி தெரிந்தவுடன் அவ்விடத்தில் அவல் படைத்து முருகனைத் துதிப்பர். கற்பூரம் கொழுத்தி அவ்விடத்தில் தேங்காய் உடைப்பதும் வழமை. அப்போது அவர்களுக்கு கதிர்காமம் தரிசித்து விட்டதாக மனம் நிறைவடைந்து ஆனந்திப்பர். எனவே ஆவல் மீதுரப்பெற்றவராக விரைவாக நடந்து மதியம் கட்டகாமத்தை அடைவர். இவ்விடத்திலிருந்து எட்டு மைல் தூரம் நடந்தால் கதிர்காமத்தை அடையலாம். கட்டகாமத்தில் குடிகள் மனைகள் இல்லை. ஓர் அழகிய தாமரைத் தடாகம். உண்டு. அதில் மலர் பறித்து நீராடியபின் பூஜை செய்து, கதிர்காமம் தெரியுது என மகிழ்வாக விரைந்து நடப்பர். அங்கே நெடுநேரம் தரிக்கவும் விரும்பாமல், விரைந்து நடந்து பிற்பகல் நான்கு அல்லது ஐந்து மணியளவில் கதிர்காமம் புண்ணியத்தலத்தை அடைவர். கட்டகாமத்தில் அவர்கள் இறுதியாகச் சமையல் செய்து சாப்பிட்ட பின்னர் கதிர்காமத்தை அடைந்துவிடுவர். வற்றாப்பளையிலிருந்து புறப்பட்டு நாற்பத்து மூன்றாம் நாள் (43) கதிர்காமக் கரை யாத்திரை முற்றுப்பெறும்.

இவ்வாறான கதிர்காமக் கரை யாத்திரையின்போது பல வித இறை அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. 1964, 1973 ஆகிய ஆண்டுகளிலும், அவை தவிர வேறு பல காலங்களிலும், சந்தர்ப்பங்களிலும் அற்புதங்கள் பல நடந்துள்ளன். அவை பற்றிய விரிவும் விளக்கமும் பின்வரும் நாட்களில் இங்கு கூறப்படும்.

கண்ணகை, கந்தன் அவர்தம் திருவடி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயாரோடு இணங்கி இருப்பதுவுந் தீது

திரு நா. நல்லதம்பி அவர்கள்

இந்த உலகம் பலவிதமான குணநலம் உள்ள மக்களைக் கொண்டு இயங்குகின்றது. நாட்டுக்கு நாடு, மொழி, இனம், மதம்என்ற வேறுபாடுகளாலும், இயற்கை வளங்களாலும் வாழ்க்கைமுறைகள் வெவ்வேறாய் அமைகின்றன. இவற்றையெல்லாம் புலப்படுத்துவனவாக நமது இலக்கியங்கள் அமைந்திருக்கின்றன.

இந்த இலக்கியங்கள் தருகின்ற பட்டறிவைக் கொண்டு நாம் நமது வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டும். சிறந்த கல்வி அறிவைப் பெறுவதோடு உலக சமுதாயத்துக்கேற்ப ஒழுகுவதற்கும் பழகிக்கொள்வது அவசியமாகும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் என்பது குறள் தரும் பாடம்.

இந்த வகையில் சமுதாயத்திற்கு மிகவும் வேண்டப்படும் படிப்பினைகளைத் தருகின்ற இலக்கியங்களாக இராமாயணமும் பாரதமும் விளங்குகின்றன.

இராமாயணம் இராமாவதாரத்தோடு சம்பந்தப்பட்டதாகவும், பாரதம் கிருஷ்ணாவதாரத்துடன் சம்பந்தப்பட்டதாகவும் விளங்குகின்றன.

இராமாயணத்திலே தந்தை தாய் வாக்கிய பரிபாலனம் சகோதர ஒற்றுமை, எல்லோரையும் உறவினராக மதித்தல் முதலிய பண்புகளோடு இராமன், தேவர்களுக்குத் தீமை புரிந்த. அரக்கர்களை அழிப்பதற்காக அவதாரம் பெற்ற, ஆனால் தன்னை ஒரு சத்திரிய (அரச) வம்சத்தவனாக காட்டுபவனாக விளங்குகிறான்.

பாரதத்திலே கௌரவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களுமாகிய தீயவர்கள் அதிகமாகவும், பாண்டவர்களும் அவர்களைச் சார்ந்த சிலரும் நல்லவர்களாக, கடவுள் நம்பிக்கையும் பெரியோர்களைக் கனம் பண்ணும் பண்பும் உள்ளவர்களாக வாழ்கின்றமையும், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவற்றால் கௌரவர்கள் தமது சகோதரர்களாகிய பாண்டவர்களுக்குத் துன்பஞ் செய்கின்றவர்களாகக் காணப்படுவதும், அதனால் தீயவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் அழித்து நல்லோரைக் காத்து பூபாரந் தீர்க்கப் பிறந்த புயல்வண்ணனாக, கிருஷ்ணாவதாரம் பெற்ற பரந்தாமன், வேண்டும்போது தன் திவ்ய வடிவைக் காட்டுபவனாகவும் விளங்குகின்றான்.

இங்கே, பாரத கதைமூலம் தீயவர்களும் தீயோரைச் சார்ந்தவர்களும் எப்படித் தங்கள் அழிவைக் தேடிக்கொள்ளுகிறார்கள் என்பதை இக்கட்டுரைமூலம் ஆராய்வதே எமது நோக்கம் ஆகும். திருதராட்டிரன் என்பவனுடைய மக்கள் துரியோதனன் முதலிய நூற்றியொருபேர் கௌரவர்கள் எனவும், திருதராட்டிரனின் தம்பியாகிய பாண்டுவின் பிள்ளைகளான தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரும் பஞ்ச பாண்டவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

கௌரவர்களில் மூத்தவனான துரியோதனன், அரச சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டு, தம்பிமார்களின் பக்க பலத்துடன், பாண்டவர்களுக்கு உரிய அரசியல் உரிமையைக் கொடாது விட்டதுமன்றி அவர்களுக்குத் துன்பத்தையும் கொடுத்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டவர்களின் வீர பராக்கிரமங்களையும், அவர்கள் பெரியோர்களின் ஆசீர் வாதத்தினாலும் கிருஷ்ணபரமாத்மாவின் அருளாலும் சிறப்புப்பெற்று வருவது துரியோதனன் ஆதியோர்களுக்குப் பொறாமையாக இருந்தது. அதனால் குளத்து நீரில் கூரிய இரும்புகளை நட்டுவைத்து, அதனுள் வீமனை வஞ்சகமாகக் குதிக்க வைத்தார்கள். பாண்டவர்களுக்கென ஒரு அரக்குமாளிகையைக் கட்டி அதற்குள் குடிகுபுக வைத்துவிட்டு அம்மாளிகைக்குத் தீயிட்டார்கள். அவர்களைத் தனது சபைக்கு வரவழைத்து, மாயச்சூதாடி, அவர்கள் தங்களைத் தாங்களே தோற்கும்படி செய்து, பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாத வாசமும் (மறைந்து வாழுதல்) செய்யப் பணித்தனர். பாண்டவர்கள் சூதாடித் தோற்று நின்றபோது, பாஞ்சாலியைச் சபைக்கு இழுத்து வந்து துகிலுரிந்து மானபங்கப்படுத்தினார்கள்.

இக்கொடுமைகளையெல்லாம் தருமன் தன் பொறுமையினால் தாங்கி வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடித்து வந்தபோதும், ஈ இருக்கும் இடந்தானும் தரமாட்டேன் என்று போர் செய்து மேலும் பாண்டவர்களை அழிக்கவே விரும்பினான் துரியோதனன்.

போர் என்று வந்தபோது, பரந்தாமனின் உதவி கேட்டு இருபகுதியாரும் துவாரகைக்குப் புறப்பட்டனர். வணங்கா முடியோன் எனப் பேர் பெற்ற துரியோதனன் முதலிற் போனான். அறிதுயிலில் கிடந்த கண்ணபிரானது தலைமாட்டில் அமர்ந்திருந்தான் அவன். பின்னர் போன அர்ச்சுனன் கால்மாட்டில் அமர்ந்தான். கண் விழித்த கண்ணன் தனஞ்சயனையே முதலிற் பார்த்தான். ஆயினும் தானே முதலில் வந்தவன் என்பதால், போர் என்று வந்துவிட்டதால் கண்ணனது படைக்கல உதவி தனக்கே தரவேண்டும் என்று கோரினான் துரியன். அப்படி ஆகட்டும் என்று சொல்லிவிட்டு அர்ச்சுனன் பக்கம் பார்த்தான் பரந்தாமன். படைக்கல உதவி கிடைக்காது என்பதால், கண்ணா! உன் உதவியையாவது தரவேண்டும் என்று வேண்டிப் பெற்றான். கடவுள் அருள் இருந்தால் வேறு உதவி தேவையில்லைத்தானே! பார்த்தன் போருக்குப் போனபொழுது பார்த்தசாரதியாகப் பரந்தாமன் செய்த செயல்களும், பகவத்கீதை தந்ததும் இந்தப் பாரோர் அறிந்த உண்மையன்றோ.

போரிலே தன்னைத் தளபதியாக்கவில்லை என்பதால் விதுரன் தனது வில்லை முரித்து, போர் செய்ய மறுத்துவிட்டான்.

பாண்டவரைத் தோற்கடிக்கவோ கொல்லவோ விரும்பாத பீஷ்மர், சிகண்டி என்னும் பேடியை முன்னிருத்திப் போரிடுவாயானால் உனக்கு வெற்றி நிச்சயம் என்று அர்ச்சுனனுக்கு புத்திசொல்லி, அவ்வாறே இறந்து போகிறார். தோல்வியை அறியாத தான், துரியோதனன் ஆதியோர்களது தீய செயல்களுக்குத் துணை நின்றதனால் இவ்வாறு இறக்க நேர்ந்தது என்று சொல்லிக்கொண்டு அம்புப் படுக்கையிற்கிடந்து அமரரானார் பீஷ்மர்.

தனது மகனான அஸ்வத்தாமன் இறந்தான் எனக் கேட்டதும் தனது ஆயுதங்களைக் கைநழுவ விட்ட துரோணர், அர்ச்சுனனின் அம்புகளால் விழுந்தார்.

கர்ணன் இருக்கும்வரை தனக்குத் தோல்வியே இல்லையென்று இறுமாந்திருந்தான் துரியன். ஆயினும்,

கர்ணனுடைய கவச குண்டலங்களைப் போட்டி நிகழ்வில் அடையாளங்கண்டு குந்திதேவி பதறியபோது, அதனை வெளியிட வேண்டாமென விதுரன் தடுத்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவைகள் இருக்கும்வரை கர்ணனுக்கு அழிவில்லை என்பதால், இந்திரனை அனுப்பிவைத்து, அவைகளைப் பரிசாகப் பெறச்செய்தான் பரந்தாமன்.

அர்ச்சுனனைக் கொல்வதற்காகவே நாகாஸ்திரத்தைக் கர்னன் வைத்திருந்தான். அப்படி அர்ச்சுனனை மாத்திரம் கொன்றாலும் எந்த வேளையிலும் மற்றைய நால்வரையும் கொல்லமாட்டேன் என்று குந்திதேவியை வரம் கேட்கச் செய்தான் பரந்தாமன்.

துரோணரிடம் வில்வித்தை பழக வாய்ப்பல்லாதபோது, பரசுராமரிடம் பிராமணன் என்று பொய் சொல்லி நடித்து பயின்றபோது, பரசுராமர் அதனை அறிந்து, "உற்ற போரிலே கற்றதை மற" என்று சாபமிட்டார் கர்னனுக்கு.

போரின்போது அர்ச்சுனனுக்கு ஏவப்பட்ட நாகக்கணை அவன் தலையைக் குறிபார்த்து வரவே, பார்த்த சாரதி தேர்ச்சில்லைச் சிறிது சேற்றிலே அழுந்தச் செய்ய, அம்பு தலைக்கிரீடத்தை தட்டிச் சென்றது. அர்ச்சுனன் தப்பி விட்டான், இனி நாகாஸ்திரம் எய்யமாட்டான்! அர்ச்சுனனை ஊக்கப்படுத்தினான் கண்ணன். கர்னன் மயங்கி விழுந்தான். ஆயினும் கர்னன் உயிர் போகவில்லையே! தர்மம் தலை காக்கும் அன்றோ! பார்த்தசாரதி, வஞ்ச வேதியனாக வந்து புண்ணியத்தையும் தானமாகப் பெற்றுவிட்டான். "ஓவிலாது யான் செய்த புண்ணியம் அனைத்தும் உதவினேன்; கொள்க" என்று இரத்தத்தால் சத்தியஞ் செய்தான் கர்னன்.

இவ்வாறு துரியோதனனுக்கு உதவியாக நின்ற கர்னனும் இறந்துபட்டாலும் போரிலே கண்ணாக நின்ற துரியோதனனை வீமன் கொன்றான். துரியோதனனது முடிபு அவனின் தொடையிலே இருப்பதாக ஒரு சாபம் உண்டு. பாஞ்சாலியை மானபங்கஞ் செய்தபோது, "பாண்டவர்கள் இனி உதவிக்கு வரமாட்டார்கள். ஆகவே, பாஞ்சாலி! நீ வந்து என் தொடையில் அமர்வாய்" என்று கூப்பிட்டவன் துரியன்! வீமன் அப்போது, "அந்தத் தொடையில் அடித்து உன்னைக் கொல்வேன்" என்று சபதம் செய்திருந்தான். அதனை ஞாபகப்படுத்துவது போலப் பரந்தாமன் சைகையாற் காட்ட, வீமன் தொடையில் கதையாலடித்தபோது, போர் முறை தவறித் தொடையில் அடித்த வீமனை இகழ்ந்தபடி இறக்கிறான் துரியோதனன்.

இராமாவதாரத்தில், இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றதும் கிருஷ்ண அவதாரத்தில் மாயைகள் பல செய்து பாண்டவர்களுக்கு உதவி செய்ததும் தீமையை அழிக்கும் பொருட்டுக் கடவுளர் செய்யும் மாயை என்று புராணங்கூறும்.

போரில் கர்னன் இறந்து விட்டாலும் குந்திதேவி போர்க்களம் புகுந்து, கர்னனை மடிமீது தூக்கிவைத்து மகனே! என்று அழுது புலம்பிக் கர்னனுக்குத் தாய் தானே என்று உலகறியச் செய்தாள். இதனை இத்தனை காலமும் மூடிமறைக்கச் செய்ததும் கிருஷ்ணன் லீலைதானே! மறைக்காவிட்டால் பாரதப்போர் நடந்திராது. தீமையும் தீயவர்களும் அழிந்திருக்க இயலாது. அவதார நோக்கம் நிறைவேறாது!

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவுந் தீதே- தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவுந் தீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(தொடர்ச்சி...

# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம்- காரைநகர்

எழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி ன்டம்நவில்
கனிதரு செவ்வா யுமையோடு காளிக்கு
அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவ னீண்டிய வடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

**பதவுரை:**

எழில் பெறும் இமயத்து இயல்பு உடை- எழுச்சிபெறும் இமயமலையின் தன்மையினையுடைய, புலியூர் அம்பொன் பொலிதரு பொதுவினில்- புலியூரின் கண்ணுள்ள அழகிய பொன் வேய்ந்து விளங்கும் சிற்றம்பலத்திலே, நடம் பயில்- திருக்கூத்தைப் பயிலும், கனி தரு செவ்வாய் உமையொடு காளிக்கு அருளிய- கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயினையுடைய உமையம்மைக்கும் காளிக்கும் அருள்செய்த, திருமுகத்து அழகு உறு சிறு நகை இறைவன்- அழகிய முகத்திடத்தான் அழகு மிக்க சிறு சிரிப்பினையுடைய இறைவன், ஒலிதரு உயர் கயிலை கிழவோன்- மேலோர்கள் வழுத்தும் வாழ்தொலியையுடைய மேலான திருக்கையிலை மலைக்கு உரிமையுடையோன், ஈண்டிய அடியரோடும்- தம்மை நெருங்கிய அடியவர்களுடன், பொலிதரு புலியூர் புக்கு இனிது அருளினன்- விளங்குகின்ற புலியூரின்கணுள்ள சிற்றம்பலத்தின்கண்ணே புகந்து இனிதாக எழுந்தருளினன்.

எழில்- எழுச்சி. நெடிய பெரிய சிகரங்களையுடைய பனிவரையாதலின் "எழில்பெறு மிமயத்து" என்றார். "நெடும்பெருஞ்சிமையத்து" (முருகு 253) என வருதலுங் காண்க. இமயமலையின் சிகரம் பொன்னிறமாய் விளங்குதல் போலப் புலியூரின் கணுள்ள சிற்றம்பலமும் பொன்வேய்ந்து விளங்குதலின் "இமயத்தியல்புடை அம்பொன் பொலிதரு பொது" என்றார். இமயம் பொற் சிகரங்களையுடைத்ததால் "பொற் கோட்டிமயமும்" பொன்னுடை நெடுங்கோட் டிமயம்" (புற 2:24;369:24) என வருவனவற்றாலுமறிக. இயல்புடைப் பொது எனவும், அம்பொற் பொலிதரு பொது எனவும் இயையும். புலிக்கால் முனிவர் சிவபெருமானைத் தில்லைக்கண் வழிபாடாற்றிய காரணத்தால் தில்லை "புலியூர்" எனப்பட்டது. புலியூர்ப்பொது- புலியூர்க்கணுள்ள பொது.

நவிலுதல்- பயிலுதல். "நடைநவில் பெரும்பகடு" (பெரும்பாண் 198) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. இறைவன் தில்லைச் சிற்றம்பலத்தின் கண்ணே ஓவாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கூத்தியற்றுதலின் "பொதுவினில் நடம் நவில்" என்றார். திகழ்தில்லையம்பலத்தே திருநடஞ்செய் கூத்தர்" (தோணோ ) என வருதலுங் காண்க. நடம் நவில் (141) இறைவன் (144) என இயையும்.

கனிதரு செவ்வாய்- கனியை ஒத்த செவ்வாய் "கனியை நேர்துவர் வாயார்" (சதக 27) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க. கனி என்றது கொவ்வைக் கனியை "கொள்ளேர் பிளவகலாத் தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்" (நீத் 2) என வருதலுங் காண்க. கனிதரு செவ்வாய் உமை என்க.

"கொவ்வை வாய்க் கொடியே ரிடையாளுமை"
தே. ஞான 260:9
"கொவ்வைச் செவ்வாய்க் கோமள மாதுமையாள்"
தே. ஞான 358:2
"கொவ்வையங் கனிவாய் மங்கை கொழுந்தனே"
நம்பி திருவிளை. ஆனைசெய் 25

என வருவன காண்க.

உமையொடு காளிக்கு அருளியவென்றது உமையம்மைக்கும் காளிக்கும் அருள்செய்த என்றவாறு. உமைக்கு அருளியது நிருத்த சாட்சியாக அமைந்து தரிசிக்கும் பேறாகும்.

"காடரங்கா வுமைகாண வண்டத் திமையோர் தொழ
நாடக மாடியை" ஞான 267:7
"காம்பாடு தோளுமையாள் காணநட்டங் கலந்தாடல்
புரிந்தவன் காண்" நாவு 290:6
"கூடிய விலயஞ் சதிபிழை யாமைக் கொடியிடை யுமையவள்
காண ஆடிய அழகா" சுந் 69:2

எனத் தேவாரத்து வருவன காண்க.

காளிக்கு அருளியது காளியின் செருக்கினை ஊர்த்துவ தாண்டவத்தால் அடக்கி நல்வழிப்படுத்தியதாகும்.

முன்னொரு காலத்திலே தாரகன் என்னும் அரக்கனைக் கொல்லும் பொருட்டுக் காடுகாள் என்னும் சத்தி தோற்றுவித்து அனுப்பிய காளி அவ்வரக்கனொடு பொருது அவன் உடலைப் பிழந்தவிடத்துக் கீழே சிந்திய குருதியாற் பின்னும் பல அரக்கர் உண்டாதலைக் கண்டு அவன் உடலுகு குருதியைத் தானே முற்றும் பருகி அதனால் வெறிகொண்டு உலகத்துள்ள உயிர்களையெல்லாம் அழிக்கப் புகுந்தனள். இதனைக் கண்ட இறையவன் அவள்முன்னே தோன்றிக் கொடுங்கூத்து இயற்றி அவள் செருக்கினை அடக்கி நல்வழிப்படுத்தியருளினார். இதனை,

"தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின் றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ"
(சாழல் 14) எனத் திருவாசகத்தும்,
"வல்லைவரு காளியை வகுத்து வலியாகு மிகு தாரகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்த சிவன்" ஞான 328:3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வென்றிமிகு தாரகன தாயிருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகத மோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றன்மலி யும்பொழில்கொள் வண்டிருவை யாறே"
ஞான 168:5

"..... தாருகன் றன் னுயிருண்ட பெண்
போத்தன்றானவன் பொங்கு சினந்தணி
கூத்தன்" நாவு 177:7

"பைதற் பிணக்குழைக் காளிவெங் கோபம் பங்கப்படுப்பான்
செய்தற் கரிய திருநடஞ் செய்தன சீர் மறையோன்"
நாவு 101:2

"கொதியினால் வருகாளி தன்கோபங் குறைய ஆடியகூத்துடையானே"
சுந் 70:4

எனத் தேவாரத்தும்,

"மோடி தரவந்த முக்க ணுடைக்காளி
ஓடி யுலகுயிர்கள் உண்ணும்படி யெழலும்
நாடி யவள்வெருவி நாணிச் செருக்ககல
ஆடி யருள்செய்த யருளிங் கணுகாதோ" சயந்தன் 66.

எனக் கந்தபுராணத்தும் வருவனவற்றாலுமறிக.

திருமுகத்துச் சிறுநகை இறையவன் என இயையும். "தில்லைச் சிற்றம்பலவன் சிரித்தமுகங் கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" "குனித்த புருவ்முங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்" (நாவு 80:7; 81:4) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. புலியூர் என்றது புலியூர்க்கணுள்ள அம்பலத்தை, அது ஞானத்தாற் பொலிதருதலின் "பொலிதரு புலியூர் என்றார். புக்கு- புகுந்து. கயிலை கிழவோனாகிய இறைவன் பரமாசாரியனாகத் திருப்பெருந்துறையில் எழுந்தருளிவந்து அடிகளை ஆட்கொண்டபின் தில்லையுட் கோலமார்தரு பொதுவினில் வருகெனப் பணித்தருளினமையால் இறைவன் எழுந்தருளிச் சென்ற இடமும் அதுவெனக்கொண்டு "பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்" என்றார். ஒலிதரு கயிலை என்பதற்கு மந்திரஒலி பயிலும் கயிலை எனினுமாம். கயிலைக்கு என நான்காவது விரிக்க. கிழவோன்- உரிமையுடையோன். கயிலையிற் பிற அதிகார மூர்த்திகளுளராயினும் இறைவனே சிறந்த உரிமையுடையோனாதலின் "கயிலை யுயர் கிழவோன்" என்றார். "மானக் கயிலை மலையாய் போற்றி" (போற்றி 167) என வருதலுங் காண்க. இறைவன் (144) கிழவோன் (146) என்னும் பெயர்கள் "புக்கினிதருளினன்" (145) என்னும் வினைகொண்டு முடிந்தன.

கயிலை யுயர்கிழவோன் (146) பயின்றனனாகிப் (2) பல்குணம் விளங்கி (3) கல்வி தோற்றியும் அழித்தும் (5) இருளைத் துரந்தும் (6) ஆகமம் தோற்றுவித்தருளியும் (10) நயப்புறவெய்தியும் (12) இன்னருள் விளைத்தும் (14) தடம்படிந்தும் (16) ஆகமம் வாங்கியும் (18) பணித்தருளியும் (20) அமர்ந்தருளியும் (22) இயல்பினதாகி (24) உய்ய (25) வந்தருளிச் (26) சாத்தாய்த் தான் எழுந்தருளியும் (28) காட்டிய கொள்கையும், (30); ஈந்தவிளைவும் (32) காட்டிய கொள்கையும் (34), குதிரையாக்கிய நன்மையும் (36) தோற்றிய தொன்மையும் (41) காட்டிய இயல்பும் (43), சேவகனாகிய கொள்கையும் (45) மண்சுமந்தருளிய பரிசும் (47),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடங் காட்டிய இயல்பும் (48), மேனி காட்டிய தொன்மையும் (51), சிலம்பொலி காட்டிய பண்பும் (53), கரந்த கள்ளமும் (55) ஆக்கிய பரிசும் (57) சேவகனாகிய நன்மையும் (59), குருந்தின் கீழ் இருந்த கொள்கையும் (61) சித்தி அருளிய அதுவும் (63) காடது தன்னிற் கரந்த கள்ளமும் (65), ஒருவன் ஆகிய தன்மையும் (67) பாலகனாகிய பரிசும் (69), கோலங்கொண்ட கொள்கையும் (72), நல்கிய நன்மையும் (74) பாதம் வைத்தவப் பரிசும் (76) பெண்ணோடாயின பரிசும் (78) குழலியொடு மகிழ்ந்த வண்ணமும் (80) பாவகம் காட்டிய பரிசும் (82), இருந்தும் (83) காட்டியும் (84) சைவனாகியும் (85), அருத்தியோ டிருந்தும் (86) விருப்பனாகியும் (86), காட்சி கொடுத்தும் (88) வழுக்காதிருந்தும் (89) அறம்பல அருளியும் (90) குறியாயிருந்தும் (91) துதைத்திருந்தருளியும் (99) ஆண்டுகொண்டருளி (126), ஒழித்தருளி (129), உடன் கலந்தருளியும் (131) புக்கினிதருளினன் (145) என வினை முடிபு செய்க.

இத்திருவகவலின் உட்பொருள் "சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை" எனக் குறிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் சிவபெருமான் ஆன்மாக்கள்மீது கொண்ட அளவிலாப் பெருங் கருணையாற் பல தலங்களிலும் எழுந்தருளியிருந்தும் பல அருட்டிருவுருவங்கள் கொண்டு தோன்றியும் அருள் செய்த புகழ்ச் செயல்கள் எல்லாவற்றையும் தொகுத்து முறைமையாகக் கூறுவது என்பதாம். இதனைப் "புகழ் பெருகுஞ் செய்கையெலாம் புகலகவலொன்றாகும்" என்னும் திருப்பெருந்துறைப் புராணத்தால் அறிக.

(கீர்த்தித் திருவகவல் முற்றிற்று)

## ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 27ஆவது குருபூசை தின நிகழ்வு



காலம்: 26.07.2012 வியாழக்கிழமை

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

...தமிழ்ச் சங்கம்
நூலகம்

வழமைபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளனுடம்பு ஆலயம்

**திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்**

ஓர் உயர்ந்த நோக்கத்துடன்தான், உயிர்கள் மனிதப் பிறவியை எடுத்துள்ளன. அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பது ஔவைப் பிராட்டியாரின் அமுதவாக்கு. மனித உடல் மிக நுட்பமாகவும் மிகச்சீரமையுடையதாகவும் இறைவனால் வடிவமைக்கப்பட்டு உயிர்களுக்கு வழங்கப்பட்டமை, உயிர்கள் மீது இறைவன் கொண்டுள்ள அளப்பெருங் கருணையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. உயிர் அதனது பிறவி நோக்கத்தினை முட்டின்றி அடைவதற்கு, அதற்குக் கிடைத்துள்ள மனித உடலின் மகத்துவத்தை உணர்ந்து, அதனை நன்கு மதித்து, நன்றாகப் பேணி அதன் நலன் ஓம்பி வாழ்தல் இன்றியமையாததாகும். சுவர் இருந்தால்த்தான் சித்திரம் வரையலாம், என்பது ஆன்றோர் வாக்கு.

இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இது நாவலர் பெருமான் மனித உடல்பற்றிக் கொண்டிருந்த கருத்து ஆகும். இம்மையில் இன்பமும் மறுமையில் மோட்சமும் என்னும் மனிதப் பிறவியின் பயன்களை அடைவதற்கு உடல் இன்றியமையாத நற்கருவியாக விளங்குகின்றது.வாழ்க்கைப் பயன்களான அறம்,பொருள்,இன்பம்,வீடு என்னும் நான்கினையும் முழுமையாக அடைவதற்கும் அனுபவிப்பதற்கும் உடல் மற்றும் அதனோடு இணைந்துள்ள ஐம்புலன்களும், மனம் முதலிய அகக் கரணங்களும் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

இந்த உடம்பு ஆனது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவானது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கு; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிகருவிகள் ஐந்து; வாக்கு, கை, கால், எருவாய், கருவாய் என்னும் தொழிற்கருவிகள் ஐந்து; மற்றும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்து என்பவற்றை உடம்பு அதன் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது.

மனித உடம்பும் அதனோடு இணைந்த கருவிகரணங்களும்,ஓர் உயரிய நோக்கத்தை நிறைவேற்றுதற் பொருட்டே வழங்கப்பட்டுள்ளன.மற்றும் இந்த உலகமும்,அதிலுள்ள நுகர் பொருள்கள், போகப் பொருள்கள் ஆகியனவும் அம்முயற்சிகளுக்கு உறுதுணையாகவே அமைகின்றன.

மனிதன் உண்பதற்கும்,உல்லாசமாகத் திரிவதற்கும், பிறர் துன்பங்கண்டு இன்புறுவதற் கும், உறங்குவதற்கும், பாலியல் இன்பம் துய்ப்பதற்கும், சிற்றின்ப நுகர்ச்சிக்கும் தான் இந்த மனித வாழ்க்கை தரப்பட்டது என எண்ணுவது அறியாமையாகும். அளவு முறைகளை கருத்திற்கொள்ளாதும், வாழ்க்கையின் நோக்கத்தை அலட்சியம் செய்தும், புலன் இன்பங் களிலும் வீண் விடயங்களிலும் வாழ்க்கையை நாசமாக்குதல் என்பது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பதாக அமைகின்றது. தனது உடல் நலமாக இருப்பதற்கும், நலம் குன்றுவதற் கும் தானே காரணம் என்பதை உணர்ந்து, வாழ்க்கை முறையைச் சீர் செய்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலை நலமாக ஆரோக்கியத்துடன் வைத்திருக்க வேண்டியது மனிதனின் மாபெரும் கடமையாகும். உடலைத் தவறான வழியில் இட்டுச் சென்று துர்ப்பிரயோகம் செய்யாது பாதுகாத்தல் மனிதனின் மாபெரும் பொறுப்பாகும்.

மனிதனுள் ஆழ்ந்து மறைந்திருக்கும் ஆன்மீகத்தை தெய்வீகத்தைச் சீரானதும் கட்டுப்பாட்டுடனுமான செயல் வழி நடைமுறைகளினால்,வெளிப்படுத்திக்காட்டவே மனிதப் பிறவி கிடைத்துள்ளது. தெய்வீக ஆற்றலை, ஆன்மிக வல்லமையை, உலக நல மேம்பாட்டிற்கு அர்ப்பணிப்புடன் வழங்குதலை நிறைவேற்றும் பொருட்டே இந்த உடலும், கருவி கரணங்களும் மனிதனுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதாவது அறத்தையும் நற்செய்கைகளையும் உறுதியாக வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவதற்கு உடலை ஓம்புதல் இன்றியமையாத தாகும்.உடலைக் கட்டுப்படுத்தி, நலம், தீங்கு ஆராய்ந்து நலன் தரும் பயனுள்ள முயற்சி வழிகளில் மனிதனை வழிப்படுத்திவிடுவது அவனிடமுள்ள புத்தியாகும். அதனையே ஆறாவது அறிவு என்றும், பகுத்தறிவு என்றும் கூறப்படுகிறது. உடல் நலம் பேணப் பகுத்தறிவு உறுதுணையாக உள்ளது. உடல் நலம் நன்றாகப் பேணப்பட வேண்டுமானால், மன நலம் உரிய முறையில் பேணப்பட்டு வருதல் அவசியமாகும். மன நலத்திற்கு கேடு விளைவிப்பவை காமம், குரோதம், லோகம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறுவகைத் தீய மனோ நிலைகள். இவற்றைத் தமிழில், முறையே பேராசை, கோபம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்று கூறுவர்.இவை மனிதனின் உட்பகைவர்கள்.இவை மறைபொருளாக மனிதனுக்கு உள்ளே இருந்து கொண்டு ,மனதில் கெட்ட உணர்ச்சிகளைத் தூண்டி அவலங்களையும், அனர்த்தங்களையும் மனித மனத்திற்கும் உடலுக்கும் சதா எற்படுத்திய வண்ணமாகவே இருக்கின்றன.இதனால் உடல் நலமும் மனநலமும் வெகுவாக பாதிப்புக்குள்ளாகின்றன.மனம் ஆரோக்கியமாக இருந்தாலேயே ,உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.எனவே உடல் நலம் சீராக அமைவதற்கு, சீரான மன நலம் ஆதாரமாகவும் அநுகூலமாகவும் உள்ளமை கருத்திற் கொள்ளப்படவேண்டியது இன்றியமை யாததாகும். மன நலம் சீராக்கம் பெறுவதற்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீய அறுகுணச் சீரமைப்பு மிக அவசியமாகும். தேவையும், பழக்கமும், சூழ்நிலைகளும் மனிதனின் உணர்ச்சிகளை ஊக்குவித்து எதிர்மறை உணர்ச்சிகளாகத் தன்மாற்றம் பெறச்செய்து, மனத்தைப் பாழ்படுத்திவிடுகின்றன. எதிர்மறை உணர்ச்சிகள் எழுச்சி பெறும்போது, அறிவு மங்கி மயங்கிவிடுகிறது. எதிர்மறை உணர்ச்சிகள் வீறுபெற்று எழுச்சி பெறாமல் தடுக்கும் ஆற்றல் அறிவுக்குத் தான் உண்டு "அறிவு அற்றங்காக்கும் கருவி", என்பது வள்ளுவர் பொய்யாமொழி.

மனம் உள்ளவன் மனிதன். மனத்தை இதமாக என்றும் வைத்திருக்க வேண்டிய கடப்பாடுடைய வனாக இருப்பதினாலேயே "மனிதன்" என்ற அருமையான பெயரைப் பெற்றுள்ளான். எனவே மனிதன் தீய உணர்ச்சிகளின் வயப்பட்டு, தீய செயல்களைப் புரிந்து, அறிவை அடகு வைத்தும் சூழ்நிலைக் கைதியாக்கியும், மனிதப் பிறவியின் நோக்கத்தை மதிக்கத்தவறியும் வருவதால் "மனிதன்" என்ற நற்பெயருக்குக் களங்கத்தை உண்டு பண்ணுகிறான் என்பதை உணர்ந்து, தம்மைத் தாமே சீராக்கம் செய்து மனிதன் என்ற நற்பெயரைக் காத்தோம்பல் ஒவ்வொரு மனிதனின் கடமையும் பொறுப்புமாகும். மனத்தை இதமாக, இனிமையாக, இன்பமாக, நிறைவானதாக என்றென்றும் வைத்திருப்பதன் மூலம் மனநலமும் அதன் பயனாக உடல் நலமும் பேண வாய்ப்பேற்படுகின்றது. "மனத்துக் கண்

மாசு இலன் ஆதல் அனைத்து அறன்"- இவ்வாறு அறம் என்றால் என்ன என்பதற்கு மிகத் தெளிவான பதிலை வள்ளுவப் பெருமான் தந்துள்ளார்."அறம் செய்ய விரும்பு" என்கிறார் ஔவையார். விரும்புவதும் விரும்பாததும் மனதின் நிலைப்பாடு. மனம் அழுக்கற்று, தூய்மையாக இருக்கின்ற நிலையிலேயே, அறம் செய்ய மனம் விரும்பி, உடலுக்கு அனுமதி வழங்குகின்றது. "உள்ளத்தில் உண்மையொளி உண்டாகில், வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்கிறார் மகாகவி பாரதியார். உள்ளத்திலும் வாக்கிலும் ஒளி உண்டானால் உடலாற் செய்யப்படுகின்ற செயல்கள் அனைத்தும் தூய்மையும் மேன்மையும் வாய்மையும் மெய்மையும் நிறைந்த அறச்செயல்கள் ஆகின்றன.

மனத்தூய்மை, மொழித்தூய்மை, மெய்த்தூய்மை என்பன உடல் நலத்தையும், மன நலத்தையும் ஒருங்கே ஓம்பி அவற்றை வளம் பெறச் செய்வதற்கும், அறிவினை வளர்ச்சி பெறச்செய்து பிறவிப் பயனை அடைவதற்கும் உறுதுணையாகின்றன. உடல் வலுவும் வனப்பும் நலமும் பெற்றுத் திகழ்வதற்கு உள்ளம் உறுதியும் அழகும் நலமும் பெற்றுத் திகழ வேண்டியது முன் நிபந்தனையாகும். அத்துடன் அறிவின் ஆட்சி ஓங்க வேண்டும். தீய உணர்ச்சிகள் அறிவினால் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். இதற்கு இறையுணர்வு வளர்ச்சி பெறுதல் இன்றியமையாததாகும். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது ஆன்றோர் வாக்கு. முகத்தில் மட்டுமல்ல முழு உடலிலும் தெரியும் என்பது அனுபவத் தெளிவு. உடல் அகத்திலிருந்தும் போஷிக்கப்படுகின்றது. எனவே அகத்தைப் பேணிவருவதன் மூலம் உடல் நலம் பேணப்படுகின்றது.

உடல் நலமாக இருப்பதற்கு நல்ல உணவு தேவை. உட்கொள்ளும் உணவு, மிகச் சுத்தமானதும், சத்துநிறைந்ததும், எளிமையானதும், ஆக இருக்கவேண்டியதும் அவசியம். உணவில் அளவு, தரம், உண்ணும் முறை, உண்ணும் நேர ஒழுங்கு என்பன கவனத்திற் கொள்ளப்படவேண்டும். உணவு மிகினும் குறையினும் நோய் ஏற்படும். நோயற்று, உடல் இருப்பின் அதுவே செல்வத்துள் தலையாயசெல்வம் ஆகும். உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளவேண்டுமாகில் உணவு, உழைப்பு, உறக்கம், ஓய்வு, உடலுறவு, என்பன வற்றில் அளவு, முறை, காலநேரம் பேணப்படவேண்டும். இவை அளவுக்கு விஞ்சினாலும், குறைந்தாலும், ஒழுங்குமுறையில் தவறினாலும் உடல் நலம் பாதிக்கப்பட்டு நோய்கள் ஏற்படும். புகைத்தல், மது அருந்துதல், போதைப் பொருள் பாவனை, தீயோர் சேர்க்கை, தீய பழக்க வழக்கங்கள், ஒழுங்கற்ற வாழ்க்கை முறை என்பன உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பன.

உடல் நலம் பேணி, ஆரோக்கியத்துடன் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உடற் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்து வருதல் மிக இன்றியமையாததாகும். உடலில் வெப்ப ஓட்டம் , காற்று ஓட்டம், இரத்த ஓட்டம், என்பன தங்கு தடையின்றிச் சீராக நடைபெறுவத்ற்கு உடற் பயிற்சிகள் உதவுகின்றன. இதனால் உடல் நலம் நேர்த்தியாக இருக்கிறது. நோய் எதிர்ப்பு ஆற்றல் கிடைக்கப்பெறுகின்றது, உடலில் உள்ள நோய்களையும் போக்கிக் கொள்ளமுடிகின்றது. கட்டுக்கடங்காத மருத்துவச்செலவையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சி, இனிமை, நிறைவு நிலவவேண்டும் என்பதே எல்லோரினதும் வாழ்க்கைக் குறிக்கோள். அதனை அடைவதற்குத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ளும் முயற்சிகளில் உடல் நலம் பேணல் மிக இன்றியமையாததாகும். அரங்கு இன்றி ஆடமுடியாது. ஆன்மிக நோக்கிலும், உடல் நலம் பேணுதல் மிக முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்ததாக உள்ளது. ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்கு, நல்வினை தீவினைகளை அனுபவித்துத் தொலைப்பதற்கும் அதன் மூலம் இருவினையொப்பு, மலபரிபாகம், அடையப் பெற்று வீடுபேறு அடைவதற்கும் கருவியாக அமைவது இந்த உடல் ஆகும். உயிர் தன்மூலத்தை அறிந்து கொள்ள, ஆன்மிகப் பயிற்சிகளைப்புரிந்து இறைவனை அடைய, இறைவனால் உயிருக்கு வழங்கப்பட்ட உடலை உயர்வாகக் கருதி, அதன் நலன் ஓம்பிப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு மனிதனுக்கு உண்டு. உடலை அழுக்கு என்றே இழுக்கு என்றோ கருதி அதனை அலட்சியம் செய்தல் ஆகாது. ஆன்மிகப் பயணம் தடைப்படாமல் அதன் இறுதி இலக்கை அடைய உறுதுணையாக வருவது உடல் என்பது உணர்தற்பாலது, மனித வாழ்வில் எத்துறையிலேனும் பயன்களை அடைய வேண்டுமானால் உடல் மூலம் தான், அவை நிறைவேற்றப்படவேண்டும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்று திருமூலர் கூறி, உடலின் மதிப்பினை உயர்த்திக் காட்டுகிறார்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

திருமூலர்

உயிரும் உடலும் இணைந்த நிலையில், அவற்றின் நல்லுறவிலேயே,மனித வாழ்க்கை நடைபெற்று வருகின்றது. உடலுக்கும் உயிருக்குமிடையே பிணக்கு, முரண்பாடு என்பன ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதற்கு உடல் நலம் பேணப்பட வேண்டும் என்பதை உணர்வோமாக. உடல் நலம், மன நலம், அறிவு நலம், உயிர் நலம் என்பன ஒன்றில் மற்றொன்று தங்கியும் ஒன்றை ஒன்று தாங்கியும் இருத்தல் அவற்றின் இயல்பு நிலையும், இயற்கை நியதியும் ஆகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல், அறிவில் முழுமை பெறுதல், வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் பெறுதல், ஈற்றில் தெய்வீக நிலைக்கு உயர்ச்சி பெறுதல், பிறவியின் இறுதிநோக்கமான முத்தியின்பத்தை எய்துதல்- இவை அனைத்தும் நிறைவு பெறுவதற்கு ஆதாரமாகவும் உறுதுணையாகவும் விளங்குவது நமது உடல் என்பதை உணர்ந்து உடலை நலமோடும் வளமோடும் பேணி வரவேண்டியது இன்றியமையாததாகும்.

## புரட்டாதி மற்றும் ஐப்பசிமாத குருபூஜை தினங்கள்

| | | |
|---|---|---|
| **12.09.2012** | **ஆவணி 27 புதன்** | **நீலகண்ட சிவாச்சாரியார் குருபூஜை** |
| **29.09.2012** | **புரட்டாதி 13 சனி** | **கடையிற் சுவாமி குருபூஜை** |
| **12.10.2012** | **புரட்டாதி 26 வெள்ளி** | **அருணந்தி சிவாச்சாரியார் குருபூஜை** |
| **29.10.2012** | **ஐப்பசி 13 திங்கள்** | **திருமூலர் குருபூஜை** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

தொடர்ச்சி...

-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

16. பேராசை எனும் பிணியில் பிணிபட்
டோரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோக துரந் தரனே

## பதவுரை

வீரா- வீரமூர்த்தியே, முதுசூர்பட- பழமையான சூரபன்மனுடைய அசுர வடிவம் அழியும்படி, வேல் எறியும்- வேலாயுதத்தைச் செலுத்திய, சூரா- சூரமணியே! சுரலோக துரந்தரனே- தேவவுலகத்தைக் காத்தருளியவரே! ஓரா வினையேன்- ஆராய்கின்ற நல்லறிவு இல்லாத தீவினையுடைய அடியேன், பெரு ஆசை எனும்- பெரிய ஆசையாகிய, பிணியில் பிணிபட்டு- தளையில் கட்டுண்டு, உழலத் தகுமோ- சுழலுதல் தகுதியோ?

## பொழிப்புரை

வீரமூர்த்தியே! பழமையான சூரபன்மனது அசுரத் தன்மையை யழித்த சூரமூர்த்தியே! தேவ உலகத்தைக் காத்தருளியவரே! ஆராய்தல் இல்லாத தீவினையேனாகிய அடியேன் பேராசையென்ற பெருந்தளையினால் கட்டுண்டு நிலையின்றிச் சுழலுதல் தகுதியோ? தேவவுலகத்தையே காத்த நீர் இச்சிறியேனைக் காத்தருளும்.

## விரிவுரை

மனிதனை நல்வழியில் போகவிடாமல் கட்டும் வலிமையுடையது ஆசையாகிய சங்கிலி. ஆசைதான் வறுமை என்கிறார் குமரகுருபரர்.

"அல்கா நல்குரவு அவாவெனப் படுவது
செல்வம் என்பது சிந்தையின் நிறைவே"

-குமரகுருபரர்.

எத்தனை வந்தாலும் போதாது என்று எண்ண வைத்து மனிதனைப் பேயாய் அலைய வைத்து ஆட்டி வைப்பது ஆசை.

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். -திருக்குறள்.

"ஆசைச் சுழற்கடலுள் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாங் கட்டி
ஆளினுங் கடல்மீ திலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன் மிகவைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநாள் இருந்த பேரும்
நிலையாக வேயினும் காயகற்பந் தேடி
நெஞ்சபுண் ணாவர் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாக முடியும்
உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனாந்தமே.

-தாயுமானவர்.

பெருங்காற்றிலே அகப்பட்ட பஞ்சைப்போல் ஆசையால் மனம் அலையும். அதனால் கல்வி கேள்விகள் யாவும் அழிந்து ஐம்புலன்களால் அழிக்கப்பட்டு அழிவர். நிராசையில்லையேல் இறைவனை அடைய முடியாது என்கிறார் தாயுமானார்.

ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்
செனவுமன தலையுங் காலம்
மோசம்வரும் இதனாலே கற்றதுங் கேட்
டதுந்தூர்ந்து முத்திக் கான
நேசமும்நல் வாசமும் போய்ப் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ!
தேசபழுத் தருள்பழுத்த பராபரமே
நிராசையின்றேல் தெய்வம் உண்டோ?

ஐந்து வீடு தர மறுத்து மண்ணாசையால் பதினொரு அஷரோணி சேனைகளுடன் குலத்தோடு துரியோதனன் அழிந்தான்.

பெண்ணாசையால் அசுரகுலம் முழுவதும் அழிய இராவணன் மாண்டான். ஆசையால் அழிந்த சாம்ராஜ்யங்கள் பலப்பல.

**ஓரா வினையேன் உழலத் தகுமோ:-**

ஓர்தல்- ஆராய்தல்.

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே"

-சிவபுராணம்.

"தனக்கு நன்மை பயப்பது எது? தீமை பயப்பது எது? உயிர்த்துணை யார்? உய்யும நெறி எது? நித்தம் எது? அநித்தம் எது? நான் ஏன் பிறந்தேன்? எங்கிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தேன்? எங்கே போக வேண்டும்? எங்கே போய்க்கொண்டிருக்கின்றேன்?" என்று ஆராய்தல் வேண்டும்.

வினையிலே கிடந்து அழுந்துவதனால் "வினையேன்" என்றார்.

**வீரா:-**

முருகவேள் வீரமூர்த்தி.

**முதுசூர் பட வேலெறியும் சூரா:-**

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசு புரிந்த சூரபன்மனை அடக்கிய சூரனே! எனது பேராசையை அடக்கியருள் என்கிறார்.

"சூர சூர சூராதி சூரர்க் கெளிவாயா
தோகையா" -(பேரவா) திருப்புகழ்.

**சுரலோக துரந்தரனே:-**

துரந்தரன்- பொறுப்பை வகிப்பவன்; தேவ லோகத்தைக் காக்கும் பொறுப்பை வகிக்கின்றவன்.

**கருத்துரை**

சூரசங்கார மூர்த்தியே! "ஆசைப் பிணியை அகற்றி" அடியேனை ஆண்டருள்.

---

## சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை- 32

**பல்லவி**

**செந்தமிழிற் பாடி சேவிக்கும் வரந்தா- செல்வச்**
**சந்நிதிக் கந்தனே சண்முகனே! குகனே!**

**அநுபல்லவி**

**சிந்தைவைத் துன்பாதம் சேவித்தேன் திருமுருகா!**
**வந்துளம் இருந்தென்னை வாழ்த்திடுவாய் முருகா!**

**சரணம்**

**சந்தத் திருப்புகழை தரருண கிரிபாதம்**
**சந்ததம் வாழஅருள் புரியுசண் முகநாதா!**
**சந்நிதி தனில்வாழும் சக்திவேல் தனைப்பாடி**
**கந்தமா தனம்சேரும் கதியினை நான்பெறவே**

**தந்தையும் தாயுமாகி தரணிநின் றருள்வேலா!**
**எந்தையே பல்லுயிர்க்கும் இறைவனே! குருபரனே!**
**சுந்தர மறைபோற்றும் சுடர்வடி வேலவனே!**
**முந்தைசெய் வினையோடி முருகனுன் பதம்பெறவே.**

**(செந்தமிழ்)**

**-இராசையா குகதாசன்-**

# மகா மந்திரம்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

கலியுகத்திலே சங்கீர்த்தன இயக்கத்தால் பகவானை வந்தனை செய்யும் முறையைப் பரப்பி,பாரதம் முழுவதும் இறையுணர்வைப் பிரச்சாரம் செய்த ஸ்ரீ சைதன்ய மகாப் பிரபுவே இக்கலியுகத்தின் அவதாரமாவார்.இறைவனின் இந்த அவதாரம் ,தீயவர்களை அழிப்பதற்குப் பதிலாக கடவுளின் கருணையால் அவர்களை மாற்றி விடுவிக்கின்றார்

ராதை பிரேமையின் வடிவம் எல்லா உலகங்களையும் ஆட்கொண்ட ஸ்ரீ கிருஷ்ணனையே தன் பக்தியில் ஆட்கொண்டவள் ராதா. ஒரு முறை ராதையின் பிரேம பக்தியால் கட்டுண்ட கிருஷ்ணன் அவளைக் கேட்டான் "ராதா சர்வ காலமும் என்னையே சிந்திக்கிறாய் எனக்குப் பணிவிடை செய்வதிலேயே ஆனந்தம் கொள்கின்றாய். இந்தப் பற்றற்ற சேவையில் இன்பம் தான் என்ன? என்று.

அதற்கு ராதை,"கண்ணா உன்னைச் சரணடைவதில், உன்னைத் தியானிப்பதில், உன் தெய்வீக அழகைத் தரிசனம் செய்வதில்,உன் நாமத்தை உச்சரிப்பதில் உள்ள பேரின்பம் என்னவென்று உனக்குத் தெரியாது. அதை நீ உணர வேண்டுமாயின் நீயே ராதையாகி அந்தக் கண்ணனைத் தேடிப்பார். அப்போ தெரியும் அந்தப் பேரானந்தம் என்று சொன்னாள். கண்ணனுக்கு மட்டும் ஆசையிருக்காதா? கண்ணனைத் தேடி அலைவதில் கிடைக்கும் ஆனந்தத்தை நுகர கண்ணனே மனித வடிவில் "ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய மகாப்பிரபு"வாக அவதாரம் செய்தார்.

வங்காளதேசத்திலே நவத்வீபம் என்ற இடத்தில் கங்கைக் கரையில் தோன்றித் தன் வாழ்நாளெல்லாம் "கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று தேடி அலைந்து, இனிய நாம ஸங்கீர்த்தனத்தினால் இறைவனை அடையலாம் என்று எல்லோர்க்கும் வழிகாட்டிய அவதார மூர்த்தியாவர் முதலில் இல்லறத்தை மேற்கொண்டு, பின்பு சன்யாசம் ஏற்று கிருஷ்ணனுக்கு வாழ்நாள் முழுவதும் சேவை செய்தார். கண்ணன் ஒருவனையே தியானித்து, அவனுக்கே பணிபுரிந்து இறுதியில் பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் இறைவனுடன் ஐக்கியமானார். "எனக்கு நிறையப் பிறவிகளைத் தா அப்போது தான் உனக்கு அடியவனாகிச் சேவை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்". "நீ இனிய கற்கண்டு நான் அதைச் சுவைத்துக் கொண்டிருக்கும் எறும்பு. என்னையே கற்கண்டாக்கி விடாதே. நான் எறும்பாகவே இருந்து உன் ரூப, நாம, குண லாவண்யங்களைச் சுவைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று பிறவியை விரும்பிக் கேட்டவர். அவர் சதா சர்வகாலமும் பாடிய ஒரே நாமாவளி,

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே.

என்ற மகா மந்திரம் தான். பாரதம் முழுவதும் பகவான் ஸ்ரீ கிருஷ்ண நாமத்தைப் பாடிக் கொண்டே பாதயாத்திரை செய்த பெரிய மகான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக்ஞங்களைச் செய்வதால் சிறைப்பட்ட ஜீவன்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கிருஷ்ண உணர்வுடையோராகி எல்லா வகையிலும் தெய்வீகமாகின்றன. வேத நூற்களில் இக்கலி காலத்திற்கு ஸங்கீர்த்தன யக்ஞம் (நாமங்களைப் பாடுதல்) கூறப்பட்டிருக்கிறது. கிருஷ்ண உணர்வும், ஸங்கீர்த்தனமும் ஒன்றிணைகின்றன. இக்கலியுகத்தின் மக்களையெல்லாம் விடுவிப்பதற்காக பகவான் சைதன்ய மகாப் பிரபு இந்த உன்னத முறையை அறிமுகப்படுத்தினார்.

சதா சர்வ காலமும் கிருஷ்ணா கிருஷ்ணா என்று அவன் நாமத்தையே கூறி, அவனையே எண்ணி, ஆராதித்து, நாமத்தை ஸ்மரித்து ஆராதிப்பதில் கிடைக்கும் பேரானந்தத்தை வார்த்தைகளில் விளக்கலாகாது. அவனைத்தேடி,அவன் நாமத்தைப் பாடி,அவனைத் தரிசிக்கும்போது கிட்டும் தெய்வீக ஆனந்தத்திற்கு இணையேது? ராதை கூறிய வார்த்தைகளை மெய்ப்பிப்பதற்காக பகவான் கிருஷ்ணர் கலியுகத்தில் கிருஷ்ண சைதன்யராகத் தோன்றி, ராதையின் பாவத்தோடு தெருவெல்லாம் கிருஷ்ணா கிருஷ்ணா என்று பாடித்திரிந்து பக்தி பரவசநிலையில் கண்ணனைத் தேடித் திரிந்து, கிருஷ்ண நாம மகிமையை எடுத்துக்காட்டியுள்ளார். இன்று உலகமெல்லாம் ஹரே கிருஷ்ண இயக்கத்தினர் பக்திப் பரவச நிலையில் ஹரே கிருஷ்ண மகா மந்திரத்தைப் பாடி, கிருஷ்ணனைத் தேடி, ஆடி ஆனந்தம் அடைகின்றனர். கண்ணன் கீதத்தையும், பாதத்தையும் தேடி அவன் நாம ஸங்கீர்த்தனத்தில் மனதைப் பறிகொடுத்து, பக்திப்பரவசத்தில் ஊண், உறக்கமின்றி அகில உலகிலும் ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் தொழிற்பாடு வியக்க வைக்கின்றது. குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்ட கண்ணனின் கீதம் பாரெல்லாம் பரந்து விரிந்தது.

பகவானின் நாம கீர்த்தனம் மறுபிறவியில்லாமலிருக்க வழிசெய்கின்றது. இறைவனின் நாமத்தை வாயாரச் சொல்வதே இறைவழிபாடு. அதனைக் கேட்பதே பூஜை. நாமத்தின் ஒவ்வொரு அட்சரத்திலும் அட்சரத்தின் அணுவிலும் இறைவன் நிரம்பியுள்ளார். அந்த நாமத்தைச் சரியாகக் கூறினாலும், உளறினாலும் இறைவன் ஏற்றுக் கொள்கிறார். வைகுண்டனின் பெயர் கூறுவது அனைத்து வினைப் பயன்களையும் அகற்றும் இறைவனின் ரூபத்தை விட இறைவனின் நாமம் அதிவேகம் உள்ளது. பக்தி மார்க்கத்தின் ஒன்பது படிகளில் சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம் மூன்றும் முதன்மையானவை.

பகவான் ஸ்ரீ சைதன்ய "எல்லாம் வல்ல பரம்பொருளே, செல்வம் சேர்க்கவோ சிற்றின்பங்களிலோ எனக்காசையில்லை.என்னைப் பின்பற்றும் கூட்டத்திலும் எனக்காசை இல்லை. உமது பக்தித் தொண்டில் பிறவிதோறும் ஈடுபட்டிருக்கவே நான் விரும்புகின்றேன் எனப் பிரார்த்திக்கிறார்.

கிருஷ்ணர் என்றால் "உன்னதமான ஆனந்தம்" ஆனந்தம் நிறைந்த தனது லீலைகளைக் காட்டுவதற்காகப் பிரபு இந்த பௌதிக உலகில் தோன்றினார். பகவானுடைய இருப்பிடம் கோலோகம்."ப்ரமஹ்மஜ்ஜோதி" பரலோகமான கிருஷ்ணலோகத்திலிருந்து வெளிப்படுகின்றது. அவரிடமிருந்து வீசும் ப்ரஹ்ம ஜோதியால் ஆன்மீகவானமானது ஒளியேற்றப் பட்டிருக்கிறது. சூரியனுக்கோ, சந்திரனுக்கோ, நெருப்புக்கோ அவசியமில்லை பிரம்மலோகமோ வேறு எந்தக் கிராமத்திற்குச் சென்றாலும் பிறப்பு, மூப்பு, பிணி, இறப்பு என்பவற்றை அனுபவிக்கவேண்டும். ஆனால் கிருஷ்ண கோகுலத்திற்கோ அல்லது ஆன்மீக வானத்திற் குட்பட்ட ஏதாவது ஒரு கிரகத்திற்குப் போனால் மட்டுமே இந்த பௌதிக துயர்களை அனுபவிக்க வேண்டியில்லை.

"கோலோக பிருந்தாவனம்" எனும் மிகவுயர்ந்த ஆன்மீக கிரகம் முழுமுதற்கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரின் வாசத்தலமாகும். பக்திமய சேவை செய்வதன் மூலம் பற்றற்றவர்களாக

ஆக வேண்டும். இறைதொண்டில் பற்றுக்கொள்ளாவிடில் பௌதிக இயற்கைக் குணங்களில் இருந்து விடுபட இயலாது பகவான் சேவையில் ஈடுபடுவதால் பொய்யான நிலையற்ற ஜட இன்பங்களால் மயக்கப்படாத ஒருவனால் மட்டுமே அழிவற்ற நிரந்தரமான நித்தியராச்சியத்தை அடையமுடியும். அந்தப் பரம ராச்சியத்தை அடைய ஒருவன் இச்சையும் ஏக்கமும் கொள்ளுதல் வேண்டும் அந்தத் தேசத்தை அடைந்தவன் பௌதிக உலகிற்கு திரும்பி வரவேண்டியது இல்லை. மரணசமயத்தில் எவன் ஸ்ரீ கிருஷ்ணனை நினைக்கிறானோ அவன் ஆன்மீக உலகை ஸ்ரீ கிருஷ்ணரை அடைகிறான். சச்சிதானந்த மயமான அவர் நிலையை அடைகின்றான். இக்கலிகாலத்தில் குறை ஆயுளும் ஆன்ம உணர்வில் மிக மெதுவான போக்கும், பற்பல கவலைகளால் தொல்லையுற்ற மனமும் கொண்ட சாதாரண மக்களுக்கு ஆன்ம உணர்ச்சி ஏற்பட ஒரே வழி இறைவனின் நாம ஸங்கீர்த்தனமே. தூய்மையாக்கப்பட்ட புலன்களால் கிருஷ்ணனுக்குத் தெர்ண்டு செய்வதே கிருஷ்ண உணர்வாகும். அவருடைய அன்புத்தொண்டிலே ஈடுபட்டு வெகுவிரைவில் அவருடைய வாசத்தலத்திற்கு எம்முடைய நித்திய வீட்டிற்கு நாம் திரும்ப வேண்டும் அதற்கு மகாமந்திரமாகிய ஹரே கிருஷ்ண நமாவளியைப்பாடி பெருமான் பெருங்கருணையைப் பெறவேண்டும். இதனைப் பாடுவதற்கு எந்த விதமான நியமமும் தேவையில்லை. ஸ்ரீ கிருஷ்ணனை அடைவதற்கு சுலபமான, எளிமையான, இனிமையானவழி. இக்கீர்த்தனத்தை உள்ளத் தூய்மையோடு பக்திப் பரவசமாகப்பாடிப் பிறவிப் பயனைப் பெற்று உய்வோமாக,

கலியையும் பலிகொள்ளும் துளி நியமமும் இல்லாத
கீர்த்தனம் பாடீரே கீர்த்தனம் பாடீரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராமராம ஹரே ஹரே
பாடிடும் பக்தரையும் பாடிடும் தலத்தையும் பாவனமாக்கிடும்
கீர்த்தனம் பாடீரே கீர்த்தனம் பாடீரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
வாரி இறைத்தாலும் ரத்தினம் ரத்தினமே
அருமையில் அருமையான கீர்த்தனம் பாடீரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே.

---

## நெய்யால் நெருப்பு அவியுமா?

**பொருளைச் சேர்ப்பதாலும், பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதாலும், மக்களைப் பெறுவதாலும் துன்பம் நீங்குமா? இன்பத்தை அடைய முடியுமா? முடியாது. ஏன்? துன்பமாகிய நெருப்புக்கு மனைவி, மக்கள், பொருள் இவைகளெல்லாம் நெய் போன்றவை. நெய்யினால் நெருப்பை அணைக்க முடியாதுதானே? போதும் என்ற மனமே இன்ப மாளிகையின் முற்றமாகும். எவ்வளவு எளிமையான வழி.**

-அறநெறிச் சிந்தனை-

# இந்து சமய பண்பாட்டு மரபில் மடங்கள் பற்றிய ஆய்வு (தொடர்ச்சி...)

[சிறப்பாக யாழ்ப்பாணம்]

திரு கு. கோபிராஜ் அவர்கள்

ஈழத்தின் ஆதீனங்களில் முதன்மையானது திருஞானசம்பந்தர் ஆதீனமாகும். இதனை 1966ஆம் ஆண்டு ஸ்ரீமத் ஸ்வாமிநாத தம்பிரான் சுவாமிகள் நிறுவினார். திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மகா சந்நிதானத்தைக் குருவாகப் பெற்று மந்திர உபதேசமும் காஷாயமும் வாங்கிக் கொண்டார்கள். 1977 ஆவணி கார்த்திகை நட்சத்திரத்தில் குருமுதல்வராக தம்பிரான் சுவாமிகள் அபிஷேகம் செய்து கொண்டார்.

திருஞானசம்பந்தர் ஆதீனம் பொருள்வளம் படைத்தன்று. ஆனால் அருள்வளம் நிரம்பப்பெற்றது. பணம் இல்லை எனினும் பண்பு நிலவுகிறது. ஆதீன சம்பிரதாயங்களைக் கட்டிக்காத்து வருகிறது. சமயப் பிரசாரத்துக்கு என தம்மை அர்ப்பணித்த ஒரு சிலரே இங்கு காணப்படுகின்றனர். ஆதீனத்தில் மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகள் தவிர இலவச சமயதீட்சை, திருமணக் கிரியை, விசேட தீட்சை, உபநயனம், வேதபாராயணம், குருபூசை, மகேஸ்வர பூசை, மாநாடுகள், விழாக்கள், யாத்திரிகர்கள் போன்றோரை உபசரித்தல் முதலியன ஆதீனப் பணிகளாம்.

ஆதீனம் தொடர்ந்து இயங்க வேண்டும் என்பதற்காக 1977இல் இளைஞனாக இருந்த சுந்தரலிங்கத்திற்கு மந்திர உபதேசம் செய்து ஸ்ரீமத் சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள் ஆக்கினார்கள். இவர் சிறந்த சிவ பக்தனாகவும், பார்வைக்கு எளியவர், அமைதியாக பேசுபவர் ஆவர். ஈழத்துத் திருக்கோயில்கள் மடங்கள், ஆதீனங்களை அடிப்படையாக வைத்து நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம், திருவிழாக் காலங்களில் அன்னதானப்பணி இடம்பெறுகிறது.

இதில் ஈழத்தில் நித்திய அன்னதான பணிகளாவன நயினை நாகபூஷணி அம்மன், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அன்னதான மடத்தில் வாராந்த அன்னதானப்பணி இடம்பெறுவதைக் காணலாம். உலகிலே அதிக அன்னதானம் நடைபெறும் ஆலயமாக நாள்தோறும் 50 ஆயிரம் பேர்வரை பங்குபெறும் அன்னதான ஆலயமாக "தர்மஸ்தலம்" இது கன்னட மாநிலத்தே உள்ளது.

இந்துசமய நிறுவனமான மடங்கள், சத்திரங்கள், ஆதீனங்கள் என்பனவற்றில் "அன்னதானம்" அன்று தொடக்கம் இன்றுவரை நடைபெற்று வருகின்றன. இன்றும் யாழ்ப்பாண ஆலயங்களில் மடங்கள், ஆதீனங்கள் பெருமளவு அழிக்கப்பட்டு வருகின்றபோதும் பல ஆலயங்களில் இன்றும் அன்னதானப் பணியினைத் தொடர்கிறார்கள். இந்தவகையில்,

1. துறவிகளுக்கு அடியவருக்கு உணவு கொடுத்தல்- "மாகேஸ்வரபூசை"
2. சாதாரண அனைவருக்கும் அன்னம் கொடுத்தல்- "அன்னம்பாலிப்பு"
3. ஏழை எளியவருக்கு, யாசகர்களுக்கு உணவு கொடுத்தல்- "அன்னதானம்" ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இம்மூன்று நிலையும் பொதுவாக "அன்னதானம்" என அழைக்கப்படுகிறது. தானங்களில் உயர்ந்த தானம் "அன்னதானம்" ஆகும். இதனைப் புறநானூறு, "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" எனக் கூறுகிறது.

இதனை நாவுக்கரசர் "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்று கூறுகிறார். சம்பந்தரும் அப்பரும் இணைந்து படிக்காசு பெற்று அதன்படி அன்னம்பாலித்த வரலாறு, சுந்தரர் பரவையாரது அன்னதானப் பணிக்கு குண்டையூரிலே நெற்குவியல் பெற்ற வரலாற்றையும் நாம் நோக்கலாம்.

ஈழத்தின் பெருமையுடைய புராதன ஆலய மடங்களை நோக்கும்போது முன்னேஸ்வரத்தே மாயவனாற்றம் கரையிலே (தெதுறு ஓயா) "வியாசர்" என்ற பெயரில் மடமொன்று ஸ்தாபித்து அவ்விடத்தே தங்கினர். தினமும் இங்கே நீராடி வடிவழகாம்பிகை சமேத முன்னை நாதனை வழிபாடு செய்து விமோசனம் பெற்றார். தற்காலத்தே இது "வியாசர் மடம்" என அழைக்கப்படுகிறது.

(தொடரும்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்





ஆச்சிரமத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வில் வில்லிசைக் கலைஞர் க. சத்தியதாஸ் அவர்கள் வில்லிசை நிகழ்த்துவதையும், குப்பிளான் ஐ. சண்முகலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்துவதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் சமூகப் பணிகளின் வரிசையில் முன்பள்ளி மாணவர்களுக்கான புத்தகப் பையினையும், பாடசாலை மாணவி ஒருவருக்கான துவிச்சக்கர வண்டியினையும் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட காட்சியைக் காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[தொடர்ச்சி...

# மரணம் - அப்புறம்

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

கேள்வியாளர்: பிறப்பு- இறப்பு சுழற்சியிலிருந்து ஆண்கள் விலகிக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேள்விப்பட்டோம். அதைப்பற்றி நீங்கள் சிறிது விளக்கமுடியுமா? (பதில் தொடர் கீழே)

உயிர்சக்தி ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில் இருக்கும்போது தான் நீங்கள் உடலைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும். அதன் தீவிரத்தை ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி உயர்த்தினீர்கள் என்றால் நீங்கள் உடலைவிட்டுப் போய்விட நேரும். எனவே உலகில் இரண்டு வகையான யோகாவைத்தான் நீங்கள் பார்க்கமுடியும். ஒரு வகை, விலகிக்கொண்டே செல்வதன்மூலம் கடைசியில் உயிர்ச்சக்தியை தள்வடையச் செய்து உடலைவிட்டு நீங்குவது மற்றொருவகை. உயிர்ச்சக்தியின் தீவிரத்தை அதிகப்படுத்திக்கொண்டே வருவதன் மூலம் மேற்கொண்டு உடலைத் தாங்கமுடியாமல் உடலை விட்டு நீங்குவது. எனவே உயிர்ச்சக்தி மிகவும் தீவிரமடைந்தாலும் சரி, மிகவும் தளர்ந்தாலும் சரி உடல் தன்மை உங்களைப் பிடித்து வைத்திருக்க முடியாது.



சமூகத்தில் உயிர்ச்சக்தியை தீவிரமடையச் செய்யும் முறைக்கு மிகுந்த வரவேற்பு இருக்கலாம். ஆனால், அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. உங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார் கள் என்பது உங்கள் உயிர்த்தன்மைக்கு முக்கிய மில்லாத விடயம். அதற்குச் சமூக ரீதியில் முக்கியத் துவம் இருக்கலாம். ஆனால் உங்களைப்பற்றி இந்த உலகம் என்ன நினைக்கிறது என்பதிலோ அல்லது நீங்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதிலோ உங்கள் இருப்பைப் பொறுத்தவரையில் எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆன்மீகம் என்று சொல்லும்போது உயிர்த்தன்மையளவில் எப்படி வளர்ச்சியடைவது என்று பார்க்கிறீர்கள். சமூக அளவிலோ உணர்ச்சி ரீதியாகவோ உளவியல் ரீதியாகவோ எப்படி? வளர்ச்சியடைவது என்று பார்ப்ப தில்லை. உண்மையில் நீங்கள் வேறெங்கோ போக விரும்புகிறீர்கள். ஏனெனில் உங்கள் உணர்ச்சி உங்கள் சமூகம், உங்கள் உளவியல் எல்லாம் உங்களது கற்பனைதான். இல்லையா? வேண்டுமானால் அவை சில நேரங்களில் இன்பம் தரும் கற்பனையாக இருக்கலாம். ஆனாலும் அவை கற்பனைதான் இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உயிரின் உடல் தன்மையைக் கடந்த வளர்ச்சியானது அவர் இந்த உலகில் என்னவாக இருக்கிறார்; அவர் தன்னைப்பற்றி என்ன எண்ணம் வைத்திருக்கிறார்; மற்றவர்கள் அவரைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அமைவதில்லை. அவர் எவ்வளவு விழிப்புணர்வுடன் இருக்கிறார் எந்த அளவு பொருட் தன்மையைக் கடந்த நிலையில் இருக்கின்றார் என்பதைப் பொறுத்தே அமைகிறது. எனவே ஒருவர் இந்த எல்லா செயல் முறைகளிலிருந்தும் உண்மையாகவே விடுதலை பெறவிரும்பினால், அந்த நோக்கத்தின் அருகில் செல்ல பல வழிகள் உள்ளன. ஆனால் காற்றுக் குமிழியை உடைத்துக் கொண்டால் விழிப்புணர்வுடன் செயற்பட முடியாது, ஏனெனில் பகுத்துப் பார்க்கும் தன்மை உங்களிடமிருந்து நீக்கப்பட்டு விடுகிறது.



இதனால்த்தான் மனிதப்பிறவி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மனிதப் பிறவியில் மட்டும் தான் பகுத்துப்பார்க்கும் தன்மையைப் பயன்படுத்தி விழிப்புணர்வுடன் செயற்பட முடியும். இந்த நிமிடம்வரை நீங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் இப் போது இந்த வினாடி நீங்கள் விழிப்புணர்வுடன் செயலாற்ற முடியும், இல்லையா? இதுவரை நீங்கள் மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந் திருக்கலாம், அது ஒரு பொருட்டல்ல. இந்த வினாடி நீங்கள் விழிப்புணர்வுடன் செயற்பட முடியும். அந்த சுதந்திரமும் பகுத்துப் பார்க்கும் தன்மையும் எப்போதும் உங்களிடம் இருக்கிறது

விழிப்புணர்வு ஒரு தீவிரத்துக்கு வந்து விட்டாலோ, அல்லது தீவிரம் குறைந்து விட்டாலோ உடலில் வாழ்வதற்கு தகுதியற்ற வர்களாகிறார்கள். அந்த நிலையில், குமிழியை முழுவதுமாக உடைத்துவிடக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. குமிழியை உடைத்த பிறகும் உடலில் தங்கியிருக்க வேண்டுமானால் அதற்குத் தொழில்நுட்பம் தேவைப்படுகிறது. எல்லாத் தந்திரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அல்லது உடலைத் தக்க வைத்துக்கொள்ள நாமாகவே சில கர்மாக்களைச் செய்ய வேண்டும். இதற்கு மக்கள் பல செயல்களைச் செய்கிறார்கள். நான் என்னைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ஏனெனில் பல செயல்கள் எனக்குள் நடந்து கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு இராமகிருஷ்ண பரம ஹம்சரை எடுத்துக் கொள்வோம். அவர் வாழ்ந்த காலத்திலேயே மக்கள் அவரை ஒரு கடவுளாகப் பார்த்தார்கள். ஆனால், இராமகிருஷ்ணர் உண்ணும் விடயத்தில் வெறிபிடித்தது போலிருந்தார். இது உங்களுக்குத் தெரியுமா? அவர் உணவு விடயத்தில் பைத்தியமாக இருந்தார். சீடர்களுடன் பேசிக்கொண்டிருப்பார். திடீரென அவர்களைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு சமையலறைக்குச் சென்று, சாரதாவைப் பார்த்து "இன்று என்ன சமைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்பார். உணவு விடயத்தில் அவ்வளவு பைத்தியமாக இருந்தார்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை எங்கே காணலாம்?

செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள்

"பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்" அவனை நாம் கண்ணால் காணமுடியாது. அவன் எங்கும் உள்ளவன்; எல்லாம் அறிபவன், எல்லாமாயுள்ளவன் பிரபஞ்சமே அவனது தோற்றம். இறைவனைக் காண கோயில், குளம், யாத்திரை என்று அலைகிறோம். இறைவனுக்கு மூன்று வடிவங்கள் உள. அருவம் கண்ணுக்குப் புலப்படாதது. உருவம் கண்ணால் காண்பது. மாதா, பிதா, குரு, ஞானிகள், யோகிகள்; அருவுருவம் கண்ணுக்குத் தெரியாத ஒன்று. கண் முன்னே உருவமாக வைத்து வழிபடும் சிலை வடிவங்கள். இந்த அருவுருவான சிலைகளையே கோவில்களுக்குச் சென்று வழிபடுகிறோம். இது விக்கிரக ஆராதனை.

இறைவனை அறிய ஒரு வழி உண்டு. அது சாதாரண மக்களால் இலகுவில் காணமுடியாது. அதற்கு இடைவிடாத தியானப் பயிற்சி வேண்டும்

"காசி காசி என்று கால் கடுக்க ஓடுநீர்
காசி நீர் உம்முள்ளே காணலாம் உண்மையே"

எத்தனையோ மாந்தர்கள் இறைவனைத் தேடி ஓடி பல நாள்கள் கழிந்தும் காணாமல் மாண்டுபோனார்கள். யோகர் சுவாமிகள், திருமூலர், பரமஹம்சர் இடைவிடாத உள்முகப் பயிற்சி (தியானம்) செய்து இறைவனைக் கண்டவர்கள்.

சூரியன் உதிப்பது மறைவது
சந்திரன் தேய்வது வளர்வது
காற்று இதமாக வீசுகிறது; புயலாக மாறுகிறது
இரவு பகல் மாறிமாறி வருகிறது
மனிதன் பிறக்கின்றான் இறக்கின்றான்

இவையெல்லாம் எப்படி நடக்கிறது? நம்மால் இவற்றை நிகழ்த்த முடியுமா? நாம் அதைப்பற்றி சிந்திக்கிறோமா? இல்லை அது புரியாத புதிர். விஞ்ஞான மனிதனால் காணமுடியாது. அதற்கு ஒரு மூலப்பொருள் உண்டு என்பதை மெஞ்ஞானிகள் கண்டுள்ளார்கள். அது எது? அதுதான் கடவுள், இறைவன் என்று பேசப்படும் மெய்ப்பொருள். மெய்ப்பொருள் என்றும் அழியாது. ஆதியும் அந்தமும் இல்லாதது- மெய்ப்பொருளான இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சம் (ஐம்பூதங்கள்) அழிவதில்லை. ஆனால் பிரபஞ்சத்தில் காணப்படும் பொருட்கள் காலத்துக்குக் காலம் அழிந்துபோகும்.

இவை அழிந்து போகும் என்று அறிந்தும் நமக்குள் எனது உனது என்ற அதிகாரப் போட்டி. இந்த நாடு, இந்த நிலம், வீடு என்னுடையது என்று கோல் போட்டு அளக்கிறோம். நீதிமன்றம் வரை போகின்றோம் உரிமைகோரி.

நாம் சற்று சிந்திப்போம். "வந்தவாறு போகும் மாயமாம் இதற்கு நீ மகிழவேண்டாம்" இவை எதுவும் நமக்குச் சொந்தமல்ல. உண்டாக்கியவனுக்கே சொந்தம் அவனை நாம் தேடிக் காணவேண்டும் எங்கே?

வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனாகி உயிராகி

உண்மையுமாய் இன்மையுமாய் உள்ள இறைவன் எம் உள்ளத்தில்தான் குடிகொண்டுளான். திருமூலர் சொல்கிறார்,

"............ உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்" என நம் கண்ணுக்குத் தெரியும் பொருள் போல இறைவனைக் காணமுடியாது. உள்ளத்தில் உண்டாகும் உணர்வான அநுபவத்திற்தான் காணமுடியும். நாவுக்கரச சுவாமிகள்,

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலும் பிரம்மாவும்
தேடிக் காணமுடியாத அந்தப் பொருளை
என்னுள்ளத்திலே தேடிக் கண்டு கொண்டேன்" என வீறாப்புக் கொள்கிறார். அதே கருத்தை இன்னொரு அருளாளர்,

"நடமாடும் சங்கரன் தாள்
நான்முகனும் காணான்
படமாடும் பாம்பனும் காணான்
விடமேறும் காரேறு கண்டன் கைலாயன்
தன்னுருவை யார் அறிவார் ஈங்கு" எனக் கூறுகிறார். நாம் இப்படிக் கேட்போம்.

கடவுளைக் கண்டீர்களா?

கடவுளின் நிறம் என்ன? உயரமா? கட்டையா?

கரும்பின் சுவை என்ன? உப்பின் சுவை என்ன? மாங்காயின் சுவை என்ன, இனிக்கும், உவர்க்கும், உறைக்கும் என்று சொல்வீர்களே தவிர அது எப்படி என்று சொல்ல முடியாது. அதைச் சுவைத்தவன் உணர்வானே தவிர உரைக்க முடியாதது போல் இறைவனையும் ஞான அனுபவத்தினாற்தான் காண முடியும். இனி அடுத்ததாக,

பிரபஞ்சத்தை உண்டாக்கியதோடு இறைவன் நின்று விடவில்லை. ஐம்பூதங்களையும் அனுபவிக்க வேண்டுமே. நன்கு சிந்தித்து உயிரினங்களையும் படைத்தான். உயிரினங்கட்கு ஓரறிவு முதல் ஆறு அறிவையும் கொடுத்தான். இந்த ஆறாவது அறிவுடையவன்தான் மனிதன். பிறவிகளுள் மிக உயர்வானது. எதையும் பகுத்தறியும் அறிவு அவன் மனதில் உண்டு. மனம் என்ற ஒன்று இருப்பதாலேயே அவன் மனிதன்.

இயற்கையே இறைவன் என்று சொல்லி அடுத்து இறைவனை எங்கே காணலாம் என்ற வினாவுக்கு விடைகண்டு இரண்டையும் அறியும் அறிவு மனிதனுக்குரியது என்று கண்டோம்.

இனி மனிதன் செய்ய வேண்டியது என்ன? என்பதையும் அறிவோம். மனிதன் கடவுளை அடைய வேண்டும்; காணவேண்டுமென ஆசைப்படுகிறான். அதற்காகப் பல முயற்சிகளும் செய்கிறான். அது விஷேசமான ஆசை. இந்த ஆசையால் மனம் தெய்வீகத்தன்மையடையும். மனிதனுடைய ஆசைகளை அடைய மனிதனுடன் ஐந்து புலன்களாகிய பகைவரும் இருக்கிறார்கள். அவர்களை அடக்கினாற்தான் மனம் நேர்வழியில் செல்லும். குறித்த இலக்கை அடையலாம். புலன்கள் நம்மைப் பிழையான வழிக்கு இழுத்துச் செல்ல விடக்கூடாது. அதற்கு நல்ல பயிற்சி வேண்டும். அதாவது புலனடக்கம்.

"..... ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என் மனத்துள் கண்டேனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அப்பர் பெருமான் அருளியது. உடம்பாகிய சிறையுள் ஆன்மா அடைபட்டிருக்கிறது. அது கன்மம் செய்யாது சும்மா இராது. புலன்வழியே செல்லும் என எல்லா மதங்களும் கூறுகின்றன. அரை நிமிடமாவது இறை சிந்தனை செய்யவிடாது. அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? கடவுள் வழிபாடு, சரியைத் தொண்டுகள், கூட்டுப் பிரார்த்தனைகள், சிவனடியார் கூட்டத்துடன் சேர்தல், யோகம் தியானம் என்று மனதை ஈடுபடுத்த வேண்டும். அப்பொழுது படிப்படியாக மனதில் இறைநாட்டம் உண்டாகும். மனம் இவற்றை ஒரு விரதமாக கடைப்பிடிக்க மனம் தானாகவே இறைவனை நாடும்; இறைவன் புகழ் பாடும்; மெய் உறுப்புகள் ஒவ்வொன்றும் இறைவனை வழிபடும். விரதம் மனதைக் கட்டுப்படுத்தும். சரியைத் தொண்டுகள் செய்யும்போது, கூட்டுப் பிரார்த்தனை செய்யும்போது, தீர்த்த யாத்திரையின் போதெல்லாம் மனம் அலைபாய்வதில்லை. மனம் இறை சிந்தனையில் நிற்கும். மனம் ஓரளவு கட்டுண்டநிலை.

"உடம்பினுள் உயிர்; உயிருள் இறைவன் இருக்கின்றான். அந்த உள்ளிருக்கும் சோதியை மனதில் ஏதாவது ஒரு வடிவில் வையுங்கள்; புலனை ஒரு வழியில் நிறுத்துங்கள். ஐந்து, பத்து, இருபது நிமிடமென நேரத்தைக் கூட்டுங்கள். உள்முகத் தியானத்தில் சோதி தோன்றும். அந்த ஜோதியையே,

இப்படியன்
இந்நிறத்தன்
இவ்வண்ணத்தன்
இவன்தான் இறைவன் என உன் உள்ளத்தில் இறைவனைக் காண்பாய்.

---



## வாசகர் உள்ளத்திலிருந்து.....

**சைவ சமய தத்துவங்களையும், ஒழுக்க நெறிகளையும், பண்பாட்டுக் கோலங்களையும் கொண்ட பல்வேறு கட்டுரைகளையும் தாங்கிவருவது "ஞானச்சுடர்" மலர். ஒவ்வொரு கட்டுரையாளரும் தமது அனுபவங்கள், கருத்துக்கள், உயரிய தத்துவங்கள் ஆகியவற்றினை மிக இலகுவாகப் புரியும்படி எழுதி வருகின்றனர்.**

**அவர்களது கருத்துக்கள் வாசகர்களாகிய எம்மையும், இறை பணியிலும்- நற்சிந்தனையிலும் வழிப்படுத்துகின்றன. குறிப்பாகத் தடம் புரளும் இக்கால இளைஞர்களுக்கு ஏற்றதான பல கட்டுரைகள் மலரில் பிரகாசிக்கின்றன.**

**"ஞானச்சுடர்" பணி வாழ்க! வளர்க!!**

**ப. அவ்வை**

(தொடர்ச்சி...)

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 5. நிரந்தர ரமணன்

ஜடினி சுந்தராம்பாளின் கதையை, ஒருநாள் வழக்கம்போல் அண்ணாமலைச் சாரலில், மரங்களிடையே குஞ்சு ஸ்வாமியும் நானும் உலவும்போது, அவர் சொல்லக் கேட்டேன்.

சிவபெருமானின்மீது பக்தியும், சிவனடியாரிடம் அன்பும் கொண்ட குடும்பத்தில் பிறந்தவள் சுந்தராம்பாள். குழந்தைப் பருவத்திலேயே, வீட்டுக்கு அடிக்கடி வரும் சாதுக்களை அன்புடன் வரவேற்பாள். சூடிகையான, சமர்த்துப்பெண். அவளுடைய ஆழ்ந்த பக்தியை மெச்சிய ஒரு பரிவ்ராஜக சாது, அவளுக்கு புருவ மத்தியில் தியானம் செய்யக் கற்றுக் கொடுத்தார். உற்சாகமாக அவள் அதை அப்பியாசித்து நீண்ட நேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பாள்.



திருமணமான பின்னும், தியானத்தை விடாமல் தொடர்ந்த அவளுக்கு, இல்லறத்தின் அன்றாட வேலைகள் தியானம் செய்வதற்குத் தடையாக அமைந்தன. எனவே, தனி இடத்தில் ஏகாந்தமாக குறுக்கீடு ஏதுமின்றி தியானம் புரிய விரும்பினாள். மேலும், தியானத்தில் ஆழ்ந்துள்ளபோது எவ்வித இடையூறும் ஏற்படாது. ஆனால் தியானம் பிரிந்த நிலையில் நெற்றியில் கடும் வலி தோன்றும். எனவே இடைவிடா தியானத்தில் இருக்க தனிமையை நாடினாள். அதிருஷ்டவசமாக, கணவனும் அவள் நிலையைப் புரிந்துகொண்டு, சாதனைக்காக எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்று அனுமதி தந்தவுடன், வேண்டிய உதவிகளையும் செய்தார்.

அதன்படி, சுந்தராம்பாள் அருணை வந்து மலையில் தங்கி தவம் புரியலானாள். தலையில் ஜடை பிடித்துவிடவே "ஜடினி" என்று அழைக்கப்பட்டாள். அவ்வப்போது பகவானைத் தரிசிக்கப் போவாள். ஒரு சமயம் இருபத்தொரு நாட்கள் உபவாசமிருந்துவிட்டு, பகவானுக்கும், அடியார்களுக்கும் பிட்சை அளித்து விரதத்தை முடித்தாள். அன்று அவள் விருப்பப்படி பகவானும் அன்பர்களும் அவளுடன் கிரிவலம் வந்தனர். வழி நெடுக தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையையும், அதிலுள்ள சிக்கல்களையும் பகவானிடம் விபரமாகக் கூறி, சாதனையை மேலும் வலுப்படுத்த, அவருடைய அறிவுரையையும், அருளையும் வேண்டி நின்றார். பகவான் குஞ்சு ஸ்வாமியிடம் யோக வாசிட்டத்திலிருந்து, சிகித்வஜன்- சூடாலை கதையைச் சொல்லும்படி பணித்தார். குஞ்சு ஸ்வாமியும் உற்சாகமாக அதை அவளுக்கு விவரமாகச் சொன்னார். ஜடினியும் மிகக் கவனத்துடன் கூர்ந்து கேட்டு மனதில் பதிய வைத்துக் கொண்டார். சில நாட்களில் அருணாசலத்தை விட்டுச் சென்று விட்டார். சக்தி வாய்ந்த அந்தக் கதையை பகவான் அவரைக் கேட்கச் செய்ததிலிருந்தே, ஆன்மானுபூதி அடைந்திருப்பாள் என்று அனுமானிக்கலாம், அக்கதையை நாமும் செவிமடுப்போமா!

முன்னொரு காலத்தில் மாளவ தேசத்தை அரசன் சிகித்வஜனும், அரசி சூடாலையும் ஆண்டு வந்தனர். சூடாலை ஆழ்ந்த அமைதி நிரம்பிய இரவு நேரங்களில் தவறாமல் தீவிரமாக ஆன்ம விசாரம் செய்து வந்தாள். தன் இடை விடாத முயற்சியால் உரிய காலத்தில் ஆன்மானுபூதியடைந்தாள். ஆன்மா உள்ளே ஜொலிக்க, முகம் விகசித்து, அழகு கூடியது. அரசியிடம் நேர்ந்த இந்த மாற்றத்தைக் கவனித்த அரசன், காரணத்தை அறிய விரும்பவே சூடாலை தான் ஆன்மானுபூதி அடைந்து விட்டதையும், அதன் பலனே இந்த தேஜஸ் என்றும் விளக்கினாள். இதைக் கேட்ட சிகித்வஜன் நகைத்தான். காட்டிற்குச் சென்று கடுந்தவம் புரிந்தால் மாத்திரமே ஞானசித்தி பெறமுடியுமென்றும், அரண்மனையில் வசிப்பவர்களுக்கு அது சாத்தியமில்லை என்பதும் அவன் கருத்து. அதன்படியே கானகம் சென்று தவவாழ்க்கை மேற்கொண்டு ஞானத்தையடைய விரும்பினான். அரண்மனையில் இருந்தபடியே, நாட்டை பற்றற்று ஆண்டுகொண்டே தபஸும் செய்யலாம், ஞானமும் அடையலாம் என்று சூடாலை எவ்வளவோ தடுத்துக் கூறியும் கேட்காமல் சிகித்வஜன் நாட்டைத் துறந்து வனம் அடைந்து கடுமையான தவம் புரியத் தொடங்கினான்.

சூடாலைக்குத் தன் கணவன் நிலை குறித்துக் கவலை உண்டாகியது. அவனை எப்படியாயினும் கரையேற்ற வேண்டும்; அதற்கு அவனைச் சூழ்ந்திருக்கும் மாய வலையை எப்பாடு பட்டேனும் அறுத்தெறிவது அவசியம் என்று எண்ணினாள். இதற்காகச் சூடாலை சித்திகள் பழகி, பின் கும்பமுனி ரூபத்தில் சிகித்வஜன் முன் தரையினின்று சில அடிமேலே நின்றாள். அதைப் பார்த்த அரசன், தனக்கு ஆசி வழங்கி காப்பதற்கென்றே ஏதோ ஒரு தேவன் விண்ணில் இருந்து இறங்கி வந்திருப்பதாக எண்ணி அவர் காலில் விழுந்து வணங்கினான்; தன் குறைகளை எல்லாம் சொல்லி தனக்கு வழிகாட்டி அருளும்படி வேண்டினான். கும்பமுனி உபதேசித்தார்: "கர்த்தனின் ஆணையால் மட்டுமே கர்மம் பலன் தருகிறது. கர்மத்திற்குத் தானாக முக்தியளிக்கும் சக்தியில்லை. பற்றின்றி கர்மாவைச் செய்தலால் மனம் பரிசுத்தமடைகிறது. அப்படி நிர்மலமான மனதினால் தன்னை (ஆன்மாவை) தியானித்தால் வாசனைகள் அழியும்; அதன் பின் தக்க குருவையடைந்து ஆன்மவிசாரம் செய்வது எப்படி என்று அறிந்து கொள்வது அவசியம். விசாரத்தின் மூலமே வீடுபேறு பெறலாமேயன்றி, கணக்கற்ற கர்மாக்கள் செய்தாலும் முடியாது. எல்லாவற்றையும் துறந்தால் வீடு பெறலாம். அற்றது பற்றெனின், உற்றது வீடு". உடனே அரசன் "அரசு, குடும்பம் உள்ளிட்ட அனைத்தையும் துறந்து விட்டேனே" என்றான்.

"அதெல்லாம் மேம்போக்கான (வெளி) தியாகம் மட்டுமே! மனத்தில் இன்னும் பந்தமெனும் விதை இருக்கிறது."

உடனே சிகித்வஜன் எஞ்சியிருந்த உடைமைகளான தன் தண்டம், கமண்டலம்,

உருத்திராட்சமாலை, துணி அனைத்தையும் தீயில் எறிந்து, உடைமை ஒன்றுமின்றி நின்றான். அப்படியும் துறவு முழுமை பெறவில்லை என்று கும்பமுனி சொல்லவே, எஞ்சி நின்ற ஒரே பொருளான தன் உடலையும் மலை உச்சியிலிருந்து குதித்துத் தியாகம் செய்யத் துணிந்த அவனிடம் முனி கூறினார்:

"இப்படித் தண்டிப்பதற்கு உன் உடல் என்ன பிழை செய்தது? உடம்பை அழிப்பதால் மெய்யறிவு கிட்டாது. எல்லாப் பற்றுதல்களுக்கும் காரணமான மனதை அழிப்பது ஒன்றே மார்க்கமாகும். சரீரத்துடன் சேர்ந்த மனதை "நான்" என்று திடமாக நம்புவதால் ஏற்படுவதுதான் பந்தம். இந்த நம்பிக்கையை உடைத்தெறிதல் மாத்திரமே சர்வசங்க பரித்தியாகம்". தொடர்ந்து கும்பமுனி நேர் சாதனையை விவரமாக வருணித்தார்.

சிகித்வஜனுடைய சந்தேகங்கள் மறைந்தன. மனம் நிர்மலமாகி தூய்மையடைந்தது. ஆழ் விசாரத்தினால் தன் மூலப்பொருளை அறிந்து, அதிலொன்றி, அவன் சமாதியில் ஆழ்ந்தான். கும்பமுனி மறைந்து சிலகாலம் சென்றபின் திரும்பி வந்தபோதும், அரசனின் சமாதி கலையவில்லை. அவனை எழுப்ப சூடாலை சிங்கம்போல் கர்ஜித்துப் பார்த்தாள். பயனில்லை. அதனால் சூக்ஷ்ம உரு எடுத்து அரசனின் இதயத்தில் நுழைந்து, அது வாசனைகளின் சார்புகள் இன்றி ஆகாயம்போல் பரிசுத்தமாக இருப்பதைக் கண்டு, அதன்பின் இனிமையான குரலில் சாம வேதத்தை ஓதினாள். இதழ் விரியும் தாமரையென அரசன் மெல்ல புற உணர்வை அடைந்தான். இன்பமும் நன்றியும் மனதில் பெருக்கெடுக்க, அவற்றை வெளியிட வகையறியாது திகைத்தான். பின்னர், அரசி சூடாலையின் அறிவுரைப்படி நாடு திரும்பி, தன்னிலே தானாக, ஸ்திரமாக நிலைத்தூன்றி நின்று, அனேக காலம் அரசி சூடாலையுடன் சேர்ந்து, நல்லாட்சி செய்து வந்தான்.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட தினங்கள்



02.08. 2012 ஆடி 18 வியாழன்
கதிர்காமத் தீர்த்தம்,
இரவு விசேட உற்சவம்

10.08.2012 ஆடி 26 வெள்ளி
கார்த்திகை விரத தினம்,
பகல் விசேட உற்சவம்

17.08.2012 ஆவணி 01 வெள்ளி
மகோற்சவ ஆரம்பம்,
கொடியேற்றம் இரவு 10.15

21.08.2012 ஆவணி 05 செவ்வாய்
காலைத்திருவிழா ஆரம்பம்

26.08.2012 ஆவணி 10 ஞாயிறு
பூங்காவனம்

27.08.2012 ஆவணி 11 திங்கள்
கைலாய வாகனம்

29.08.2012 ஆவணி 13 புதன்
சப்பறம்

30.08.2012 ஆவணி 14 வியாழன்
காலை தேர் உற்சவம்

31.08.2012 ஆவணி 15 வெள்ளி
காலை தீர்த்த உற்சவம்
மாலை மௌனத் திருவிழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பெருந் தமிழ்த்தெய்வம் முருகப்பெருமான் என்பதற்கான இலக்கிய வரலாற்றுச் சான்றாதாரங்கள்

(தொடர்ச்சி...



**திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்**

முந்நூற்றெண்பத்தி நான்கு (384) திருப்பதிகங்களைப் பாடிய திருஞானசம்பந்தப் பெருமானின் திருப்பாடல்களிலே பத்து (10) இடங்களிலேதான் முருகக்கடவுள் போற்றப்படுகிறார். 312 திருப்பதிகங்களிலே சுமார் 20 இடங்களில் அப்பர் சுவாமிகள் முருகனைப் போற்றியிருக்கிறார். சுந்தரரின் நூறு (100) திருப்பதிகங்களிலே சுமார் பத்து (10) இடங்களிலே முருகன் புகழ் பேசப்படுவதைக் காணலாம். "எந்தை பிரான்" என்று தொடங்கும் திருமந்திரத்திலே "கந்தன் சுவாமி" என்ற ஆட்சியுண்டு. சேந்தனார் தம் திருவிடைக்கழித் திருவிசைப்பாவெனும் முருகன் திருவிசைப்பாவிலே "சுப்ரமண்யன்" என்ற ஆட்சியைக் காணலாம். இரண்டாம் வரகுணனின் திருச்செந்தூர்ச் சாசனம் முருகனைச் "சுப்ரமண்யர்" என்றழைக்கும் பழமையுடையது என்பர். திருவிடைக் கழித் திருவிசைப்பாவிலே முருகன் "கணபதி பின்னிளங்காளை" என்று கூறப்படுவதாலும் முருகன், விநாயகரின் தம்பி என்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வாட்சிக்கும்- இச்சான்றுக்கு முன்பும் முருகனைக் கணபதியின் தம்பியாக வேறு யாரும் கூறியதாகத் தெரியவில்லை.

கந்தபுராணத்திலும், அருணகிரிநாதரின் திருப்பாடல்களிலும் முருகனை முழுமுதற் கடவுளாகக் காட்டும் முயற்சிகளைக் காணமுடிகிறது. கச்சியப்பச் சிவாச்சாரியார் காலம் கி.பி.13ஆம், 15ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டது. அருணகிரிநாதர் கி.பி. 15ஆம் நூற்றாண்டின் முற்கூறிலே வாழ்ந்திருக்கிறார். இவர்களுடைய காலகட்டத்திலேதான் "கௌமாரம்" என்ற மதத்தினைக் குறிப்பிடுதல் பொருத்தமாகலாம். பிரணவப் பொருள் தெரியாத பிரமனைக் குட்டிச் சிறையிலடைத்தான் முருகக் கடவுள். சிவனின் கோபப் பேச்சினால் பிரமனை விடுதலை செய்தார். விடுதலையடைந்த பிரமன் இறைவனை வணங்கி முருகக் கடவுள் கொடுத்த தண்டனை எமக்கு நல்லறிவைத் தந்து அகங்காரத்தை நீக்கி என்னைப் புனிதனாக்கியது" என்று கூறித் துதித்துப் போனார். பின் முருகக் கடவுள் சிவனுக்கும் பிரணவப் பொருளைக் காதில் உரைத்தான். இதனால் முருகன் தந்தைக்குபதேசம் செய்தான் என்றும், தகப்பன் சாமி என்றும் அழைக்கப்பட்டான். முழுமுதற் கடவுளாகவும், இயற்கையதீதனாகவும், சிவபெருமானைப் போலவே முருகக் கடவுளும் பிறப்பிலி, இறப்பிலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்- ஞானாசக்தி; வள்ளி- இச்சாசக்தி; தெய்வானை- கிரியாசக்தி; சூரர்களெனப்படும் சூரன், சிங்கன், தாரகன் முறையே ஆணவம், கன்மம், மாயையெனும் மும்மலங்கள். முருகக் கடவுளே திருஞானசம்பந்தராயவதரித்துத் தேவாரத் திருமுறைகளை அருளிச் செய்தார் என்பது ஐதீகம். திருவண்ணாமலைக் கோபுரத்திலிருந்து தற்கொலை செய்யத் துணிந்த அருணகிரியாரை இரு கரங்கொண்டு தாங்கிக் காத்தருளியவர் முருகக்கடவுள். தவ வலிமையினால் வள்ளியும், தெய்வானையும் முருகப்பெருமானையடைந்தனர். "திகட சக்கரச் செம்முகமைந்துளான்" என்ற கந்தபுராணக் காப்புச் செய்யுளுக்கு வீரசோழிய நிகண்டு சான்றுகாட்டிச் சபையிலே நிறுவினார். ஔவைக்குச் சுட்டபழம் அருளினார்.

அவனது (முருகனது) திருமேனியானது ஆறு திருமுகங்களையும் பன்னிரு திருக்கரங்களையுமுடைத்து. கரங்கள் வெவ்வேறு ஆயுதங்களையுடையனவாகவும், அவ்வாயுதங்களுள் தலை சிறந்தது வேலாயுதமே. அது கந்தவேளது இருதய கமலத்தினைச் சிறப்பித்து நிற்கிறது. அவனது வாகனம் மயிலும்; கொடி சேவலுமாகும். வள்ளி தெய்வானையென்னும் தேவிமாரிருவரும் அவனது இருமருங்கிலும் வீற்றுள்ளனர். வாகனமாகிய மயிலானது தனது திருப்பாதங்களின் கீழே ஒரு கரு நாகபாம்பினை அடக்கி மிதித்து நிற்கின்றது. அவனது ஆறு சிரங்களும் ஆறு பிராண ஸ்தானங்களைக் குறிக்கும். அவையே மனித உடலின் நரம்புமண்டல இயக்கத்திற்கு ஆதாரமாக முள்ளந்தண்டுக் கொடி நெடுக நெற்றிப் புருவ மத்திவரை அமைந்துள்ள ஆறு சக்கரங்களுமாம். அச்சக்கரங்களின் மீது புலன்களைச் செலுத்தித் தியானிப்பதினாலேயே தனது கீழான சுபாவத்தை அடக்கவும், மேன்மையடையவும்; தத்துவங்கள் வாயிலாக இறைவனுடனே ஒன்றுபடவும் யோகிகள் முயன்றனர். அதுவே சத்தும், சித்தும், ஆனந்தமுமாகிய "சச்சிதானந்தம்" என்பது. கந்தக் கடவுளுடைய பன்னிரு திருக்கரங்களையுடைய முருகக் கடவுள் ஒருவனே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளளாகிய ஐந்து தொழில்களையும் நடத்து கின்றானென்பதைக் குறிக்கின்றன. வேலாயுதம் என்பது அறியாமைக்குக் காரணமாகிய ஆணவமென்னும் பிசாசை ஊடுருவிக் குத்திக் கிழிக்குஞ் சக்தி வாய்ந்தது. மேலும் அதுவே இராஜயோகியானவன், ஒரே முனையுடைய மனசோடு சித்திபெறும் ஆயுதமுமாகும். வேலின் அடிப்புறமாகிய மூலாதாரத்தினின்று அறிவானது புறம்போந்து இடைவெளி நாடிகளினூடாக இலைவடிவாகிய அவ்வேலினது உச்சியை அடைகின்றது. வாகனமாகிய மயிலானது ஓம் என்னும் பிரணவ அட்சரத்தின் வடிவைக் குறிக்கும். அதுவே விந்துருபம்! அதன் காலடியின் கீழுள்ள கற்பூரமானது பிரணவத்தின் சக்தியால் அசுத்தமாயையானது முற்றும் மேற்கொள்ளப் படுவதைக் குறிக்கின்றது. கொடியிலுள்ள சேவலானது பிரணவத்தின் நாதத்தைக் குறிக்கும். வள்ளி, தெய்வானை, வேல் என்பன முறையே இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்பவற்றைக் குறிக்கும். இம்மூன்றும் பரப்பிரம்மமாகிய சுப்பிரமணியப் பிரானில் உள்ளனவாம். இக்கலியுகத்தில் முருகப்பிரானே பிரத்தியட்சத் தெய்வமாகும். எனவே சுப்பிரமணிய தியானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமத்தினை அறியும் அந்தர்முக அறிவென்ப" (சின்னையா சிவம், அ,(10.6.1954) "நுன்முகம், கதிர்காம- மான்மியம், பக். ix-x)

விஜயநகர- நாயக்கர் காலங்களிலே திருப்பரங்குன்றத்திலே நாயக்கர் கலைப்பாணிக்குரிய பல சிறப்பம்சங்களைக் காணமுடிகிறது. நாயக்க மன்னரது திருப்பணி திருப்பரங்குன்றத்து முருகன் கோயிலில் செப்பமாக நடைபெற்றுள்ளமையானது அக்காலத்திலே முருகனின் திருவருட் சிறப்பு உணரப்பட்டமைக்கான சான்றாதாரமாகும்.

திருப்பரங்குன்றத்துக் கோபுரமும் திருமதிலும் விஸ்வநாத நாயக்கரின் பேரனான கிருஷ்ண வீரப்ப நாயக்கராற் கட்டப்பெற்றவை என்பது கோபுரத்திலுள்ள சாசனங்களிரண்டின் மூலம் அறிய முடிகிறது. அச் சாசனங்கள் சகவருடம் 1505இல் (கி.பி. 1583) எழுதப்பட்டவை. கோபுர வாசலைக் கடந்ததும் ஆஸ்தான மண்டபத்தை அடையலாம். அது 116அடி நீளமும் 94அடி அகலமுங் கொண்டது. அதில் 25அடி உயரமான 48 தூண்கள் உள்ளன. முன்வரிசையிலுள்ள தூண்களிற் குதிரை வடிவங்களும் சிலவற்றில் யாளி உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நடராஜர், மீனாட்சி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், ஊர்த்துவ தாண்டவர், காளி ஆகியோரின் படிமங்கள் தூண்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மண்டபத்தின் நடுவிலுள்ள அங்காளத்திலே அமைக்கப்பட்டுள்ள சுப்பிரமணியர் தெய்வயானையம்மன் திருமணக் கோலம் கவர்ச்சிமிக்க வண்ணமாய் அமைக்கப்பட்டுள்ளது. இராணி மங்கம்மாளின் பிரதிமையொன்றும் ஆஸ்தான மண்டபத்தில் அமைந்துள்ளது. கம்பத்தடி மண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றிலே விஜயநகர கலைப் பாணியில் அமைந்த தூண்கள் காணப்படுகின்றன. அவற்றின் கபோதல்கள் புஷ்ப போதிகைகளோடு அமைந்திருக்கின்றன. "(டாக்டர் இராசு. காளிதாஸ், விஜயநகர கலைச்சிற்பக்கலை". விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்- 2009, ப.163)

தமிழகக் கலை வரலாற்றில் விஜயநகரப் பேரரசர்கள் தென்னிந்தியாவின் பல பாகங்களிலேயும் கோயிற்றிருப்பணிகள் பலவற்றை மேற்கொண்டனர். பல தலங்களிலே பழுதடைந்த கோவில்களைப் புனராக்கம் செய்தனர். வேறுபல தளங்களிலே புதிய கட்டடங்களை அமைத்தனர். பொன் முதலிய உலோகங்களையும், வராகன் முதலிய பொற் காசுகளையும் ஆலயத்திருப்பணிக்கென்று ராயர்கள் வாரி வழங்கினர். மூலமூர்த்திகளுக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் ஆபரணங்களை நன்கொடையாக வழங்கினர். நித்திய, நைமித்திய கருமங்களைச் செய்வதற்கென்று பலவகையான நன்கொடைகளைக் கோயில்களுக்கு வழங்கினார்கள்.

கோயில்களிலே மந்திராலோசனை செய்வோர்க்கும், ஆராதனை செய்யும் பிராமணருக்கும், சிவயோகிகள், பாகவதர்களுக்கும் சீவிதமாகவும், அன்னதானக் கொடைகளுக்கென்றும் நன்கொடைகள் வழங்கினார்கள். சில சமயங்களிலே திருவிழாக் காலங்களிலே ஆலய தரிசனம் பண்ணிச் சிறப்புச் செய்தனர். அவைபற்றிய செய்திகள் பெரும்பாலும் சாசனக்குறிப்புக்களாக உள்ளன.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கதைகள்



மூதுரைக்கதை

## உற்ற இடத்தில் உயிர் வழங்கும்

"உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ- கல்தூண்
பிளந்துஇறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோதான்"

நல்ல உறுதியான பெரிய கருங்கல்லால் செய்து வைக்கப்பட்டுள்ள சுமைதாங்கியான போதிலும் அதன் மீது வைக்கப்பட வேண்டிய அளவு பாரத்தை மட்டும் வைக்க வேண்டும்.

அளவிற்கும் அதிகமான பாரத்தைச் சுமத்தினால் சுமைதாங்கி முறிந்து உடைவதுபோல, மானம் உள்ளோர் விரோதிகளைக் கண்டு பயந்து வணங்காமல், உயிரையே விட்டுவிடக்கூடியவர்களாய்த் திகழ்வார்கள் என்று அன்றே ஔவையார் தன்னுடைய அனுபவப் பார்வையிலிருந்து அருளிய அற்புதச் செய்தியாகும் இது.

மயில் பீலியானாலும் அளவோடு ஏற்ற வேண்டும். அளவிற்கு அதிகமானால் ஏற்றப்பட்ட வண்டியின் அச்சு முறிந்துவிடும் என்பார்கள். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாகும் என்பது பழமொழி. மனிதர்கள் தன்மானத்துடன் வாழவேண்டும் என்பதாகும்.

சந்தனபுரம் என்ற ஊரில் ஒரு சாது வாழ்ந்து வந்தார். அவர் அன்பே உருக்கொண்டவர். மக்களிடம் பாசம் கொண்டவர். ஏழை எளியவர்களுக்கு உதவும் குணம் உடையவர்.

அதனால் அந்தப் பகுதியில் ஆதரவற்று இருந்த குழந்தைகளை ஒன்றுசேர்த்து உணவு, உடைகள் அளித்து ஆதரித்தார்.

அந்த அனாதை இல்லத்திற்கு வரும் நல்ல உள்ளங்கள் தரும் தானியங்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு குழந்தைகளை நன்கு படிக்க வைத்தார். அவர்களை ஒரு நல்ல நிலைக்கு உயர்வடையச் செய்த பெருமைக்குரியவர்.

தியானம், தவம் அல்லாது சித்தயோகமும் அறிந்தவர். மாணவர்களுக்குத் தியானம் குண்டலினி யோகம் பயிற்றுவித்தார். அவர் தினமும் இறைவனை வணங்கி அதன் பயனாய் தான் பெற்ற அனுபவங்களைப் புத்தகங்களாய் வெளியிட்டு அதன்மூலம் கிடைக்கும் வருவாயையும் மாணவர்களுடைய நலனுக்காகவே செலவு செய்வார்.

அவர் உடுத்துவது ஒரு நாலுமுழம் செந்நிறக் காவி உடை. மேலே போடுவதற்கு மூன்று முழம் துண்டு மட்டுமே அவருக்குரியது.

அவரை யாராவது விருந்துக்கும் சுபநிகழ்ச்சிகளுக்கும் அழைத்தாலும் "அடியேனுக்கு அளிக்கும் உணவை உதவியை எமது மாணவர்களுக்கு வழங்குங்கள்" என்பார். அதன்படியே விருந்து முடிந்ததும் வீண்ணாகாமல் அனைத்து உணவு வகையையும் வண்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொண்டு வந்து அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிமாறுவார். அவருடைய ஆசிரமத்திற்கு ஒரு நண்பர் நிலம் உதவி செய்தார். பிறகு மற்ற சிலர் பொருளுதவி செய்தனர். சிலர் காய்கறிகளை வழங்கினர். இவற்றைக் கொண்டு முறைப்படி அரசு அனுமதியைப் பெற்று ஆசிரமத்தை அமைத்தார்.

அதன் மையப்பகுதியில் ஒரு ஆலயத்தை அமைத்தார். சுற்றிலும் மலர்வனம் அமைத்தார். பாதைகளை ஒழுங்குபடுத்தினார்.

கனி வகையுடைய வாழை, மா, பலா, கொய்யா, மாதுளை போன்ற பலவகையான மரங்களையும் வைத்துப் பயிராக்கினார்.

அவர் பட்டினி கிடந்து பகவானை வேண்டுவார். ஆனால், குழந்தைகளை எக்காரணம் கொண்டும் பட்டினி போடமாட்டார். அந்தக் குழந்தைகளின் ஒவ்வொருவருடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் கேட்டறிந்து அதிலுள்ள சுவையான பகுதிகளையும் தன்னுடைய புத்தகங்களில் குறிப்பிடுவார். அவ்வாறு கூறும்போது செய்யும் பாவங்கள் அதற்கான தண்டனை என்றும் குறிப்பிட்டு எழுதுவார். தனித்து சிவனை வணங்குவார். சக்தி பூசை செய்வார். நல்ல நிலைக்கு வந்தார். அவரிடம் செல்லுவோருக்கும் நல்ல அறிவுரைகளை வழங்குவார். அவர்களும் நிலையில் உயர்வர். அவர்கள் அந்த ஆசிரமத்திற்கும் உதவிடுவார்கள்.

அந்தச் சாதுவின் ஆசிரமத்திற்கு வாகனங்களில் வருவோர் அதிகமானது. பணக்காரர்கள் வருவதைக் கண்ணுற்ற சில விரோதிகள் கண்டு வியந்து அதற்கு முற்றுப்புள்ளி வைக்கக் கருதி சில குறைகளை வதந்திகளாக்கிக் காற்றில் பறக்கச் செய்தனர்.

அந்தச் செய்திகளும் காட்டுத்தீயைப்போலப் பரவிட ஆரம்பித்தன. அது அந்த ஆசிரமத்துச் சாதுவின் காதிலும் விழ ஆரம்பித்தது. வருந்தினார், நொந்தார். ஒருவரின் வளர்ச்சி மற்றவருக்கு எரிச்சலை உண்டாக்கிவிடும். சிலர் குறை கூறுவதையே தன் தொழிலாகக் கொண்டு விளங்குவர். அத்தகையவர்களைக கண்டால் விலகிச் செல்வதே சாலச் சிறந்ததாகும்.

ஆனால், அந்தச் சாது எதற்கும் அஞ்சவில்லை. கடமையே கண்ணாய் கருதித் தன்னுடையப் பணியைச் செய்து வந்தார். மக்கள் கூறுவதுபோல் குறைகள் நடந்தால் அதற்காகத் தன்னுடைய உயிரையே விட்டுவிடவும் தயாரானார்.

மக்களில் சிலர் நல்லதையே செய்யமாட்டார்கள். நல்லதைச் செய்வோரைப் பிறர் புகழ்ந்து பேசுவதையும் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். அத்தகையோரைப் பற்றிய செய்தியாக இந்த நாலடிப் பாடலில் சுவையான செய்தியை இதன்மூலம் தந்துள்ளார் அல்லவா. நீங்கள் நல்லவரைக் குறை கூறாதிருங்கள்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் கட்டுமானப் பணிக்கு மனமுவந்து நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| K. கனகசபேசன் குடும்பம் | கனடா | 100090.00 |
| S. சிவலோகலிங்கம் | திருகோணமலை | 103000.00 |
| K. சிவஞானம் | பிரான்ஸ் | 50000.00 |
| ச. நித்தியகலா | புத்தூர் | 25000.00 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயமும் மனித வாழ்க்கையும்

திருமதி ப. நடராஜா அவர்கள்

ஆதியாம் குருவுமாகி அன்புமிகு
வேதியனாய் வேதமுமாகி- விளங்கும்
சோதியாய் சுடருமாகிச் சுந்தர ரூபமாகி
பதியாகி எமையாளும் பரம குருவே காப்பு

உலகில் தோன்றிய உயிர்கள் எல்லாவற்றிலும் உயர்ந்த பிறவியாக விளங்குவது மனிதப்பிறவி. இதனால் தமிழில் மனிதன் என்பவன் உயர்திணையாகவும் மற்றவை அஃறிணையாகவும் பேசப்படுகின்றன. ம்னிதனுக்கு ஆறறிவு என்றும் மற்றைய விலங்குகட்கு ஐந்தறிவு என்பதையும் நாம் எல்லோரும் அறிவோம். மனிதனுக்கு இருக்கும் ஆறாவது அறிவால் நன்மை, தீமை என்பவற்றைப் பகுத்து அறிந்து உலகில் நல்லவற்றைச் செய்து நலமுடன் வாழலாம்.

இந்த நல்லவற்றையும் எந்தச் சமயத்தில் எப்படிச் செய்யவேண்டும் என்பதை விளக்குவது சமய அறிவு. இச்சமய அறிவு மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவர்க்கும் அவசியம். இவ்வுலகம் எங்ஙனம் தோன்றியது? இவ்வுலகத் தோற்றத்தின் கர்த்தா யார்? இவற்றை ஆராய்ந்தறிவது சமய அறிவு. இந்துக்களாகப் பிறந்த நாம் உலகில் பிறந்த மனிதர்கள் எல்லோரும் ஒரே குலம்; அதுவே மறுக்குலம் என்பதை அறிவோம்.

இவ்வுலகில் எல்லா உயிர்கட்கும் தந்தையாகச் சிவபெருமானையும்; தாயாக உமாதேவியாரையும் முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். "சிவம்" என்றால் அன்பு", "பெருமான்" என்றால் பெரிய ஆன்மா. அதாவது பரமாத்மா என்று பொருள்படுகின்றது. "உமாதேவியார்" என்றால் உலக மாதா; உலக மகா சக்தியாக விளங்கும் "பராசக்தி" எங்கும் நிறைந்த சக்தி என்பது பொருள். இச்சக்தி அன்புக்குக் கட்டுப்படும். ஆணவத்துக்குக் கட்டுப்படாதது.

அம்மையே அப்பா! என்று போற்றினால் அனைத்து வல்லமையையும் தரும். எதிர்த்து நின்றால் அணுவையும் சிதைக்கும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவ சமயம். சிவம் என்றால் அன்பு. "சைவம்" என்றால் தூய்மை; தூய அன்பு கொண்ட சமயம் சைவ சமயம். அதாவது எந்த எதிர்பார்ப்புமின்றி உயிர்களிடம் அன்பு காட்டி நேசித்தல் சைவர்களின் இயல்பு.

உலகம் ஒரு குடும்பம். எல்லோருக்கும் தாய் தந்தை ஒருவரே என்பதே சைவ சமய அறிவு. உலகில் வாழும் மனிதக் குடும்பங்கள் உலக அம்மையப்பரின் பிரதிபலிப்பேயாகும். ஒவ்வொரு சிறு குடும்பமும் இந்த உலக மகா குடும்பத்துள் அடக்கம், பிரம்மமாயிருந்து உயிர்களைப் படைக்கும்போது பிரம்மாவாகவும், எங்கும் நிறைந்திருந்து எல்லா உயிர்களையும் இரட்சித்துக் காக்கும்போது மகாவிஷ்ணுவாகவும், தீய சக்திகளை அழிக்கும்போது உருத்திரனாகவும் விளங்குவது தூய சிவமே. இது சதாசிவம் எனப்படும். எந்த நிலையிலும் அன்பு மாறாதிருப்பதே இதன் இயல்பு.

உலக இயக்கம் "அன்பு" என்னும் ஆகர்ஷண சக்தியால் நடைபெறுகின்றது. அன்பில் சுயநலம் தோன்றுமிடத்துச் சிக்கல்கள், துன்பங்கள், இடர்பாடுகள் தோன்றுகின்றன. சுயநலமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு என்றும் அமைதியையும் ஒற்றுமையையும் தோற்றுவிக்கும். உயிர்கள் உலக நலத்துக்காக நற்சிந்தனையுடன் படைக்கப்படுகின்றன. மனம் வாக்கால் தூய நிலையில் உயிர்கள் படைக்கப்படும்போது அன்னை சரஸ்வதியாக இருக்கின்றாள். படைக்கப்பட்ட உயிர்களைக் காக்கும்போது மகாலட்சுமியாக எங்கும் நிறைந்து விளங்குகின்றாள். துஷ்ட சக்திகளால் உயிர்களுக்கு ஆபத்து வரும்போது துர்க்கா சக்தியாக, மகாகாளியாக இருந்து துஷ்ட சக்திகளை அழித்துக் கஸ்டத்தைப் போக்குகின்றாள். இந்த முப்பெரும் சக்திகளைக் கொண்டவளே அன்னை ஆதிபராசக்தி. "ஆதி" என்றால் "தொடக்கம்" உலகத் தோற்றத்திற்குக் காரணமான சக்தி என்பது பொருள். மனம், வாக்கு, காயம் என்பதே முப்பெரும் சக்தி. இவை எப்போதும் தூய்மையாக இருந்து செயற்படுவதே இதன் வெளிப்பாடு. இது திரிகரண சுத்தி எனப்படும். இது ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது. இருவரும் திரிகரண சுத்தியுடன் செயற்படுவதே உலக வாழ்க்கை. ஆகவே இருவரும் சமமானவர்களே. இருவரும் சமமாக இதய சுத்தியுடன், தூய அன்புடன் செயற்படும்போது குடும்பத்தில் சமநிலை தோன்றுகின்றது. அமைதி நிலவுகின்றது.

இப்படி ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு பெற்றோரும் உயிர்களையும் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும் அறநெறி நின்று படைக்கின்றனர். இதுவே மனிதனின் அடிப்படைக் கல்வியறிவு. இவ்வாறு படைக்கப்பட்டவற்றைக் காத்து நல்வழியில் அவற்றைப் பேணுவது அரனின் கடமை. இவ்வரன் (ஆண்கள்) புருஷர்களுக்குள் உத்தம குணமுடையவனாக இருக்க வேண்டும். இது கருதியே உலகைக் காக்கும் மகாவிஷ்ணுவுக்குப் "புருஷோத்தமன்" என்னும் நாமம் வழங்கப்படுகின்றது.

குடிமக்கள் அறநெறி தவறும்போது பாதுகாப்புப் படைகளை உருவாக்கி அறநெறி தவறாது காத்து நிற்பது அரச கடமை. பற்றின்றி அதாவது தன் சொந்த பந்தம். உறவு நட்பு இவையெல்லாவற்றையும் கடந்து நின்று குற்றம் களைதலே இறையாட்சி. இதுவே நிறையாட்சி, இதுவே மனுக்குலதர்மம். இவ்வழியாட்சி எங்கு நடைபெறுகின்றதோ அந்நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் நிலவும். அவ்வரசே நல்லரசு ஆகும். (தொடரும்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரத்தில் ஒருவர்

**திரு முருகவே. பரமநாதன் அவர்கள்**

ஊற்றிய உலகறிய வாழ்ந்த பெரியார்கள் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவர்கள் காவியங்களிலே இவர்க்கோர் மவுசு உண்டு. விரல் விட்டு எண்ணக்கூடிய கதாபாத்திரங்கள் வரலாற்றிலே, சரித்திரத்திலே இடம்பெற்றனர். பலரிற் சிலர் தம்மை இனங்காட்டாதவர்கள். வாழ்ந்து காட்டியவர்கள்; மகத்தான சாதனை புரிந்தவர்கள். செழிப்பான கிராமங்கள் பல முன்னுதாரணமாக மிளிர்கின்றன. காலங்காலமாக இவர்களின் சந்ததியினர் தம்புகழ் நிறீ இத்தாம் மறைந்தனர். மகத்தான இவர்களின் மறைவு நூல்களிலே இடம்பிடித்தது. இப்படி எடைபோடும்போது அவர்களை ஆயிரத்தில் ஒருவர், பதினாராயிரத்தில் ஒருவர், இலட்சத்தில் ஒருவரெனப் புகழ்வர். இ∴து ஒரு கணிப்பின் அடையாளம் இவ்வுலகை நோட்டம் விடின் மறைந்தும் மறையாதவர்கள் காலாகாலமாய் இவர்களின் விலாசம் அவர்கள் விட்டுச்சென்ற வரலாற்றுப் பதிவுகள்தான் ஒரு ஆபிரகாம் லிங்கன், மாட்டின்லூதர்கிங், அன்னை சரோஜினிதேவி, விஜயலட்சுமி பண்டிதை, அனிபெஸண்ட், அன்னை தெரேசா போன்ற பலர் உலகப் புகழ்பூத்தவர்கள். இவர்கள் நமக்கெல்லாம் வழிகாட்டிகள். மறைந்தும் மறையாத மகா மேதைகள். இப்படி வரலாறு போற்றும் பலர் கோடியில் ஒருவர். இப்பூமியில் ஒருவர். இவர்களைப் போன்றோர் முன்னுமில்லைப் பின்னுமில்லை. அவர்களின் பதிவுகளே கணிக்கப்பட்டன. இவ்வுரைகல்லில் இவர்களின் திருநாமங்கள் வரலாற்றையே கடந்தன. இப்படிக் கண்ணோடின் புதிய உலகத்தையே கட்டி எழுப்பிய சிற்பிகள் இவர்கள். அழிவுக்கு ஆதரவு செய்தோரை உலகமே மதிக்காது. ஆக ஆன்மீக நெறியில் இ∴து சாதனை. ஆக முன்னர் கூறிய.... ஒருவர் இனியும் பிறக்கலாம். ஒவ்வொரு கிராமந்தோறும் இவர்கள் வாழ்ந் திருக்கிறார்கள். முன்மாதிரியின் நடமாடும் மேலோரே இவர்கள். இதைக் கூறிவிட்டுப் பார்ப்பின் எவரும் பெரியவரில்லை. எவரும் சிறியரில்லை. எனச் சொன்னவர் தாயுமான சுவாமிகள்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனும்பெரிய
ஆப்தர் மொழி ஒன்று கண்டால்
அறிவு ஆவது ஏதுசில அறியாமைஏது இவை
அறிந்தார்கள் அறியார்கள்யார்?
மௌன மொடு இருந்தது ஆர்? என்போல் உடம்பு எலாம்
வாயாய்ப் பிதற்றுமவர் யார்?
மனது எனவும் ஒரு மாயை எங்கே இருந்துவரும்

வன்மையொடு இரக்கம் எங்கே?
புவனம் படைப்பது ஏன், கர்த்தவியம் எவ்விடம்
பூத பேதங்கள் எவ்விடம்
பொய் மெய் ஹிகம், அஹிதமே வரும்
நன்மை தீமையொடு
பொறை பொறாமை யும் எவ்விடம்?

எவர் சிறியர், எவர் பெரியர், எவர் உறவர், எவர் பகைவர்
யாதும் உனை அன்ற உண்டோ?
இக பரம இரண்டினிலும் உயிரினுக்கு உயிர் ஆதி
எங்கும் நிறைகின்ற பொருளே?
எங்கும் நிறைந்த பொருளே!

கர்த்தவியம்- செயல் என்னுடையது என்னும் எண்ணம். ஹிகம் அஹிதம் ஒத்தவை, ஒவ்வாதவை, ஆப்தர் இங்கே திருநாவுக்கரசு சுவாமிகள்.

இந்த நெறியிலே எங்கும் சமநிலை எடுத்தாளப்பட்டிருக்கிறது. இவ்வமைவில் இலட்சத்தி லொன்று கோடியில் ஒன்று, பற்றப் பட்டினத்துச் சுவாமிகள் என்ன கூறுகின்றார் எனப் பார்ப்போம்.

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

-திருஏகம்பமாலை 1

பொருள்- திருக்காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதனே, இல்லறத்தை நடத்துகிறவனைப் பார்க்கிலும், இல்லத்தை விட்டு நீங்கி, அப்பற்றை ஒழித்து, துறவொழுக்கத்தை மேற்கொண்டு வாழ்பவன் கோடிபங்கு மேம்பட்டவன். அவனைப் பார்க்கிலும் அகத்துறவு கொண்டவன், நூறு கோடி மடங்கு மேற்பட்டவன். அதர்மத்தை விட்டு ஒழிய, நன்னூற்களைப் பயின்று, சித் பொருளாகிய தேவரீருடன் விளங்கி, இருவகைத் துன்பங்களும் அற்று, நான் என்னும் முனைப்பை அழித்தவனது மாண்பை என்னவென்று கூறுவேன்.

இவ்வண்ணம் சீரியர் பெருமை பேசப்படுகிறது. இன்னும் மேல் நோக்கின் இராமகதையில் வரும் கதாபாத்திரம் சத்துருக்கினன். இவருடைய உதார குணம் மிகமிக மேன்மையானது. இராவணன் வதம் முடிந்தபின் இராகவன் அயோத்தி திரும்பும் வழியில் துர்வாசனின் ஆச்சிரமத்திற் தங்கி இருக்கிறான். பரதன் குறித்தபடி இராமன் வராவிடின் தீக்குளித்து இறப்பதுதான் அவனது முடிபு. தீ வளர்த்தாயிற்று. அத்தருணம் வந்துவிட்டது. இராமபிரான் அனுமனைத் தூதாக அனுப்புகிறான். இவ்வேளை அரசாட்சியைப் பொறுப்பேற்கும்படி வேண்டுகிறான் சத்துருக்கினன் விடை இதுதான்.

கானாள நிலமகளைக் கைவிட்டுப் போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி போனவர்கள் வரும் அவதி போயிற்று என்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும் ஒரு தம்பி அயலே நாணாது
யானாம்இவ் அரசாள்வேன்? என்னே இவ்வர சாட்சி இனிதே அம்மா?

-யுத்தகாண்டம் 224.

கருத்து: தான் மூத்த மகனாய்ப் பிறந்தும், தனக்குரிய நாட்டை தன் தம்பிக்கு என்று கைவிட்டுக் காட்டை ஆள்வதற்காக, பதினான்கு ஆண்டுகள் வனவாசம் சென்றவனாகிய இராமன் உடனிருந்து பாதுகாத்தற் பொருட்டு, அவன்பின்னே சென்ற இலக்குவனும் ஒரு தம்பிதான். காட்டுக்குச் சென்ற அந்த இரு சகோதரரும் மீண்டும் வருவதற்குரிய காலக்கேடு கடந்துவிட்டது என எண்ணி அமைதி கொள்ளாது துன்பம் அமைந்த இந்த உயிரை எரியில் வீழ்ந்தாடுதல் விட்டுவிடவேண்டும் என்று முயல்கின்ற இந்தப் பரதனும் ஒரு தம்பிதான்.

இவர்களுடன் பிறந்த மற்றொரு தம்பியாகிய நான் மாத்திரம் நாணமின்றி இந்த அரசை ஆளவேண்டுமாம். இவர்களெல்லாம் வெறுக்கின்ற அரசாட்சி எனக்குமட்டும் இனிதாய் அமையுமா. இனியென்னவாகும். இவ்வரசியல் எனச் சத்துருக்கினன் பதில் கூறுகையில் இராம தூதன் வந்துவிட்டதாகக் கதை பூர்த்தியாகிறது. பத்தாயிரம் பாடலுள்ள இராம கதையில் சத்துருக்கனின் குணசித்திரம் இப்பாடலால் வெளிப்படுத்தப்படுகிறது. எனவே சத்துருக்கினன் பெருமை சொல்லவும் அரிதே. எனவே இலக்கியகாரர் போற்றும் சத்துருக்கினன் போல நாம் வாழ்வோமாக. வாழ்ந்தும் காட்டுவோமாக. [illegible]களில் இதுவுமொன்றாம். சிந்தித்துச் சிறப்போமாக.

## வீடுதோறும் மூலிகைச் செடி அவசியம் தேவையா?

ஒரு வீடென்றால் முற்றத்தில் மூலிகைச் செடிகள் நட்டு வளர்க்க வேண்டும் என்று முன் தலைமுறைகளில் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வந்தனர். எந்த நோயுற்ற நிலைக்கும் முதலுதவிக்கு உதவுவது இதுபோன்ற மூலிகைகளே. ஆனால் குப்பிகளில் அடைத்து வரும் மருந்துகள் பெருகத் தொடங்கியதும் மூலிகைகளை மனிதன் மறந்துவிட்ட நிலை உருவானது.

நமது நாட்டில் பூஜைகளுக்காக உபயோகிக்கும் பூக்கள் மற்றும் இலைகள் எல்லாமே மருத்துவ குணங்கள் உடையவை. இவை எல்லாமே ஆயுர்வேத மருந்துகளில் சேர்க்கப்படுபவை. மேலும் நாட்டு வைத்தியத்தில் இவைகள் ஒற்றை மூலிகைகளாகப் பயன்படுத்துகின்றனர்.

வீட்டு முற்றத்தில் மிகப் பிரியத்துக்குரிய நந்தியார் வட்டம் பூக்களை யார்தான் விரும்பாமலிருக்க இயலும். இது விஷ்ணு சங்கர நாராயணன் சாஸ்தா என்ற தேவர்களுக்கு மிக விருப்பமான மருத்துவ குணமுடைய தாமரைப்பூ. விஷ்ணுவுக்கும் கிருஷ்ணனுக்கும் பிரியமானவை. இது சூரியனின் நாயகியல்லவா! தேவி பூஜைக்காகப் பயன்படுத்துவது செம்பருத்தி, சிவபூஜைக்கு குவளையும், துளசியும், இவை எல்லாமே மருத்துவ குணங்கள் நிறைந்தவை என்பது நிருபிக்கப்பட்ட உண்மை. சரும நோய்களுக்கு நவீன மருத்துவமே பரிந்துரை செய்வது வேப்பிலை. வேம்பு மாரியம்மனின் வாசஸ்தானம் என்பது நம்பிக்கை.

கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உத்தம மருந்தாகவே நந்தியார் வட்டம் வீட்டு முற்றத்தில் நட்டிருப்பது. கருப்பைக்கு உறுதியளிப்பது செம்பருத்தி. இதன் இலைகளை இடித்து பிழிந்து சத்தெடுத்து பெண்கள் இப்போதும் அருந்துகின்றனர். உட்புற சுரப்பிகளை சரிவர செயற்படச் செய்ய பிச்சிப்பூ சேர்ப்பதுண்டு என்று ஆயுர்வேதம் கூறுகின்றது.

தெற்றிப்பூ குழந்தைகளிலுண்டாகும் கரப்பனுக்கு விஷேச மருந்து. ஜீரணக் கோளாறுகளுக்கு துளசியிலையும் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு குவளையும் மிகச் சிறந்தவை.

எப்படியானாலும் ஒரு வீடானால் மூலிகைச் செடிகள் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று ஆசாரியர் விதித்தது வீண் வார்த்தைகளோ மூட நம்பிக்கையோ அல்ல.

*-ஓலைச்சுவடி-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் | | 5000. 00 |
| செ. சிவகுருநாதன் | ஈவினை | 500. 00 |
| ப. வல்லிபுரநாதன் புலவர் இல்லம் | உடுப்பிட்டி | 5000. 00 |
| க. சபாபதிப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| திரு சம்பந்தமூர்த்திமூலம் தாட்சாயினி ஞானகுரு கொழும்பு | | 9000. 00 |
| மேகநாதன் சிவனேசன் | புங்குடுதீவு | 1மூடை அரிசி |
| ஜலயா இளையதம்பி | புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 10000. 00 |
| அ. தில்லைநாதன் சிவன்வீதி | ஆவரங்கால் | 5000. 00 |
| சுதர்சன் ஹர்ஷன் | அச்செழு | 10000. 00 |
| சி. ஜீவரஞ்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| கனீந்திரன் ஹம்சா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வரலஷ்சுமி செல்வராஜன் | தெல்லிப்பழை | 1000. 00 |
| பொ. நடராசா | கனடா (ஆவரங்கால்) | 5000. 00 |
| வே. தில்லையம்பலம் வீரப்பதிராயன் | கரணவாய் | 1000. 00 |
| திருமதி இந்துமதி பாலகிருஷ்ணன் | கரணவாய் | 1மூடை சம்பா, 1000. 00 |
| செ. ரவீந்திரநாதன் கொட்டாஞ்சேனை | கொழும்பு | 5000. 00 |
| அபிராமி ரவீந்திரநாதன் | கொழும்பு | 5000. 00 |
| திரு ரவீந்திரநாதன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| Dr சத்தியமூர்த்தி குடும்பம் இராமலிங்கம்வீதி | திண்ணைவேலி | 2000. 00 |
| வே. ஸ்ரீதயாபரி திருவேரகம் | உடுப்பிட்டி | 4000. 00 |
| சோ. பரமநாதன் G.S | குப்பிளான் | 1000. 00 |
| மகேந்திரன் செந்தூரன் | சங்கரத்தை | 10கிலோ அரிசி |
| பரமகுருநாதன் பிரணவன் | கனடா | 20000. 00 |
| திரு சந்திரசேகரம் | திருநெல்வேலி | 1000. 00 |
| வ. சண்முகநாதமுதலி | சங்கானை | 5000. 00 |
| மோ. சேதனன், த. மிதுலன், த. தமிழினி | இமையாணன் உடுப்பிட்டி | 3000. 00 |
| திருமதி செல்வலட்சுமி நடேசன் | லண்டன் | 10000. 00 |
| T.K. பாலசுப்பிரமணியம் | பம்பலப்பிட்டி | 2000. 00 |
| திரு ஜெயக்குமார் | லண்டன் | 5000. 00 |
| மு.நா. கனகராசா உயிலங்குளம் | மன்னார் | 1மூடை அரிசி |
| வ. பாலசிங்கம் G.S | கரணவாய் | 2000. 00 |
| சிவநாதன் திருக்குமரன் | இணுவில் | 5000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| க. விஷ்ணுமோகன் | | உரும்பராய் கிழக்கு | 10000. 00 |
| த. சுஜந்தன் | | அவுஸ்திரேலியா | 2000. 00 |
| கு. முருகானந்தன்<br>சத்தியவாணி நந்தகுமார் | } | கனடா | 4000. 00 |
| சி. ஞானபாலன் | | பருத்தித்துறை | 3000. 00 |
| மதனதீபன் சர்மிளா | தோப்பு | அச்சுவேலி (கனடா) | 5000. 00 |
| க. திருலோகச்சந்திரன் | | தெகிவளை | 1000. 00 |
| த. கமலநாதன் | | உடுப்பிட்டி | 3000. 00 |
| பகீரதன் நளாயினி | | வறணி | 5000. 00 |
| திருமதி குணபூஷணி செல்வநாதன் | | ஜேர்மன் | 5000. 00 |
| நிறோஜா சத்தியசீலன் | மக்கள் வங்கி | யாழ்ப்பாணம் | 2500. 00 |
| உமா செல்வராஜா | யாமாவளவு | தெல்லிப்பளை | 3000. 00 |
| திருமதி இராசநாயகம் | | நீர்கொழும்பு | 2000. 00 |
| ஐயனார் கோயில் | | காரைநகர் | 3000. 00 |
| மாதர்க்கரசி பொன்னுத்துரை | | கொழும்பு | 1000. 00 |
| ம. சிவானந்தன் ஆசிரியர் | | நீர்வேலி | 500. 00 |
| ச. இராசசேகரம் | | நீர்வேலி | 500. 00 |
| V. ரவீந்திரன் | ரவி ஜுவலறி | வவுனியா | 10000. 00 |
| பிரகாஷ் ஆனந்தநாதர் | | உடுப்பிட்டி | 1000. 00 |
| S. அமுதலிங்கம் | | வல்வெட்டி | 5000. 00 |
| சு. கிருஷ்ணகோபால் | | வல்வெட்டி | 5000. 00 |
| A. இராஜரட்ணம் | | கொழும்பு- 6 | 1000. 00 |
| சிவதாசன் புவீந்திரா | | லண்டன் | 10000. 00 |
| சி. பார்க்கவிதேவி | | கொக்குவில் | 500. 00 |
| பொ. வியாகேசு | வடமராட்சி பிரதேச சபை தவிசாளர் | | 2000. 00 |
| அ. சாவித்திரியம்மா | | பருத்தித்துறை | 6000. 00 |
| ம. சுரேந்திரன் | | திருநெல்வேலி | 1000. 00 |
| சி. சிவநிதி சசிகலை குடும்பம் | | கொழும்பு | 6100. 00 |
| ஸ்ரீ கணேசமூர்த்தி நரேன் | | டென்மார்க் | 5000. 00 |
| இ. இந்திரலிங்கம் | மஞ்சத்தடிவீதி | இணுவில் | 1500. 00 |
| ஏகாந்தன் திருத்தேவி | | வல்வெட்டித்துறை | 500. 00 |
| அ. தனீஸ்வரன் | புத்தூர் கிழக்கு | புத்தூர் | 1000. 00 |
| கோப்பாய் சிவம் | | இணுவில் | 5000. 00 |
| இ. தவமணி வசந்தகிரி | | கரணவாய் | 4000. 00 |
| V. சிவஞானப்பிரகாசம் | | அவுஸ்திரேலியா | 6000. 00 |
| சி. வல்லிபுரம் | | தும்பளை | 1000. 00 |
| சி. நடராசா | | தாவடி 1மூடை அரிசி, | 1500. 00 |
| முருகேசு திலகநாதன் | | சுவிஸ் | 7000. 00 |
| சிவசண்முகநாதன் லிங்கேஸ்வரி | சுதுமலை வடக்கு | மானிப்பாய் | 4மூடை அரிசி |

(தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த வைகாசிப் பெருவிழா 2012

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வைகாசிப் பெருவிழாவானது வழமைபோன்று இவ்வருடமும் வைகாசி விசாக தினத்தையொட்டி 08.06.2012 வெள்ளிக்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற



பூசை வழிபாடுகளுடன் மிகவும் பக்திபூர்வ மாகவும் எளிமையாகவும் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் "திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கம்" என்னும் நூலை சிவ. ஆறுமுகசாமி அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து வைகாசிப் பெருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாயின.

நிகழ்வின் ஆரம்பத்தில் மானிட விடியற் கழகத் தலைவராக விளங்கும் சுகாதார வைத்திய அதிகாரி Dr நந்தகுமார் அவர்கள் தமது கழகத்தின் செயற்பாட்டினை கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதுடன் அதனை நடைமுறைப் படுத்துவதற்கு அனை வரும் ஒன்றிணைய வேண்டுமென்ற கோரிக்கை யினை முன்மொழிந்தார்.

இத்துடன் விழாவிற்கு சிறப்புரை ஆற்ற வருகை புரிந்த ஐ. சண்முகலிங்கம் அவர்கள் 16.05.1993ஆம் ஆண்டு தொடக்கம் வைகாசி மாதத்தில் வரும் விழா வானது தொடர்ந்து நடைபெற்று வருவது போற்றுதற்குரிய விடயம் எனவும் கூறியதோடு அன்றைய தினம் விழாவில் கலந்து கொண்ட அடியார்களுக்கு பயனடையக்கூடிய வகையில் பல கருத்துக் களையும் ஆச்சிரமம் ஆற்றி வரும் பணிகள் பற்றி முன்மொழிந்தார்.

மேலும் விழாவின் இறுதி நிகழ்வாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பணிகளில் ஒன்றாக வறுமைக்கோட்டிற்குட்பட்ட பாட சாலை மாணவியான செல்வி கஜேந்திரன் கஜனா என்பவருக்கு ஆச்சிரமத்தினால்



வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை மானிட விடியற் கழகத் தலைவர் Dr நந்தகுமார் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் இறுதியாக 63 நாயன்மார்களின் குருபூசை நிகழ்வுடன் விழா இனிதே நிறைவுற்றது.

வைகாசிப் பெருவிழாவிற்கு வருடாவருடம் பங்களிப்பினைச் செய்த பெருந்தகைகள் இவ்வருடமும் தங்களது பங்களிப்பை மிகவும் செம்மையாக நிறைவேற்றினார்கள்.

## ௨0௧௨ஆம் ஆண்டு வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வை. துரைராசா | ஒஸ்காலேன் | உரும்பராய் | 2500. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 3000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் | (செல்வம்ஸ்) சிவலிங்கப்புளியடி | யாழ்ப்பாணம் | 3500. 00 |
| மகாராணி புடவையகம் | பெரியகடை | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வ. இராசையா | கேணியடி | திருநெல்வேலி | 1000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | | நீர்வேலி | 1000. 00 |
| Dr சி. இராசலிங்கம் | இளை. வைத்தியப் பொறுப்பதிகாரி | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் | மாலிசந்தி | அல்வாய் | 1500. 00 |
| ஐ. சண்முகலிங்கம் | ஆசிரியர் கரணவாய் | கரவெட்டி | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 1000. 00 |
| Dr E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | மயிலியதனை | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் | லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | | ஆவரங்கால் | 2000. 00 |

**வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கிய அன்பர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

-ஆறுமுகநாவலர்-

## 4. சிவமூலமந்திர இயல்

**36. சைவசமயிகள் நியமமாகச் செபிக்க வேண்டிய சிவமூல மந்திரம் யாது?**

ஸ்ரீ பஞ்சாக்ஷரம். (திருவைந்தெழுத்து)

**37. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபம் செய்வதற்கு யோக்கியர் ஆவார் யாவர்?**

மதுபானமும், மாமிச போசனமும் இல்லாதவராய் ஆசாரம் உடையவராய், சிவதீக்ஷை பெற்றவராய் உள்ளவர்.

**38. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திலே எத்தனை உரு நியமமாகச் செபித்தல் வேண்டும்?**

நூற்றெட்டு உருவாயினும், பத்து உருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும்.

**39. எந்தத் திக்குமுகமாக இருந்து செபித்தல் வேண்டும்?**

கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருந்து செபித்தல் வேண்டும்.

**40. எப்படி இருந்து செபித்தல் வேண்டும்?**

முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடத்தொடையின் உள்ளே வலப்புறங்காலை வைத்து, இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த, நிமிர்ந்து கொண்டு, செபித்தல் வேண்டும்.

**41. எப்படி இருந்து செபித்தல் ஆகாது?**

சட்டை இட்டுக்கொண்டும், தலையிலே வேட்டி கட்டிக்கொண்டும், போர்த்திக் கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், பேசிக்கொண்டும், இருளில் இருந்து கொண்டும் செபித்தல் ஆகாது.

**42. செபம் செய்யும்பொழுது மனம் எங்கே அழுந்திக்கிடத்தல் வேண்டும்?**

சிவபெருமான் இடத்திலேயே அழுந்திக் கிடத்தல் வேண்டும்.

**43. நிற்கும் பொழுதும், நடக்கும் பொழுதும், இருக்கும் பொழுதும், கிடக்கும் பொழுதும், மற்றை எத்தொழிலைச் செய்யும் பொழுதும் மனசை எதிலே பதித்தல் வேண்டும்?**

உயிருக்கு உயிராகிய சிவபெருமானுடைய திருவடிகளிலே மனசைப் பதித்தல் வேண்டும்.

**44. மரிக்கும் பொழுது எப்படி மரித்தல் வேண்டும்?**

வேறு ஒன்றிலும் பற்று வையாது, சிவபெருமான் இடத்திலே பற்று வைத்து, தமிழ் வேதத்தைக் கேட்டுக்கொண்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டும் மரித்தல் வேண்டும்.

## 5. நித்திய கரும இயல்

**45. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?**

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை விட்டெழுதல் வேண்டும். (விடியல் 04.00மணி)

**46. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?**

விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு, பாடல்களைப் படித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல சல மோசனம்

**47. அதற்குப் பின் யாது செய்யத் தக்கது?**

மலசல மோசனம் செய்யத் தக்கது.

**48. எவ்விடத்திலே மலசலம் கழித்தல் வேண்டும்?**

திருக்கோயிலுக்குத் தூரமாய் உள்ள தனி இடத்திலே மலசலம் கழித்தல் வேண்டும்.

**49. எவ்விடங்களிலே மலசலம் கழித்தல் ஆகாது?**

வழியிலும், குழியிலும், நீர் நிலையிலும், நீர்க்கரையிலும் கோமயம் உள்ள இடத்திலும், சாம்பர் உள்ள இடத்திலும், சுடுகாட்டிலும், பூந்தோட்டத்திலும், மரநிழலிலும், உழுத நிலத்திலும், அறுகம்புல் பூமியிலும், பசு மந்தை நிற்கும் இடத்திலும் புற்றிலும், அருவி பாயும் இடத்திலும், மலையிலும் மலசலம் கழித்தல் ஆகாது.

**50. எந்தத் திக்கு முகமாக இருந்துகொண்டு மலசலம் கழித்தல் வேண்டும்?**

பகலிலே வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும் இருந்துகொண்டு மலசலம் கழித்தல் வேண்டும்.

**51. எப்படி இருந்து மலசலம் கழித்தல் வேண்டும்?**

தலையையும் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி, மூக்கு நுனியைப் பார்த்துக்கொண்டு, மௌனமாக இருந்து, மலசலம் கழித்தல் வேண்டும்.

## சௌசம் (சுத்தம்)

**52. மலசலம் கழித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?**

எழுந்து, சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு, சௌசம் செய்தல் வேண்டும்.

**53. சௌசம் எப்படிச் செய்தல் வேண்டும்?**

மண்ணுஞ் சலமுங் கொண்டு, இடக் கையினாலே குறியில் ஒரு தரமும், குதத்தில் ஐந்து தரத்துக்கு மேலும், இடக்கையை இடையிடையே ஒவ்வொரு தரமும் பின்னும் இடக் கையைப் பத்துத் தரமும், இரண்டு கையையும் சேர்த்து ஏழு தரமுஞ் சுத்தி செய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால் வரையும், கைகளை முழங்கை வரையும் ஒவ்வொரு தரம் கழுவல் வேண்டும்.

**54. இப்படிச் செய்த பின் யாது செய்தல் வேண்டும்?**

அவ்விடத்தை விட்டு வேறொரு துறையிலே போய், வாயையும் கண்களையும் நாசியையும் காதுகளையும் கை கால்களில் உள்ள நகங்களையும் சுத்தி செய்து, எட்டுத்தரஞ் சலம் வாயிற் கொண்டு, இடப்புறத்திலே கொப்பளித்தல் வேண்டும்.

**55. வாய் கொப்பளித்த பின் யாது செய்தல் வேண்டும்?**

தலைக்கட்டு இல்லாமல் மூன்று தரம் ஆசமனஞ் செய்தல் வேண்டும். (ஆசமனம்- நீர் உறிஞ்சுதல்)

**56. ஆசமனம் எப்படிச் செய்தல் வேண்டும்?**

வலக்கையை விரித்துப் பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்துவிட்டு, பெருவிரல் அடியிற் சார்ந்த உழுந்து அமிழ் அளவு சலத்தை ஆசமித்தல் வேண்டும்.

**57. சௌசத்துக்குச் சமீபத்திலே சலம் இல்லையானால் யாது செய்தல் வேண்டும்?**

பாத்திரத்திலே சலம் மொண்டு, ஓரிடத்தில் வைத்துக்கொண்டு, மலசலங் கழித்து, சௌசஞ் செய்து விட்டு, பாத்திரத்தைச் சுத்தி செய்து, சலம் மொண்டு, வாய் கொப்பளித்துக், கால் கழுவல் வேண்டும்.

**58. சௌசத்துக்குப் பின் யாது செய்யத் தக்கது?**

தந்த சுத்தி செய்யத் தக்கது.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

உயர்திரு: கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

## விரதம்:

விரதங்களைக் கடைப்பிடித்தலும் ஒரு தனிக் கிரியையாகவே விளங்கிற்று. சிவபெருமான், சக்தி, கணபதி, கந்தன் ஆகியோரைக் குறித்து மேற்கொள்ளப்படும் விரதங்கள் பல உள. விரதமும் ஒரு வகைத் தவமாகவே விளங்குகிறது. தவம் மேற்கொள்பவன் போன்று விரதம் அனுட்டிப்பவனும் சமய நூல்கள் விதிக்கும் நியமநிட்டைக்ளைக் கடைப்பிடிப்பவன். தவஞ் செய்பவன் கடும் நிபந்தனைகளை மேற்கொள்கிறான். விரதம் பூணுபவர்களுக்குரிய கட்டுப்பாடுகள் இலேசானவை. சாதாரண நிலையிலுள்ள மக்கள் உடலுறுதியும் உள உறுதியும் பெருமளவிற்கு இல்லாதவர்களாயினும் விரதநெறியைச் சுலபமாகக் கடைப்பிடிக்கலாம். தவம் போன்று இடையீடின்றி தொடர்ச்சியாக விரதம் மேற்கொள்ள வேண்டியதன்று. விரதம் உரிய காலங்களில் மேற்கொள்ளப்படுவது. விரதம் பற்றிக் கூறும் நூல்கள் நியமங்களைக் குறிப்பிட்டுள்ளன. இம்முறையினுக்கு அமையவே விரதம் நிறைவேற்றப்படல் வேண்டும். ஆண்டுக்கொரு முறை நிகழும் விரதங்கள் சில. சில மாதந்தோறும் நிகழ்வன. இரு வாரங்களுக்கு ஒரு முறையும், வாரந்தோறும் கடைப்பிடிக்கவேண்டிய விரதங்களும் பல இருக்கின்றன.

விரதம் வீட்டில் நிகழும் கிரியை. விரதங் கடைப்பிடிப்பவர் ஊன் உறக்கம் முதலியவற்றை மட்டுப் படுத்துபவர். இது வீட்டில் நிகழ்வதால் சிறு திருவுருவங்களைப் புதிதாக அமைத்து நிறுவிப் பூசிப்பர். விரதந் தொடங்கும் வேளையே இவ்வுருவங்கள் அமைக்கப்படுவன. பெரும்பாலும் மண்ணாலமைக்கப்படும் இவ்வுருவங்கள் விரத முடிவில் புண்ணிய தீர்த்தங்களிற் சேர்ப்பிக்கப்படும்.

விரதம் எனும் சொல் **கட்டளை, ஆணை, விருப்பம், ஒழுக்கம்** எனப் பலவாறு பொருள்படும். தூய்மையான சூழ்நிலையில் பக்தியை அடிப்படையாகக் கொண்டு கடைப்பிடிக்கப்படுவது விரதம். இது மனதிற் கொண்ட சங்கற்பத்தின் தொடர்ச்சியாக நிகழ்வது. உணவு முதலிய இந்திரிய நுகர்ச்சிகளைத் துறப்பது இதன் முக்கிய அம்சம். மனதைச் செம்மைப்படுத்தியவர்கள்தாம் இதைக் கடைப்பிடிக்கத் தகுதி வாய்ந்தவர். மனத் துணிவும் உறுதியுங் கொண்டோர்க்கே இம்முறை ஏற்புடையது. இங்கு உடல், உள்ளம் என்னும் இரண்டுங் கட்டுப்படுகின்றன. இவ்விரதங்களும் இருவகைப்பட்டன. இவற்றுள் **காமிய** விரதம் ஒரு குறிக்கோளை அவாவிக் கொள்ளப்படுவது. **நிஷ்காமிய** ஒரு பெறுபேற்றையுஞ் சிறிதேனுங் கருதாது மேற்கொள்ளப்படுவது. இவ்விரதங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய வேளைகள் பஞ்சாங்கத்தில் காணப்படுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கூறும் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு விரதங்களை மேலும் விளக்க எழுந்த நூல்கள் பல. இவற்றுள், **ஹேமாத்திரி** இயற்றிய **சதுர்வர்க்ய சிந்தாமணி** என்னும் நூலும் பிரசித்தி வாய்ந்தவை. இவ்விரு நூல்களிலும் புராணங்களிலிருந்து பல பகுதிகள் மேற்கோள்களாக எடுத்தாளப்படுகின்றன. பெண்கள் விரதங்கள் மேற்கொள்ளலாம் என இந்நூல்கள் கூறுகின்றன. சில விரதங்கள் பெண்கள் மட்டும் மேற்கொள்ள வேண்டியவை.

வருணாச்சிரம தர்மங்களுக்கு ஏற்ப ஒழுகுதல், அகத்தூய்மை, அழுக்காறொழித்தல், சத்தியம், உயிர்கள் மேல்அன்பு ஆகியவற்றை விரதம் மேற்கொள்பவன் கடைப்பிடித்தல் வேண்டும். நம்பிக்கை கொள்ளல், பாவச் செயல்களில் வெறுப்பு, படாடோபம்- வீண்பெருமை ஆகிய இரண்டினையும் ஒழித்தல் ஆகியன இவனிடம் காணப்படவேண்டிய பண்புகள். விரதங்கொள்பவனுக்கு இன்றியமையாத நிலைக்களனாய் விளங்குவன உறுதியான பக்தியும் சிரத்தையுமாம். பொறுமை- உண்மை, கொடை, தூய்மை, புலனடக்கம், உயிர்வதை செய்யாமை, அவாவின்மை முதலியன இவனுக்கு இன்றியமையாதன. **பூஜை, எரிஓம்பல், ஜபம், ஹோமம்** முதலிய விரதங்களில் இடம்பெறுவன. உடற்கட்டுப்பாடு, உடலுக்குச் சுகத்தைத்தரும். இன்பங்கள் யாவற்றையும் துறத்தல், வெறுந் தரையிற் கிடத்தல், உறக்கம் துறத்தல் முதலியன விரதங்களுக்குத் தக்கவாறு வெவ்வேறளவில் விதிக்கப்பட்டுள்ளன.

விரதங்களில் **உபவாசம்** மேற்கொள்ள வேண்டிய நிலையும் நேரிடும். உபவாசம் உணர்த்துங் கருத்து பொருளாழம் நிறைந்தது. உபவாசம் கடைப்பிடிப்பவர் சிறிதளவேனும் உணவு உட்கொள்ளார். வழிபடுந் தெய்வத்துடன் நெருங்கிய தொடர்பூண்டு. மிக அண்மையில் இருந்து வழிபடுவதனால் இது உபவாசம் எனப்படலாயிற்று. உபவாச நிலையில் இருப்பவன் தெய்வத்தைப் பற்றிய சிந்தனையில் சதா ஈடுபட்டுத் தெய்வத்தை நெருங்கித் தொடர்பு கொண்டவேளை ஊண் உறக்கம் முதலியவற்றின் நினைவை அறவே இழந்து விடுவன். இவ்வேளைகளில் இவ்விரண்டும் தேவைப்படா. இவ்வடிப்படைக் கருத்தையிழந்து, உண்ணாதிருத்தல் என்னுங் கருத்தினை மட்டும் உணர்த்தி உபவாசம் எனுஞ் சொல் மக்களிடைப் பெரிதும் வழங்கிவரக் காண்கிறோம். இதனால் உபவாசம் என்பது காலப்போக்கில் ஊண்துறத்தல் என்னும் கருத்துடைய சொல்லாக ஆகிவிடுகிறது.

பல் துலக்குதல், அடிக்கடி நீர் பருகுதல், தாம்பூலந் தரித்தல், பகலில் நித்திரை கொள்ளல், இல்வாழ்க்கை, இன்பந்துய்த்தல் முதலிய எல்லா விரதங்களிலும் கட்டாயமாகத் தடுக்கப்பட்ட செயல்களாம். குருவின் அனுமதியின் பேரில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்படலாம். விரதம் கடைப்பிடிக்கும் வேளை விதிகளை மீறுவோர்க்குப் பிராயச்சித்த வடிவமான கடுந் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரது பார்வையில் "குரு" ஒரு நோக்கு

திரு ஆ. மகேசு அவர்கள்

குரு என்பதற்கு ஆழமான, கனதியான, மேன்மைச் சிறப்புடைய பொருளுண்டு. பொதுவாக மாந்தரிடமுள்ள அறியாமையை நீக்குபவர் குரு எனக் கொள்ளலாம். இன்று நாம் இருபத்தோராம் நூற்றாண்டிலே, கணனி யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாளுக்குநாள் பலவாறான விஞ்ஞானப் புதுமைகளை அறிந்து கொண்டிருக்கின் றோம். உலகமடங்கிலும் நடந்தேறுகின்ற அரசியல் மாற்றங்கள், போரியல், பூகம்பம், நில அதிர்வுகள், சுனாமித் தாக்கங்கள் எனப் பல்வேறுபட்ட செய்திகளையும் ஊட கங்கள் மூலம் தெரிந்து கொண்டிருக் கின்றோம்.



இதனாலே மக்களது வாழ்க்கை யிலே அமைதி, சாந்தம், மகிழ்ச்சி, பொறுமை, புரிந்துணர்வு போன்ற மனித விழுமியங்களைக் காணமுடிவதில்லை என்ன காரணம்? "நன்றும் தீதும் பிறர் தர வாரா" என்பதற்கமைய ஒருவன் மகிழ்ச்சியாகவும், துன்பமாகவும் இருப் பதற்கு அவன் காரண கர்த்தாவாக இருக் கின்றான் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. இவையெல்லா வற்றிற்கும் மனிதனது அறியாமையே காரணமாக அமைந்துள்ளது.

ஆக; இந்த அறியாமையை மக்களிடமிருந்து நீக்க முதன்மையாளராக இருப்பவர் குரு. ஆலயங்களிலே பூசை செய்பவர்களையும், பாடசாலைகளிலே கற்பிக்கும் தொழிலை மேற்கொண்டிருப்பவர்களையும் பொதுவாகக் "குரு" என நாம் அழைக்கின்றோம். பாடசாலைகளிலே கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களிடத்தேயிருக்கும் அறியாமையை நீக்கி அறிவினைப் புகட்டுகின்றனர். ஆலயக் குருமார் தாம் செய்கின்ற பூஜை முதலிய கிரியைகளோடு, மக்களிடத்தே பாவம் எது? புண்ணியம் எது? செய்யக்கூடியது எது? செய்யக்கூடாதது எது? என எடுத்தியம்பி, அவர்களை நல்வழிப்படுத்தி ஆன்மீகப் பாதையில் வழிநடாத்தும் கைங்கரியங்களிலே ஈடுபட்டுவருகின்றார்கள்.

ஆயினும் மேற்கூறப்பட்ட இருபாலாரும் தத்தமது கடமைகளை ஒழுங்காக, சீராகச், செம்மையாக, அடுத்தவர் மனம் குன்றாவண்ணம் செய்து வருகின்றார்களா? என்பது ஆய்வுக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பாடசாலைகளிலே கற்பிக்கும் ஆசிரியர்களை குருவாக மதிக்கும் மனோபாவம் அருகி வருகின்றது. இவ்வாறே ஆலயக் குருமார்களையும் மக்கள் மதித்து, மரியாதை செய்யும் மனப்பக்குவம் குறைவாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில்தான் சுவாமி விவேகானந்தர் "குரு"என்பதற்குத் தரும் விளக்கத்தைச் சிறிது எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒவ்வொரு ஆன்மாவும் பூரணத்துவம் எய்த வேண்டுமென்பது நியதி. ஒவ்வோர் உயிரும் இறுதியில் அந்த நிலையை அடைந்தே தீரும். முன்பு இருந்த நிலை அல்லது நினைத்த எண்ணங்களின் விளைவே நாம் இப்போதுள்ள நிலை. எதிர் காலத்தில் நாம் எப்படி இருப்போம் என்பது இப்போது நாம் செய்யும் காரியங்களையும் எண்ணும் எண்ணங்களையும் பொறுத்தது. அதனால் நாம் வெளியிலிருந்து உதவிபெற முடியாது என்பதில்லை.ஆன்மாவின் சாத்தியக் கூறுகள் எப்போதும் புற உதவியினால் விரைவு பெறுகின்றன. எனவே வெளியிலிருந்து வரும் விரைவு படுத்தும் தூண்டுதல்களினால் நம்மிடம் மறைந்துள்ள ஆற்றல்கள் செயற்படுகின்றன. அதனால் வளர்ச்சி தொடங்குகின்றது. ஆன்மீகவாழ்வு பிறக்கின்றது. கடைசியில் மனிதன் புனிதமடைகின்றான் பூரணத்துவம் எய்துகின்றான்.

வெளியிலிருந்து வருகின்ற இந்த விரைவுபடுத்தும் தூண்டுதல் நூல்களிலிருந்து கிடைக்க முடியாது. ஓர் ஆன்மா மற்றோர் ஆன்மாவிலிருந்துதான் தூண்டுதல் கிடைக்கும். வாழ்நாள் முழுவதும் நாம் நூல்களைப் படிக்கலாம். பேரறிஞர்களாகத் திகழலாம்.ஆனால் நம்மிடம் ஆன்மீகம் என்பதே முளைவிடவில்லையென்பதை கடைசியில் காண்போம். ஒருவனுக்குக் கூர்மையான அறிவுவளர்ச்சி இருந்தாலும் ஆன்மீகதாகமும் இருக்கும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

அறிவை வளர்த்துக்கொள்ள நாம் நூல்களிலிருந்து உதவிபெறலாம்.ஆனால் இதனை ஆராய்ந்து பார்த்தால் நம்மறிவுக்கு உதவிகிடைக்கின்றதே தவிர ஆன்மாவிற்கு அல்ல என்பது தெரியவரும். அதனால்தான் நாம் எல்லோரும் ஆன்மீக விஷயங்களைப்பற்றி மிக அழகாக பேச முடிகிறதே தவிர, அதற்கு வேண்டிய தகுதி மிகவும் குறைந்தவர்களாகவே இருக்கின்றோம். எனவேதான் நமக்குத் தேவைப்படும் தூண்டுதலை நூல்கள் தரமுடியாது என்பது நிருபணமாகின்றது.ஆன்ம வளர்ச்சிக்கான அந்தத்தூண்டுதல் இன்னோர் ஆன்மாவிலிருந்து தான் வரவேண்டும். எந்த ஆன்மாவிலிருந்து இந்த தூண்டுதல் வருகின்றதோ, அவரே குரு, ஆசிரியர். எந்த ஆன்மா தூண்டப்படுகின்றதோ அவரே சீடன் அல்லது மாணவன்.

இவ்வாறு தூண்டுவதற்கு முதலாவதாக யார் தூண்டுகின்றாரோ, அவரிடம் அதற்கான சக்தி இருக்கவேண்டும். தம்மிடம் இருக்கும் ஆற்றலை மற்றொருவருக்குப் பாய்ச்சும் சக்தியை அவர் பெற்றிருக்கவேண்டும். இரண்டாவதாக, பெறுபவரும் அதைப் பெறுவதற்கு தகுதியானவராக இருக்க வேண்டும். விதை உயிருள்ளதாக இருக்க வேண்டும். நிலமும் நன்கு உழப்பட்டுத் தயாராக இருக்க வேண்டும். இந்த இரண்டு நியதிகளும் நிறைவேறும் போது அற்புதமான ஆன்மீக் வளர்ச்சி ஏற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகத்தை தேடும் ஆன்மாவின் ஈர்ப்புச்சக்தி முதிர்ந்து நிறைந்திருக்கும்போது, அந்த ஈர்ப்பின் வசப்பட்டு அருள்புரியும் சக்தி வந்தேயாக வேண்டும். ஆயினும் வழியில் பல பேராபத்துக்கள் குறுக்கிடும். மனதில் தோன்றும் தற்காலிக உணர்ச்சிப் பெருக்கை உண்மையான ஆன்மீக தாகம் எனத்தவறாக நினைப்பதற்கு வாய்ப்புண்டு. நம் வாழ்க்கையில் இப்படி நிகழ்வதைச் சில வேளைகளில் கண்டிருக்கிறோம். நாம் நேசிக்கும் ஒருவர் திடீரென இறந்து விடுகின்றார் என வைத்துக் கொள்வோம். அந்தக் கணம் நாம் பலத்த ஓர் அடி விழுந்ததாக உணர்கின்றோம். உலகமே நம் காலடியிலிருந்து நழுவுகின்றது என நினைக்கிறோம். உடனே ஏதோ உயர்ந்த ஒன்றை நாடவேண்டும் என விரும்புகின்றோம். ஆன்மீக வாழ்வில் ஈடுபட முடிவு செய்கின்றோம். ஆனால் இந்த மனவெழுச்சி சில நாட்களுக்கு மட்டும்தான். இதனையே "சுடலைஞானம்" என்பார்கள். இப்படித்தவறாக எண்ணும் வரை உண்மையான ஆன்மீகதாகம் ஏற்படாது. அதனைத் தணிக்கின்ற குருவையும் நாம் காணமுடியாது.

இந்நிலையில் உண்மையான குருவை எப்படி அறிவது? முதலாவதாகச் சூரியனைக்காண விளக்கொளி தேவையில்லை. சூரியன் உதயமாகும்போது நாம் அதனை இயல்பாக உணர்ந்து கொள்கின்றோம். அதுபோல குரு என்பவர் வரும்போது, அவர் உண்மையானவர் என்பதை மனம் தானாகவே உணர்ந்து கொள்கின்றது. உண்மை தன் சொந்த ஆதாரங்களின் மீதே நிற்கின்றது. உண்மைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. அது சுய ஒளி கொண்டது. பிரபஞ்சம் முழுவதும் எழுந்து நின்று "இது உண்மை" என்பதைப் பறை சாற்றுகின்றது.

தொடரும்....

# சரஸ்வதியே

**ஆலமிலை யமுதுண்டருள் புரியும்**
**ஆறுமுகனின் அருளாட்சிப் பரப்பில்**
**ஞாலத் திருவருளாய் ஆயகலைகள்**
**அறுபத்து நான்கையு மருளிச்**
**சீலமுறவைத்துச் சைவத்தின் மிகத்தொன்மைச்**
**சான்றுகள் அழியாது காக்கும் சரஸ்வதியே!**
**மூலவரான செல்வச் சந்நிதியான் அருள்**
**மேன்மேலும் பெருக அருள்வாய்!**

-இராம ஜெயபாலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*காடர்கரி காலர்கனல் கையர்அனல்*
*மெய்யர் உடல் செய்யர் செவியில்*
*தோடர்தெரி கீளர்சரி கோவணவர்*
*ஆவணவர் தொல்லைநகர்தான்*
*பாடலுடையார்கள் அடியார்கள் மல*
*ரோடுபுனல் கொண்டு பணிவார்*
*வேடமொளியான பொடிபூசி இசை*
*மேவு திரு **வேதிகுடியே***

*திருஞானசம்பந்தர் தனது தேவாரப் பதிகங்களில் சிவபெருமானுக்குச் சூட்டி அழைத்த பெயர்கள் பலப்பல. தாழும் அருளாளர் (எளி வந்து அருள்பவர்), இருளாளர் மிடறர் (கருமையான தொண்டை கொண்டவர்), இரவாளர் (பிச்சை எடுப்பவர்), திருமார்பில் விரி நூலர் (ஒளிமிக்க முப்புரிநூலாம் பூணூல் அணிந்தவர்), வரி தோலர் (புலித்தோலை உடையவர்) இவை மட்டுமா? வேதிகுடி பதிகத்தில் வரும் நான்காம் பாடலில் இன்னும் எத்தனை பெயர் கொண்டு அழைத்து மகிழ்கிறார் பாருங்கள்! காடர் (சுடுகாடர்), கரிகாலர் (யானைக்கு எமனானவர்), கனல் கையர் (கையில் நெருப்பைத் தாங்கியவர்), அனல் மெய்யர் (நெருப்பு போன்ற உடல் கொண்டவர்), உடல் செய்யர் (செந்நிற மேனி படைத்தவர்), செவியில் தோடர் (தோடு அணிந்தவர்), சரி கோவணர் (சரிந்த கோவணம் தரித்தவர்),*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணவர் (பசுமீது வருபவர்)...... அப்பப்பா எத்தனை எத்தனை திருநாமங்கள்!

நந்திதேவரின் திருமணத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் இருந்தபோதும், திருமணத்தை நிறைவேற்றி வைக்கவேண்டிய வேதியர்கள் மட்டும் உரிய நேரத்தில் வந்து சேரவில்லை. அனைவரும் சற்றே பதட்டமடைந்திருந்தவேளை, ஆசுறுதியாக ஒரு வேதியர் கூட்டமே வந்திறங்கியது **வேதிக்குடியிலிருந்து**. "ஆச்சு... வேதியர்கள் வந்தாச்சு...." என அனைவரும் மகிழ்ந்தனர். ஜே..... ஜே..... என திருமணமும் நிறைவேறியது.

திருவையாறு ஏழூர்த் தலங்களுள் (திருவையாறு உட்பட திருப்பழனம், திருச்சோற்றுத்துறை என) திருவேதிகுடி நான்காவது ஸ்தலம். தஞ்சாவூர்- திருவையாறு பாதையில் திருக்கண்டியூறுக்குக் கிழக்கே 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது **திருவேதிகுடி**. மிகச் சிறிய அழகிய கிராமம். கிராமத்தின் நடுவே திருக்கோயில் மூன்று நிலைகளுடனான சிறிய கிழக்குப் பார்த்த ராஜகோபுரம். சாதாரணமாகக் கோபுர வாசலில் காணப்படுகின்ற மண்டபம் எதுவும் இங்கில்லை. கோபுர அடிப்பகுதி புல்லும் புதருமாக மண்டிக் கிடக்கிறது. கோபுரத்தின் எதிரே- வெளியே நந்தியும் பலிபீடமும் சற்றுத்தள்ளியே உள்ளது. எமது வலது கைப்பக்கமாக தெற்குப் பார்த்தபடியாக அம்பாள் திருக்கோயில் தெரிகிறது. அதற்கும் ராஜகோபுரத்திற்கும் இடையே தெற்கு வாசல் கொண்ட ஒரு மண்டபம். இதையே வசந்த மண்டபம் என்கிறார்கள். கோபுர தரிசனத்தை முடித்து உள்ளே நுழைகிறோம்.

இறைவன்: ஆராவமுதர், வேதபுரீஸ்வரர், வாழைமடுநாதர், செல்வப்பிரான்

இறைவி: மங்கையற்கரசி

தலமரம்: வில்வம்

தீர்த்தம்: வேததீர்த்தம்

தல விநாயகர்: வேதவிநாயகர்

முதற்பிரகாரத்தை வலம் வருகிறோம். மூலவருக்கு சரி பின்னால் சுப்பிரமணியர் சந்நிதியைத் தொடர்ந்து பெருமாள், மகாலெட்சுமி, சந்நிதிகளைக் கடந்து வடக்குச் சுற்றுக்குத் திரும்புகிறோம். 108 சிவலிங்கங்கள், வடகிழக்கு மூலையில் நடராஜர் சபை, கிழக்குச் சுற்றில் மீண்டும் லிங்கங்கள், தொடர்ந்து சூரிய நமஸ்காரத்துடன் பிரகார வலம் நிறைவடைகிறது. ஏனைய திருக்கோயில்களைவிட சற்றே வித்தியாசமாக, தென்சுற்றில் உள்ள பக்கவாட்டு வழியாக மகாமண்டபத்தினுள் நுழைகிறோம். இந்த மண்டபத்திலேயே தல விநாயகரான வேதவிநாயகர் குடிகொண்டுள்ளார். இறைவன் கூறும் நான்கு வேதங்களையும் நன்கு செவிமடுக்கும் பாணியில் மூலவருக்கு நெருக்கமாக, வலது காலை ஊன்றி- இடது காலை சற்றே உயரத் தூக்கியபடி கோலாலமாகக் காட்சி தருகிறார். ஊரின் பெயர் **திருவேதிகுடி**. ஈசன் பெயர் **வேதபுரீஸ்வரர்**. தலவிநாயகர் பெயர் வேதவிநாயகர். தீர்த்தம் **வேத தீர்த்தம்**. பெயர்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையை வாசக அன்பர்கள் கவனிக்க வேண்டும். அர்த்த மண்டபத்தில் துவார பாலகர்களை வணங்கி உள்ளே நோக்கினால் அருள்மிகு வேதபுரீஸ்வரர் லிங்கத் திருவுருவாக அற்புதத் தோற்றம் தருகிறார் வட்ட வடிவமான ஆவுடையார். உருத்திராட்சம் தரித்த லிங்கபாணம். நிறைந்த அலங்காரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருவேதிகுடி மகாதேவர்" எனக் கல்வெட்டுக்களிற் குறிப்பிடப்படும் வேதிகுடி ஐயனை- ஆராவமுதனை நெஞ்சார வழிபடுகிறோம். மூலவர் சந்நிதியைவிட்டு வெளியே வந்து கோஷ்ட மூர்த்தங்களைத் தரிசிக்கும் நோக்கில் மீண்டும் ஒருமுறை பிரகாரத்தை வலம் வருகிறோம். தட்சணாமூர்த்தி கல்லால மரத்தின் கீழமர்ந்து ஞான சொருபியாகத் தரிசனம் தருகிறார். மேற்குக் கோஷ்டத்தில் அர்த்த நாரீஸ்வரரும், வடக்குக் கோஷ்டத்தில் பிரம்மாவும், துர்க்கையும் காட்சிதர, தனிச் சந்நிதியில் சண்டிகேஸ்வரர் வீற்றிருக்கிறார். சண்டிகேசர் அருகே ஸ்தல விருட்சமான வில்வமரம் கிளைபரப்பி நிற்கிறது.

வேதிகுடி பிரமன் பூசித்த தலம். வேதி- பிரமன். அதனால் **"வேதிகுடி"** எனப் பெயரும் வந்தது. வேதிகுடி ஈசனும் "வேதபுரீஸ்வரர்" எனப் பொதுவாக அழைக்கப்பட்டபோதும், "ஆராவமுதர்"- செல்வப்பிரான் எனும் பெயர்களும் நாவுக்கரசரின் தேவாரப்பதிகங்களில் பல இடங்களிலும் காணப்படுகிறது.

வேதிகுடி பதிகத்தின் இரண்டாவது பாடல், "......செய்த்தலை வாளைகள் பாய்ந்துகளும் திருவேதிகுடி அத்தனை **"ஆராவமுதனை"** நாமடைந்து ஆடுதுமே" என்கிறார். அதே பதிகத்தின் ஏழாவது பாடலில் "செல்வப்பிரான்" எனக் குறிப்பிடுகிறார்.

ஊர்ந்த விடையுகந்து ஏறிய செல்வனை நாம் அறிவோம்
ஆர்ந்த மடமொழி மங்கையொர் பாக மகிழ்ந்துடையான்
சேர்ந்த புனற்சடைச் **செல்வப் பிரான்**திரு வேதிகுடிச்
சார்ந்த வயலணி தண்ணமு தையடைந்து ஆடுதுமே

இவற்றைவிட இறைவனின் சிவலிங்கத் திருமேனி வாழைமடுவில் உற்பத்தியானதால் **"வாழைமடுநாதர்"** எனும் திருப்பெயரும் உண்டு எனவும் ஒரு அர்ச்சகர் கூறினார்.

நாம் கோயிற் தரிசனத்திற்காகச் சென்ற நாள் ஓர் அற்புதமான திருமணநாள். ஒரு பக்கத்தில் திருமணத்திற்காக மணமகனையும் பெண்ணையும் அழைத்து வருவதைப் பார்க்கிறோம். மறுபக்கம் புதுமண ஜோடி பிரகாரத்தினை வலம் வருவதைக் காண்கிறோம். திருவேதிகுடி திருமண பிரார்த்தனைத் தலம். திருஞானசம்பந்தர், வேதிகுடி பதிகத்தின் பல இடங்களில் ஆணும் பெண்ணும் இணைபிரியாமை பற்றிப் பாடியுள்ளார். முதற் பாடலில் "இணைவாளை மடுவில் வேறுபிரியாது விளையாட......" என்கிறார். நீர்நிலைகளில் ஜோடி பிரியாமல் வாளை மீன்கள் விளையாடுகின்றனவாம். மூன்றாம் பாடலில் "மாதர் இமையோர்" எனும் சொற்பதம் பாவிக்கிறார். "தேவர்கள் எல்லோரும் தத்தமது தேவியருடன் வேதிகுடி வந்தனர்" என்கிறார். ஏழாவது பாடலில் சிறப்பாக, "கன்னியரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பி அருமங்கலம் மிக மின்னியலும் நுண்ணிடை நன் மங்கையர் இயற்று பதி" என்கிறார். "நல்ல திருமணத்தை நாடுகின்றவர் வந்து திருமண மங்கலச் சடங்குகளைச் செய்கின்ற ஊர்" இந்த ஊராம். இன்றைக்கும் இந்த உண்மையைக் கண்ணாரக் காண முடிந்தது. எனவே "திருவேதிகுடி திருமணத்தலம்" என்பது ஆயிரம் முறையும் பொருத்தமான வாசகங்களே. திருவேதிகுடி வேதபுரீஸ்வரரைப் பிரார்த்தித்துக் கொண்டால் தடைப்பட்ட திருமணங்கள் தடங்கள் இன்றி நடைபெறும் என்பதிலும், நீண்ட மங்கலமான தாம்பத்யம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் என்பதிலும் அவ்வூர் மக்கள் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கோயில் சிறியது. மக்கள் கூட்டமும் பெரிதாகக் குறிப்பிடக் கூடியதாக இல்லை. இருந்தும் மிகுந்த அக்கறையோடு ஈசனை அலங்கரித்துள்ள அர்ச்சகரும் உண்மையில் வணக்கத்திற்குரியவரே. ஒரு காலத்தில் மிகப் பிரபல்யமாகவிருந்த இத் திருக்கோயில், இப்போது வளம் குன்றி, மக்கள் வரவுமின்றி இருக்கும் நிலைபற்றி மிக்க மனவருத்தத்தோடு அந்த அர்ச்சகர் நம்மோடு உரையாடினார்.

மூலவர் உட்பட எமது பிரகார தரிசனம் முடிந்ததும், "வாருங்கள்! அம்பாள் சந்நிதி போவோம்" என அதே அர்ச்சகர் நம்மைக் கோபுர வாயில் தாண்டி வெளியே அழைத்து வருகிறார். நாம் ஏற்கனவே கூறிய "வசந்த மண்டபம்". தாண்டி அம்பாள் சந்நிதிக்கு வருகிறோம். அம்பிகைக்கு "மங்கையர்க்கரசி" எனும் திருப்பெயருடன் "மடமொழி மங்கை" என்றும் "மடமங்கை" என்றும் திருநாமங்களுமுண்டு. சந்நிதி தெற்கு நோக்கியது. முன் மண்டபத்தில் லிங்கங்கள். கருவறையில் நான்கு திருக்கரங்களுடன் சற்றே பெரிய உருவ அமைப்பில் அருள்மிகு "மங்கையர்க்கரசி" அருள் பாலிக்கிறார். திருமுகத்தில் அன்பும் அழகும் பொங்கி வழியும் அம்பிகையை நெஞ்சார வணங்கி வெளியில் வருகிறோம்.

இந்த தலத்தில் நந்திதேவர், மார்க்கண்டேயர், குபேரன் முதலானோர் வழிபட்டதாகவும், பிரம்மனும், சூரியனும் இங்கு தவஞ்செய்து பேறுகள் பல பெற்றுக் கொண்டதாகவும் கோயிற் குறிப்புக் கூறுகிறது. ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் 13,14,15ஆகிய தேதிகளில் திருவேதிகுடியில் நடைபெறும் சூரியபூசை மிக விசேடமானதுடன்- சூரியன் இங்கு தவஞ் செய்து பேறுகள் பல பெற்றமையையும் அத்தாட்சிப்படுத்துவதாகவும் இப்பூசை நிகழ்வு அமைந்துள்ளது.

"நஞ்சு அமுதாக முன் அயின்றவர்" என்று பாடினார் ஞானசம்பந்தர். "எம் மேலை வினை கழித்தான்" என்றார் நாவுக்கரசர். ஆலகால விடத்தை உண்டு அதையே அமுதமாக மாற்றிய சிவனார், நம் எல்லா வினைகளையும் போக்கி அருள்வார் எனும் நம்பிக்கையுடன் ஆராவமுதரையும்- மங்கையர்க்கரசியரையும் கைதொழுது விடை பெறுகிறோம்.

திருவேதிகுடி எல்லையிலே அனைவரையும் வரவேற்ற வேதபுரீஸ்வரரும் மங்கையர்க் கரசியாரும் ஊருக்குள் அனைவரையும் அழைத்துப் போய்- உணவளித்து- சற்றே ஓய்வுபெற்ற பின்னர் ஏழூர்த் தலங்களில் 5ஆவது தலமான **"திருக்கண்டியூர்"** நோக்கி ஊர்வலம் நகர்ந்தது. தொடர்ந்து செல்வது நமக்குச் சற்றே சிரமமாகவிருப்பினும் [illegible]கள்! அவர்களின் பின்னே நாமும் பயணிப்போம்......

"மையணிகண்டன் மறைவிரி நாவல் மதித்துகந்த
மெய்யணி நீற்றன் விழுமி[illegible]டையான்
செய்ய கமலம் மணங்கமழும் **திருவேதிகுடி**
ஐயனை ஆராவமுதினை நாமடைந்து ஆடுதுமே"

-அப்பர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

**06.07.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "என்னை விழுங்கி"

வழங்குபவர் :- சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்

[ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை]

---

**13.07.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மானிட வாழ்வும் மகோற்சவமும்"

வழங்குபவர் :- யாழ் சின்மய நிறுவனத்தின் பிரம்மசாரி ஜாக்கிரத் சைதன்யா சுவாமி அவர்கள்

---

**20.07.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**27.07.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆடிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- சைவப்புலவர் திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி கௌரி சுரேசன் அவர்கள்

[ஆசிரியர்]

**175ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/22/NEWS/2012

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org